## கொழும்புப் பல்கலைக்கழகம்
## இலங்கை

# ஆண்டறிக்கை
# 2010

## எமது நோக்கு

"அறிவு, கல்வி, ஆராய்ச்சி
மற்றும்
தொழில்முயற்சி ஆகியவற்றுக்கிடையில்
கூட்டு ஆற்றல்களைக் கட்டியெழுப்பி,
பிராந்திய மற்றும் சர்வதேச புகழ் பெற்ற
உன்னத
மையமாகத் திகழ்வதற்கு அயராது
முயற்சி செய்தல்"

## எமது பணி

“உயர் தரங்களும் சமூகப் பொறுப்பும்
கொண்டவர்களாக புத்தாக்க
எண்ணத்துடனும் சுதந்திரமான
சிந்தனையுடனும் பகுப்பாய்வுத்
திறன்களுடனும் தேசிய
அபிவிருத்திக்குப் பங்களிக்கும்
அறிவாளிகளின் தொகுதியொன்றை
உருவாக்கும் ஈடுபாட்டுக்
கட்டுப்பாட்டைக் கொண்டதாக
கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும்
உன்னத மையமாக விளங்குதல்”

# 3. உபவேந்தரின் மீளாய்வு:

**உபவேந்தரின் அறிக்கை**



2010ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். முதன்மையானதும் அதி உன்னதமானதுமான தலைநகரில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனமாகிய இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பதவியை ஏற்றதன் பின்னர் நான் சமர்ப்பிக்கும் மூன்றாவது அறிக்கை இதுவாகும். இங்கு சுமார் 10,000 பட்டதாரி மாணவர்களும் 25,000 பட்டப் பின் கற்கை மற்றும் விரிவாக்கக் கற்கை நெறி மாணவர்களும் உள்ளனர்.

கொழும்புப் பல்கலைக் கழகம் 2010ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலைத்தளத் தரப்படுத்தலில் இலங்கையில் முதலாவதாகவும் தெற்காசியாவில் 13ஆவதாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆளுகை அதிகார சபையாகிய பேரவையின் மிகச்சரியான முகாமைத்துவத் தீர்மானங்கள், அதி உயர் கல்விசார் அதிகார சபையாகிய மூதவையினால் வழங்கப்பட்ட கல்விசார் பணிப்புகள், கல்விசார், கல்விசார் ஆதரவு நிர்வாக மற்றும் ஏனைய பணியாளர்களின் அயராத கடின உழைப்பு, பட்டக் கற்கை மற்றும் பட்டப் பின் கற்கை ஆகிய இரண்டு மட்டங்களிலும் மாணவர்களின் செயலாற்றம் ஆகியவற்றின் விளைவாகவே இது சாத்தியமானது.

தெற்காசியாவிலும் உலகளாவிய ரீதியிலும் அதன் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் மேலும் கடினமான பிரயத்தனம் மேற்கொள்ளவேண்டியுள்ளது. எமது குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதை நோக்கி மேலும் முன்னேறுவதற்கு கொள்கைகள் மற்றும் உபாயத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல், ஒழுங்கான செயலாற்ற மதிப்பீட்டுச் சட்டகத்தை அமைத்தல் மற்றும் தர உத்தரவாத செயற்பாடுகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் ஆகியவை முக்கியமான அம்சங்களாகும்.

பல்கலைக் கழகத்தில் கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் ஏனைய தொடர்பான செயற்பாடுகளுக்கு மிகவும் உகந்த சூழல் நிலவுகின்றது. கல்விசார் பிணைப்புகளையும் தொடர்பான கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் சுமார் பதினான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. தேறுதல் பயிற்சிக்கூறு மாற்றத்தின் கீழ் கணிசமான எண்ணிக்கையான வெளிநாட்டு மாணவர்கள் எமது பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ளதுடன் எமது மாணவர்கள் பல்வேறு வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் இணைந்தும் உள்ளனர். நூற்று முப்பத்தாறு (136) கல்விசார், கல்விசார் ஆதரவு, தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகளைப் பெற்றனர்.

மாணவர்கள் கல்விசார் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, விளையாட்டுகள், விவாத அரங்குகள், கவின்கலை போன்ற இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளிலும் சமுதாய அடிப்படையிலான விரிவாக்க நிகழ்ச்சித் திட்டங்களிலும் மிகுந்த ஈடுபாட்டைக்கொண்டிருந்தனர். பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கொழும்புப் பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையும் அனைத்து விளையாட்டுச் சம்பியனாகத் திகழ்ந்தது. எமது மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் விளையாட்டுகள் மற்றும் விவாத அரங்குகளில் பங்குபற்றினர்.

விரிவாக்கத்துக்குப் போதிய காணி இல்லாமை மற்றும் இன்றியமையாத புதிய கட்டிடத் தேவைகளுக்கு நிதி ஏற்பாடுகள் போதாமை பல்கலைக்கழகத்தின் துரித அபிவிருத்தியைச் தடைசெய்தது.

இந்த சந்தர்ப்பத்திலே பேரவை, மூதவை, பதில் பதிவாளர், நிதியாளர், கல்விசார், நிர்வாக மற்றும் பல்கலைக்கழகத்தின் ஏனைய எல்லா பணியாளர்களுக்கும் எனது நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் ஒத்துழைத்த பட்டதாரி மாணவர்களுக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.



பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புறேகம
உபவேந்தர்
ஏப்ரல் 2010

2010ஆம் ஆண்டின் முனையம்சங்கள்

1. கொழும்புப் பல்கலைக்கழகம் 2010ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலைத்தளத் தரப்படுத்தலில் இலங்கையில் முதலாவதாகவும் தெற்காசியாவில் 13ஆவதாகவும் தரப்படுத்தப்பட்டது.

2. 2011-2015 வரையான காலப்பகுதிக்கான செயலாற்ற மேம்பாட்டு உபாயத்திட்டம் (கூட்டிணைத் திட்டம்) வகுக்கப்பட்டது.

3. நூற்று முப்பத்தாறு (136) கல்விசார், கல்விசார் ஆதரவு, தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகளைப் பெற்றனர்.

4. பிணைப்புகளையும் கல்விசார் அபிவிருத்திகளையும் வலுப்படுத்துவதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் பதினான்கு (14) புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

5. கலாசாரத் தொடர்புகளுக்கான இந்தியப் பேரவையுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்திய லக்னோவ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மனோஜ் குமார் அகர்வாள் முதலாவது வருகை தரும் பேராசிரியராக பொருளியல் துறையில் இணைந்துகொண்டார்.

6. கொரியக் குடியரசின் கின்ஜு தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கிம் ஜே ஹோ ஒரு வருட காலத்துக்கு கமநலத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தில் இணைந்துள்ளார்.

7. பூட்டானைச் சேர்ந்த பத்து மாணவர்கள் மருத்துவப் பட்டம் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

8. அவுஸ்திரேலிய லா றோப் பல்கலைக் கழகத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பத்து (10) மாணவர்களுக்கான இடப்படுத்தல்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

9. லா றோப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சட்ட பீடத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

10. ஜேர்மனி, கீசன் ஜுஸ்ரஸ் லீபிக் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று (03) பேர் ஆங்கிலத் துறையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

11. ஜுஸ்ரஸ் லீபிக் பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு (02) பேர் திரும்பியுள்ள அதேவேளை, மேலும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று (03) பேருக்கான இடப்படுத்தல்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

12. எரமஸ் முன்டுஸ் தொகுதி - 2 என்னும் ஆசியப் பிராந்திய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐந்து புலமைப்பரிசில்களுக்கான இறுதித் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

13. ஐக்கிய இராச்சிய துர்ஹாம் பல்கலைக்கழகத்தின் மூன்று தொகுதி பட்டதாரி மாணவர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாத காலப்பகுதிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

14. ஒத்துழைப்புக்கான விடயப்பரப்புகள் பற்றி ஆராய்வதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல தூதுக்குழுக்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு விஜயங்களை மேற்கொண்டன. அவுஸ்திரேலிய லா றோப் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்க மிசிகன் அரச பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம் பிளைமௌத் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சிய துர்ஹாம் பல்கலைக்கழகம், ஜேர்மனி லீபிக் பல்கலைக்கழகம் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

15. இரண்டு சீன மாணவர்கள் சிங்களத் துறையில் ஒரு வருடத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

16. உபவேந்தர் நேபாள திரிபுவான் பல்கலைக்கழக வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பட்டமளிப்புப் பேருரையை நிகழ்த்தினார்.

17. ஜப்பானில் அமைந்துள்ள முகாமைத்துவக் கல்லூரிகளின் ஒப்புதல் பெற்ற குழுமமாகிய வணிகக் கல்வி மற்றும் புலமைப்பரிசில் கூட்டமைப்பின் முகாமைத்துவ, நிதிப்பீடத்துக்கான உறுப்புரிமை கிடைத்தது.

18. முகாமைத்துவ நிதிப் பீடத்தில் மூலதனச் சந்தை தகவல் மையம் தாபிப்பு.

19. நேபாள லும்பினி மருத்துவக் கல்லூரியின் தூதுக்குழுவொன்று லும்பினி மருத்துவக் கல்லூரியை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.

20. இலங்கையில் முதன்முறையாக பேராசிரியர் மந்திக விஜேரத்ன மற்றும் அவரது குழுவினரால் ஈரல் மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

21. பல்கலைக்கழக உளநலப் பிரிவுக்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் சுகாதார முதன்மைநிலை விருது வழங்கப்பட்டது.

22. உலகளாவிய சுகாதாரம் பற்றிய சர்வதேச மகாநாட்டை பொது சுகாதார ஆசிய பசுபிக் கல்விசார் கூட்டமைப்பு மற்றும் மருத்துவ பீடம் ஆகியவை கூட்டாக ஒழுங்குசெய்தன.

23. மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.ஜே. பெரேரா மற்றும் டாக்டர் பி. கலப்பத்தி ஆகியோர் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மருத்துவக் கல்வியில் அதிசிறந்த சுவரொட்டிக்கான முதல் பரிசைப் பெற்றனர்.

24. டாக்டர் ஷாலினி சிறிரங்கநாதன், டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் டாக்டர் பி.யூ.எஸ்.எச்.பெனரகம ஆகியோர் தாய்வான் தாய்பேயில் நடைபெற்ற சிறுவர் நல ஆராய்ச்சிக்கான ஆசிய சங்கத்தின் ஆறாவது பேராண்மைக் கழகத்தில் அதிசிறந்த சுவரொட்டி விருதைப் பெற்றனர்.

25. டாக்டர் சி.அரம்பேபொல மற்றும் டாக்டர் டெவ்லீகர் ஆகியோருக்கு குறைந்த-நடுத்தர வருமான நாட்டிலிருந்து மகப்பேற்று பெண்நோயியல் சர்வதேச சஞ்சிகைக்கு சிறந்த பிணி ஆய்வு கட்டுரையை எழுதியமைக்காக ‘‘ஜோன் ஜே.சியாறா ஐஜேஜீஓ விருதுப்பத்திரம் வழங்கப்பட்டது.

26. விஞ்ஞான பீடத்தில் சுற்றாடல் விஞ்ஞானத்தில் இளமாணி விசேட பட்டம் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்.

27. புத்தள என்னுமிடத்தில் விஞ்ஞான கல்விக்கூடம் ஒன்றைத் தாபித்தல் தொடர்பான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## உள்ளடக்கம்


**1. மேல்நோக்கு**

1.1 பேரவை 7
1.2 மூதவை 8
1.3 கூட்டங்கள் 11
1.4 ஒட்டுமொத்த செயல் நிறைவேற்றம் 12

2. பீடங்கள், வளாகங்கள், நிலையங்கள் மற்றும் அலகுகள் 13
2.1 கலைப்பீடம் 13
2.2 கல்விப் பீடம் 17
2.3 பட்டக் கற்கைகள் பீடம் 25
2.4 சட்ட பீடம் 29
2.5 முகாமைத்துவ நிதிப்பீடம் 34
2.6 மருத்துவ பீடம் 38
2.7 விஞ்ஞான பீடம் 45
2.8 ஸ்ரீ பாளி வளாகம் 51
2.9 கொழும்பு பல்கலைக்கழக சமூக நீடிப்பு நிலையம் (CUCEC) 53
2.10 பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC) 56
2.11 மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR) 58
2.12 தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (NEREC) 65
2.13 உடற்கல்வி நிலையம் 67
2.14 சுகாதார நிலையம் 68
2.15 நூலகம் 69
2.16 தொழில் வழிகாட்டல் அலகு 75

**3. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு மேல்நோக்கு** 77
3.1 பட்டதாரி மாணவர் உள்ளெடுப்பு 77
3.2 2010இல் நடத்தப்பட்டபட்டப்பின் மற்றும் முதுமாணிப் பரீட்சைகள் 81
3.3 கல்விசார் பணியாளர்கள் விபரம் 83
3.4 கல்விசாரா பணியாளர்கள் விபரம் 86
3.5 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் 90
3.6 தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்புகள் 91
3.7 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 92
3.8 பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் 93
3.9 நீடிப்புக் கற்கை நெறிகள் 95

**4. பயிற்சியும் அபிவிருத்தியும்** 96
**5. கிடைத்த விருதுகள் பற்றிய விபரங்கள்** 98
5.1 பல்கலைக்கழக ஆராய்ச்சி விருதுகள் 99
**6. சர்வதேச தொடர்புகள்** 100
**7. மாணவர் நலன்புரி** 102
**8. பராமரிப்பு** 105
**9. நிதியும் கணக்கீடும்** 109
நிதியியல் கருத்துகள் - 2010 111
நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள் 118
நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து 130
கணக்காய்வு அவதானிப்பு பற்றிய அறிக்கை - 141

## மேல் நோக்கு

### 1.1 பேரவை

1985ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகப் பேரவை அமைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் ஆளுகை அதிகார சபையான பல்கலைக்கழகப் பேரவை (பதவிவழித் தலைவராக) உபவேந்தரை உள்ளிட்ட ஸ்ரீ பாளி வளாக முதல்வர், ஏழு பீடங்களின் பீடாதிபதிகள், (எல்லாமாக ஒன்பது (9) பதவி வழி உறுப்பினர்கள்), முதவையின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பன்னிரண்டு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது. 2010ஆம் ஆண்டில், அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது:

| **பதவி வழியாக** | | |
|---|---|---|
| | **தலைவர் : உபவேந்தர்** | பேரா. ஷானிகா ஹிரிம்புரேகம |
| | **முதல்வர், ஸ்ரீ பாளி வளாகம்** | கலா. ரியுடர் வீரசிங்க |
| | **பீடங்களின் பீடாதிபதிகள்** | |
| | • கலை | பேரா. இந்திரலால் த சில்வா |
| | • கல்வி | பேரா. எஸ். சுந்திரசேகரம் - 2010.07.31 வரை<br>பேரா. எம்.இ.எஸ். பெரேரா - 2010.08.02 முதல் |
| | • சட்டம் | திரு. என். செல்வக்குமாரன் |
| | • முகாமைத்துவமும் நிதியும் | கலா. பீ.எஸ்.எம். குணரத்ன |
| | • மருத்துவம் | பேரா. எச்.ஆர். செனவிரத்ன |
| | • விஞ்ஞானம் | பேரா. ரி.ஆர். ஆரியரத்ன |
| | • பட்டப்படிப்புகள் | பேரா. கே.எஸ். சுந்திரசிறி |

| **ஏனையோர்** | | |
|---|---|---|
| | **முதவையால் தெரிவு செய்யப்பட்டவர்கள்** | |
| | பேரா. எம்.எச்.ஆர். ஷெரிப் - 2010.08.08 வரை | |
| | பேரா. நயனி மெலேகொட | |
| | | |
| | **பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டவர்கள்** | |
| | • திரு. ராஜன் ஆசீர்வாதம் | |
| | • திரு. கே. கனக-ஈஸ்வரன் | |
| | • திரு. செல்லையா தங்கராஜா | |
| | • வித்தியாநிதி கலா. என்.ஆர். த சில்வா | |
| | • திரு. எச்.எம்.என். வரகாஉல்ல | |
| | • திரு. பீ.டபிள்யு. சேனாரத்ன | |
| | • திரு. மஹிந்த ராஜபக்ஷ | |
| | • திரு. சி. மால்லியத்த | |
| | • திரு. திலக் கருணாரத்ன | |
| | • கலா. குடா விஜேரத்ன – 2009.04.29 முதல் | |
| | • பேரா. ஜே. திலகசிறி – 2009.04.29 முதல் | |
| | • திருமதி எல். த சில்வா சந்திரசேன – 2009.05.05 முதல் | |
| | | |
| | **செயலாளர் : பதிவாளர்** | |
| | • திரு. டி.பீ.எல்.ஜே. நாணயக்கார (பதில்) 2010.03.17 வரை<br>• திரு. பீ.எம்.எஸ். பண்டார (பதில்) 2010.04.26 முதல்<br>• திரு. ரீ.எல்.ஆர். சில்வா (பதில்) 2010.10.26 முதல் | |

## 1.2 மூதவை

பல்கலைக்கழக மூதவையானது, 1985ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2)ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 46(2)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில் மூதவை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது:

| | |
|---|---|
| **பதவி வழியாக** | |
| **தலைவர் - உபவேந்தர்** | பேரா. ஷானிக்கா ஹிரிம்புறேகம |
| **முதல்வர், ஸ்ரீ பாளி வளாகம்** | கலா. ரியுடர் வீரசிங்க |
| **பீடங்களின் பீடாதிபதிகள்** | |
| • கலை | பேரா. இந்திரலால் த சில்வா |
| • கல்வி | பேரா. எஸ். சந்திரசேகரம் - 2010.07.31 வரை<br>பேரா. எம்.இ.எஸ். பெரேரா - 2010.08.02 முதல் |
| • சட்டம் | திரு. என். செல்வக்குமாரன் |
| • முகாமைத்துவமும் நிதியும் | கலா. பீ.எஸ்.எம். குணரத்ன |
| • மருத்துவம் | பேரா. எச்.ஆர். செனெவிரத்ன |
| • விஞ்ஞானம் | பேரா. ரி.ஆர். ஆரியரத்ன |
| • பட்டப்படிப்புகள் | பேரா. கே.எஸ். சந்திரசிறி |
| **நிறுவனங்களினதும் கல்விக்கூடத்தினதும் பணிப்பாளர்கள்** | |
| • சுதேச மருத்துவ நிறுவகம் | கலா. ஆர்.ஏ. ஜயசிங்க |
| • மனிதவள முன்னேற்ற நிறுவகம் | கலா. டபிள்யு.கே. ஹிரிம்புறேகம |
| • மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | பேரா. எம்.எச்.ஆர். ஷெரி∴ப் |
| • தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகம் | திரு. உபாலி அமரசிறி |
| • உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் | பேரா. கே.எச். தென்னக்கோன் |
| • கமத்தொழில்நுட்ப, கிராமிய விஞ்ஞான நிறுவகம் | கலா. மகேஷ் எதிரிசிங்க (பதில்) |
| • கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்விக்கூடம் | கலா. ருவன் வீரசிங்க - 2010.05.22 வரை<br>பேரா. ஜீ.என். விக்ரமநாயக்க - 2010.05.23 முதல் |
| **துறைகளின் தலைவர்கள்** | |
| • கணக்கீட்டியல் | திரு. ஜி. ரணவீரகே |
| • உடலமைப்பியல் | கலா. வி.எச்.டபிள்யு. திசாநாயக்க |
| • உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் | பேரா. ஜே. வெலிஹிந்த - 2010.05.02 வரை<br>பேரா. சீ.பீ.டி.டபிள்யு. மெதிவ் - 2010.05.03 முதல் |
| • வியாபாரப் பொருளியல் | கலா. எச்.என்.பீ. ஜயசிங்க<br>பேரா. எச்.டி. கருணாரத்ன - 2010.05.13 முதல் |
| • இரசாயனவியல் | பேரா. கே.ஆர்.ஆர். மஹனம |
| • பிணி ஆய்வு மருத்துவம் | கலா. சேனக்க ராஜபக்ஷ - 2010.02.17 வரை<br>பேரா. கே.எஸ்.ஏ. ஜயசிங்க |
| • வணிகமும் நிதியும் | திரு. டி.எம்.எஸ். தசநாயக்க |
| • சமூக மருத்துவம் | கலா. எம்.டபிள்யு. குணதுங்க - 2010.07.10 வரை<br>பேரா. ஆர்.டி.ஏ. செனவியத்ன |
| • குடிச்சரிதவியல் | திரு. டபிள்யு.பீ. அமரபந்து - 2010.08.20 வரை<br>கலா. எஸ். உக்வத்த - 2010.09.09 முதல் |
| • பொருளியல் | பேரா. எம்.டி.ஏ.எல். ரணசிங்க |
| • கல்வி உளவியல் | கலா. டபிள்யு. சந்திரதாச |
| • ஆங்கிலம் | பேரா. நெலுகா சில்வா |
| • சட்ட மருத்துவம், நஞ்சியல் | கலா. புத்திக வீரசுந்தர |
| • புவியியல் | திரு. டபிள்யு.என். வில்சன் |
| • வரலாறு | கலா. டி.என்.என்.ஆர். தீவசிரி - 2010.08.01 முதல் |
| • சர்வதேச உறவுகள் | பேரா. நயனி மெலேகொட - 2010.08.01 முதல் |
| • வரலாறு மற்றும் சர்வதேச உறவுகள் | பேரா. நயனி மெலேகொட - 2010 ஜூலை வரை |
| • மனிதவள முகாமைத்துவம் | கலா. என்.என்.ஜே. நவரத்ன - 2010.05.09 வரை<br>கலா. பவித்ரா கைலாசபதி - 2010.05.13 முதல் |
| • மானுடவியல் கல்வி | திரு. டி.ஆர். அதுகோரல - 2010.05.31 வரை<br>பேரா. எம்.ஈ.எஸ். பெரேரா - 2010.08.01 வரை<br>திரு. எல்.எம். கபில பண்டார - 2010.08.02 முதல் |
| • வர்த்தகச் சட்டம் | திருமதி. டபிள்யு.ஐ. நாணயக்கார |
| • தனியார், ஒப்பீட்டுச் சட்டம் | பேரா. ஷர்யா ஸ்கானிவேல் |
| • பொதுச் சர்வதேசச் சட்டம் | திரு. வீ.ரி. தமிழ்மாறன் |
| • முகாமைத்துவ, நிறுவனக் கற்கைகள் | கலா. (திருமதி) கே. திசாநாயக்க |
| • சந்தைப்படுத்தல் | கலா. எம்.பீ.பீ. தர்மதாச |
| • கணிதவியல் | கலா. ஜே.கே. விஜேரத்ன |
| • நுண்ணுயிரியல் | பேரா. ஜெனிபர் பெரேரா |

| | | |
|---|---|---|
| | • அணுக்கரு விஞ்ஞானம் | கலா. எஸ். குலதுங்க |
| | • மகப்பேற்றியலும் பெண்நோயியலும் | பேரா. சி. ரந்தெனிய |
| | • குழந்தை மருத்துவம் | கலா. ஷம்யா த சில்வா - 2010.11.14 வரை<br>பேரா. மனோரி சேனநாயக்க - 2010.11.15 முதல் |
| | • ஒட்டுண்ணியியல் | பேரா. என்.டி. கருணவீர |
| | • நோயியல் | பேரா. எம்.வி.சி. த சில்வா - 2010.08.20 வரை<br>பேரா. எம்.டி.எஸ். லொகுஹெட்டி - 2010.08.23 முதல் |
| | • மருந்தியல் | பேரா. ஆர். பெர்னான்டோபுள்ளே - 2010.03.31 வரை<br>பேரா. குசும் த எப்ரிவ் - 2010.04.01 முதல் |
| | • பௌதீகவியல் | கலா. எஸ்.ஆர்.டி. ரோஸா |
| | • உடற்றொழிலியல் | கலா. மங்கலா. குணதிலக |
| | • தாவர விஞ்ஞானம் | கலா. ரி.டி. சில்வா |
| | • அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும் | கலா. எஸ்.ஐ. கீதாபொன்கலன் |
| | • உளவியல் மருத்துவம் | கலா. டி.ஆர்.சி. ஹங்வெல்ல |
| | • விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி | திரு. என்.வி. கருணசேன |
| | • சிங்களம் | பேரா. எல்.ஏ.டி.ஏ. திஸ்ஸ குமார - 2010.04.25 வரை<br>அருட். அகலகட சிறிசுமன தேரோ - 2010.04.26 முதல் |
| | • சமூக விஞ்ஞானக் கல்வி | கலா. ஏ.ஏ. ஜயவர்தன |
| | • சமூகவியல் | பேரா. சசங்க பெரேரா |
| | • புள்ளிவிபரவியல் | கலா. டபிள்யு.என். விக்கிரமசிங்க - 2010.02.28 வரை<br>கலா. (திருமதி) எம்.டி.ரி. ஆட்டிகல - 2010.03.01 முதல் |
| | • அறுவை மருத்துவம் | பேரா. டி.என். சமரசேகர |
| | • விலங்கியல் | கலா. என். பெல்லவத்த |

**பேராசிரியர்கள் : 1985 இன் 07ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2) (ஏ) பிரிவின்கீழ்.**

| | |
|---|---|
| | • பேரா. பி.எம்.ஆர். பர்னாந்துபுள்ளே |
| | • பேரா. சி.பி.டி.டபிள்யு. மத்தியூ |
| | • பேரா. சந்திரிகா விஜேரத்ன |
| | • பேரா. டி.எம்.எஸ்.எஸ்.எல். திசாநாயக்க |
| | • பேரா. டி.என். சமரசேகர |
| | • பேரா. டி.ரி.யு. அபேதுங்க |
| | • பேரா. டி.யு.ஜே. சொன்னதர |
| | • பேரா. துலிதா பர்ணாந்து - 2010.09.30 வரை |
| | • பேரா. இ.டி. த சில்வா |
| | • பேரா. எச்.டி. குணவர்தன - 2010.09.30 வரை |
| | • பேரா. எச்.எம். சேனநாயக்க |
| | • பேரா. எச்.ஆர். செனவிரத்ன |
| | • பேரா. ஹேமமாலி பெரேரா |
| | • பேரா. ஜே. உயங்கொட |
| | • பேரா. ஜெனிபர் பெரேரா |
| | • பேரா. ஜே.கே.டி.எஸ். ஜயனெத்தி |
| | • பேரா. கே.ஏ.பி. சித்திசேன |
| | • பேரா. கே.ஆர்.ஆர். மகானாம |
| | • பேரா. கே.எம்.என். த சில்வா |
| | • பேரா. கே.எஸ். சந்திரசிறி |
| | • பேரா. கே.எஸ்.ஏ. ஜயசிங்க |
| | • பேரா. கமனி எச். தென்னக்கோன் - 2010.02.09 வரை |
| | • பேரா. எல்.ஏ.டி.ஏ. திஸ்ஸ குமார |
| | • பேரா. லக்சிரி பர்ணாந்து - 2010.09.30 வரை |
| | • பேரா. எம்.டி.பி. த கொஸ்தா |
| | • பேரா. எம்.எச்.ஆர். ஷெரிஃப் |
| | • பேரா. எம்.எம்.ஆர்.டபிள்யு. ஜயசேகர |
| | • பேரா. எம்.வி.சி. த சில்வா |
| | • பேரா. மனோரி சேனநாயக்க |
| | • பேரா. நதிரா கருணாவீர |
| | • பேரா. நாலக மெண்டிஸ் |
| | • பேரா. நயனி மெலேகொட |
| | • பேரா. நெலுஃபர் த மெல் |
| | • பேரா. ப்ரீதிகா அங்குணவெல |
| | • பேரா. பி.வி. ரந்தெனிய |

| | |
|---|---|
| | • பேரா. ஆர். பர்ணாந்து |
| | • பேரா. ஆர்.எல். ஜயகொடி |
| | • பேரா. ஆர்.எல்.சி. விஜேசுந்தர |
| | • பேரா. ரோஹினி ஹேவமான்ன |
| | • பேரா. ரோலன்ட் அபேபால |
| | • பேரா. எஸ்.ஏ. நோபேட் |
| | • பேரா. எஸ். ரோஹினி த ஏ. செனவிரத்ன |
| | • பேரா. எஸ்.எம். விஜேரத்ன |
| | • பேரா. ஷானிக்கா ஹிரிம்புறேகம |
| | • பேரா. எஸ்.ரி. ஹெட்டிகே |
| | • பேரா. எஸ்.டபிள்யு. கொட்டகம |
| | • பேரா. ஷியாம் பர்னாந்து |
| | • பேரா. சிறியந்தி ஏ. தெரணியகல |
| | • பேரா. சுனேத்ரா அத்துகோரல |
| | • பேரா. ரி.ஆர். ஆரியரத்ன |
| | • பேரா. டபிள்யு.டி. ரத்னசூரிய |
| | • பேரா. டபிள்யு.ஐ. த சில்வா |
| | • பேரா. டபிள்யு.கே. த ஆபுறூ |
| | • பேரா. டபிள்யு.எஸ். பிரேமவன்ச |
| | • பேரா. வை.என். அமரமாலி ஜயதுங்க |
| | • பேரா. எம்.இ.எஸ். பெரேரா |
| | • பேரா. ரோகினி பரணவிதான |
| | • பேரா. எம்.ஆர். சூரியாரச்சி |
| | • பேரா. எஸ்.ஆர். சிறிமான்ன |
| | • பேரா. அமால் ஜயவர்தன |
| | • பேரா. ஆர்.டி. விஜேசேகர |
| | • பேரா. டி.பி. திசாநாயக்க |
| | • பேரா. சரத் விஜேசூரிய |
| | • பேரா. அசங்க திலகரத்ன |
| | • பேரா. தீபிகா பர்னாந்து |
| | • பேரா. எஸ். ஹேவகே - 2010.09.30 வரை |
| | • பேரா. ஏ.டி.எம்.எஸ். அபேரத்ன |
| | • பேரா. எல்.ஏ.எஸ். பெரேரா |
| | • பேரா. ஷர்யா ஸ்கானிவேல் |
| | • பேரா. டி.ரி.யு. அபேதுங்க |
| | • பேரா. எம். கருணாநிதி - 2010.09.13 முதல் |

| **1985ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2)(ஓ) பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்:** | | |
|---|---|---|
| | • கலை | பேரா. ரமணி ஜயதிலக்க - 2010 மார்ச் முதல்<br>கலா. துஷாந்தி மெண்டிஸ் - 2010 மார்ச் முதல் |
| | • கல்வி | திரு. டபிள்யு.எம். பிரக்ஞதர்ஷன<br>பேரா. எம். கருணாநிதி - 2010.09.12 வரை |
| | • சட்டம் | அருட். (கலா.) என். டயஸ்<br>திருமதி. எஸ். செகராஜசிங்கம் |
| | • முகாமைத்துவம், நிதி | பேரா. டபிள்யு.பி.ஜி. த அல்விஸ்<br>பேரா. எச்.டி. கருணாரத்ன - 2010.05.13 வரை<br>கலா. ஜே.ஏ.எஸ்.கே. ஜயகொடி – 2010 ஆகஸ்ட் முதல் |
| | • மருத்துவம் | கலா. ரஞ்சன் டயஸ் |
| | • விஞ்ஞானம் | திருமதி டி.என். த சில்வா<br>கலா. சந்தன ஜயரத்ன |
| | | |
| | **நூலகர்** | கலா. பி. விஜேதுங்க (பதில்) – 2010 ஜுலை வரை<br>திருமதி. சுமன சி. ஜயசூரிய – 2010 ஜுலை முதல் |
| | **செயலாளர் : பதிவாளர்** | திரு. டி.பி.எல்.ஜே. நாணயக்கார (பதில்) 2010.03.17 வரை<br>திரு. பி.எம்.எஸ். பண்டார (பதில்) 2010 ஒக்டோம்பர் 25 வரை<br>திரு. ரி.எல்.ஆர். சில்வா. (பதில்) 2010 ஒக்டோம்பர் 26 முதல் |

### 1.3 கூட்டங்கள் -

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் பல்கலைக்கழகத்தின் அதிகார சபைகளும் ஏனைய குழுமங்களும் கிரமமாகக் கூடின. ஒவ்வொரு அதிகார சபையும் குழுமமும் நடத்திய கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| **பேரவை** | 14 |
| **மூதவை** | 12 |
| **நிதிக் குழு** | 12 |
| **பீடாதிபதிகள் குழு** | 12 |
| **விடுப்பு மற்றும் பரிசுகள் குழு** | 12 |
| **சட்டக் குழு** | 05 |
| **திட்டமிடல், அபிவிருத்திக் குழு** | 12 |
| **ஆராய்ச்சி ஆலோசனைச்சேவை, ஒழுக்கநெறிக் குழு** | 03 |
| **கட்டடக் குழு** | 12 |
| **பீடச் சபைகள்** | |
| • கலைப் பீடம் | 11 |
| • கல்விப் பீடம் | 10 |
| • சட்டப் பீடம் | 09 |
| • முகாமைத்துவ, நிதிப் பீடம் | 09 |
| • மருத்துவப் பீடம் | 14 |
| • விஞ்ஞான பீடம் | 14 |
| • பட்டக் கற்கைகள் பீடம் | 10 |

### 1.4 ஒட்டுமொத்த செயல்நிறைவேற்றம்

2010ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் அதன் 7 பீடங்கள் மற்றும் கலைப்பீடத்தில் புதிதாகத் தாபிக்கப்பட்ட சர்வதேச தொடர்புகள் மற்றும் வரலாறு ஆகியவற்றை உள்ளிட்ட 43 கற்கைத் துறைகள் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சியிலும் சேவை வழங்குவதிலும் வலுவளிப்பதில் ஈடுபட்டுள்ள அதன் ஆறு நிலையங்கள் ஆகியவற்றின் ஊடாக அதன் கல்விசார் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

கொழும்புப் பல்கலைக்கழகம் 40.05% கல்விசார் பணியார்களையும் 2.65% நிர்வாகப் பணியாளர்களையும் 57.30% கல்விசாராப் பணியாளர்களையும் கொண்ட 1281 பணியாளர் தொகுதி உறுப்பினர்களின் உதவியுடன் அதன் இலக்குகளை நோக்கிப் பணியாற்றியது. (வரைபடம் I-01)

வரைபடம் I -01
பணியாளர் தொகை - 2010




கல்விசார் பணியாளர் மத்தியில் சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோரின் விகிதாசாரப் பகிர்வு முறையே 3.20%, 11.32%, 1.92%, 50%, மற்றும் 33.54% ஆகும். (வரைபடம் I-02)

வரைபடம் I- 02
கல்விசார் பணியாளர் தொகை - 2010




**கல்விசார் செயல்நிறைவேற்றம்**

கொழும்புப் பல்கலைக்கழகம் 140 ஆண்டுகளுக்கும் கூடிய பெருமை மிக்க வரலாற்றைக் கொண்டுள்ளதாகப் பாங்கிலும் பண்பிலும் "நவீனமானதும் சர்வதேச ரீதியானதுமான ஒரு தலைநகரப் பல்கலைக்கழகம்" என்ற அதன் நிலையைப் பேணுவதிலுள்ள சவால்களை எதிர்கொள்ளும் அதன் முயற்சியைத் தொடர்கின்றது. பல்கலைக்கழகத்தின் அமைவிடம் சர்வதேச தகவல; / வள நிலையங்கள், நூலகங்கள், அரங்குகள், விளையாட்டுக் கூடங்கள், போன்றவற்றை இலகுவாக அடையக்கூடியதாகத் "தலைநகரப் பல்கலைக்கழகம்" ஒன்றின் அனுகூலங்கள் எல்லாவற்றையும் மாணவர்களுக்கு வழங்குகின்றது. கொழும்பு மாநகரத்தினுள் அதன் மையமான அமைவிடம் ஒரு பரந்த வீச்சிலான கலாசார, பொழுதுபோக்கு மற்றும் வியாபார வசதிகளுக்கு இலகுவான வாய்ப்பை வழங்குகின்றது. அதன் நீண்டகால பெருமைவாய்ந்த வரலாற்றின் துணையுடனும் காலத்தின் சோதனைகளை வெற்றிகொண்ட அதன் கட்டுறுதியான கல்விசார் மற்றும் நிர்வாக உட்கட்டமைப்புடனும் இப்பல்கலைக்கழகம் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் சமூகத்துக்குச் சேவையாற்றுவதிலும் நவீன புத்தாக்க அணுகுமுறையைத் தழுவியதாக செயலாற்ற மேம்பாட்டு உபாயத்திட்டத்தின் பிரகாரம் அதன் இலக்கினை நோக்கி முன்னேறியுள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகம் பல்கலாசார, பல்லின பல மதத்தைச் சார்ந்த மாணவர் மற்றும் பணியாளர் தொகையைக் கொண்டதாகச் சமூக ஒத்திசைவையும் கலாசாரப் பல்வகைமையையும் சமத்துவ வாய்ப்பையும் ஒற்றுமையையும் போற்றி வளர்க்கின்றது. மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பீடங்கள், வளாகம், நிறுவகங்கள் மற்றும் கல்விக்கூடம் ஆகியவை குறுக்கீடு எதுவுமின்றி கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிக்கு உகந்த சூழ்நிலையில் மிகச் சீராகச் செயற்பட்டன.

இப்பல்கலைக்கழகம் 2010ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலைத்தளத் தரப்படுத்தலில் இலங்கையில் முதலாவதாகவும் தெற்காசியாவில் 13ஆவதாகவும் தரப்படுத்தப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகமானது தெற்காசியாவிலும் சர்வதேச ரீதியாகவும் அதன் நிலைமையை மேலும் மேம்படுத்துவதற்கு மிகக் கடினமாக முயன்றுகொண்டிருக்கின்றது.

# 2. பீடங்கள், வளாகம், நிலையங்கள் மற்றும் அலகுகள்

## 2.1 கலைப்பீடம்

**அறிமுகம்**

2010ஆம் ஆண்டில் பேராசிரியர் இந்திரலால் த சில்வா கலைப்பீடத்தின் பீடாதியாகத் தொடர்ந்தும் சேவையாற்றியதுடன் திருமதி ஐ.கே.கே.விஜேகோன் பீடத்தின் உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தும் சேவையாற்றினார். பீடம் குடிமதிப்பியல், பொருளியல், ஆங்கிலம், புவியியல், வரலாறு, சர்வதேச உறவுகள், அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும், சிங்களம் மற்றும் சமூகவியல் ஆகிய ஒன்பது (09) துறைகளைக் கொண்டிருந்தது.

வரலாறு மற்றும் சர்வதேச உறவுகள் துறையை இருகூறாக்கியதன் விளைவாக பீடத்தின் புதிய துறையாகிய சர்வதேச உறவுகள் துறை 2010 ஜுலை 29 முதல் செயற்படத் துவங்கியது. இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சர்வதேச உறவுகளுக்கான உள்ள ஒரேயொரு துறை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் துறையாகும்.

அதற்கு மேலதிகமாக, பாளி பௌத்த கற்கைகள் அலகு, அரபு மற்றும் இஸ்லாமிய நாகரீக அலகு, ஆங்கில மொழிக் கற்பித்தல் அலகு, கணனி அலகு (மாணவர் கணனி அலகு மற்றும் கணனி கற்பித்தல் அலகு ஆகியவற்றை உள்ளடக்கியது). பத்திரிகை எழுத்தாண்மை அலகு மற்றும் கணிதவியல் அலகு ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறு (06) அலகுகளை பீடம் கொண்டுள்ளது.

**பீடத்தின் நோக்கும் பணியும்**

**நோக்கு:** பீடத்தின் நோக்கு பல்கலைக்கழகத்தின் நோக்குடன் ஒருங்கமைந்துள்ளது: ''கொழும்புப் பல்கலைக்கழகம் நாட்டின் முதலாவது பல்கலைக்கழகக் கல்லூரி (university College) மற்றும் மரபுரிமையாகப் பெற்ற புலமைப் பாரம்பரியங்கள் ஆகியவற்றினால் எழுச்சியூட்டப்பட்டு, பன்மைச் சமூகத்தில் கூட்டு ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதன் ஊடாக மனித அபிவிருத்தியை மேம்படுத்தி உலகத் தரத்திலான ஒரு நிறுவனமாகத் திகழ்வதற்கு முயல்கின்றது.'' இப்பீடம் வேலைச்சுற்றாடலில் திறம்படச் செயற்படுவதற்கு கல்வியியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் வளம் மிக்க பட்டதாரிகளை உருவாக்குவதற்காக கைத்தொழில்கள், கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்துறைசார் குழுமங்கள் ஆகியவற்றுடன் வலுவான உறவுகளையும் கூட்டுப் பங்காண்மைகளையும் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது.

**பணி:** பீடத்தின் பணி ''கற்பித்தல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் மதிப்பீடு ஆகியவற்றில் அதிஉயர் கல்விசார் மற்றும் நன்னெறி நியமங்களுக்கு அமைவாக சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடவியலில் புலமைப்பரிசில், திறனாய்வு விசாரணை, ஆற்றல்கள் மற்றும் திறன்கள் ஆகியவற்றைக் கூட்டாக மேம்படுத்துவதாகும். மாணவர்கள் சமூகப் பொறுப்பு மற்றும் நெறிமுறைக் கடப்பாடு ஆகிய உணர்வுடன் மாறுகின்ற வேலை உலகில் தாம் பொருந்தக்கூடியவாறு அவர்களுக்கு குறித்த திறன்கள் மற்றும் ஆற்றல்களை மட்டுமன்றி பரந்த சமூக மனிதநேய திசைகோட்படுத்தலையும் வழங்குதல்.''

### 2.1.1. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**கற்கைநெறிகள்**

**நீடிப்புக் கற்கைநெறிகள் மற்றும் சமுதாய சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2010**

2010ஆம் ஆண்டில் பரந்த அளவில் சமுதாயத்துக்கு உயர்தொழிற்றுறைசார் மேம்பாட்டுத் திறன்களை வழங்கி பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்துக்கு அதிகூடிய அளவு பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் இருப்பதற்கு இந்தப் பீடத்தை இயலச்செய்யும் விதமாக பல நீடிப்புக் கற்கைநெறிகள் கலைப்பீடத்தினால் நடத்தப்பட்டன.

உலக சனத்தொகை தினத்தை கொண்டாடும் நோக்குடன் குடிமதிப்பியல் மற்றும் சனத்தொகைக் கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்களுக்காக 2010 ஜுலை 30ஆம் திகதி குடிமதிப்பியல் துறை முழுநாள் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடத்தியது.

பொருளியல் திணைக்களம் சுற்றுலாத்துறை, ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் நுண் நிதியில் டிப்புளோமா ஆகிய இரண்டு டிப்புளோமா கற்கைநெறிகளை வழங்கியது.

ஆங்கிலத்துறையானது பொதுமக்களில் சுமார் 3000 பேரின் தேவையை நிறைவுசெய்யும் வகையில் ஆங்கில கற்றைநெறிகளை நடத்தியதுடன் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவையையும் நல்கியது. தொழில்களுக்கான ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிகள்

(English for Career) (பகுதி I மற்றும் II), மற்றும் சட்டக் கல்விக்கான ஆங்கிலம் (Eglish for Law) (பகுதி I மற்றும் II), ஆகிய கற்கைநெறிகளை அது நடத்தியது. அத்துடன் நிர்வாக மற்றும் கல்விசார் நோக்கங்களுக்கான உயர் ஆங்கில டிப்புளோமா கற்கைநெறிகள் (Diploma Courses in Advanced English for Administrative and academic Puposes), ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்புளோமா (DETE) மற்றும் ஆங்கில மொழிமூல போதனாசிரியர்களுக்கான ஆங்கில டிப்புளோமா (DEEMIT) ஆகிய கற்கைநெறிகளையும் அது நடத்தியது.

புவியியல் துறையானது 2010ஆம் ஆண்டு அனர்த்த (இடர்) முகாமைத்துவ சான்றிதழ் என்னும் தலைப்பிலான நீடிப்புக் கற்கைநெறியை நடத்தியது.

சர்வதேச உறவுகள் துறை சர்வதேச உறவுகளில் சான்றிதழ் கற்கைநெறி (CCIR) என்னும் தலைப்பிலான நீடிப்புக் கற்கைநெறியை நடத்தியதுடன் முரண்பாடு, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தில் சான்றிதழ் கற்கைநெறி என்னும் தலைப்பிலான மற்றுமொரு நீடிப்புக் கற்கைநெறியை (CPR) 2011 ஜனவரி ஆரம்பக் காலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சமூகவியல் துறையானது 2010ஆம் ஆண்டில் சிறைச்சாலைத் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கான (சிறைக்காவலர்கள்) சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடத்தியதுடன் 2011ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இரண்டு சான்றிதழ் கற்கைநெறிகளுக்கான பீடத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

ELTU ஆனது வணிக ஆங்கிலம் சான்றிதழ் கற்கை நெறிகளை (ஆரம்ப மற்றும் இடைநிலை மட்டங்கள்) நடத்தியதுடன் அந்த அலகு அதன் e-Diploma in Business English in M-learning platform கற்கைநெறியை மீண்டும் ஆரம்பித்தது.

பத்திரிகை எழுத்தாண்மை அலகு 2010ஆம் ஆண்டில் இதழியலில் டிப்புளோமா கற்கைநெறியை நடத்தியது.

**பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்**

201ஆம் ஆண்டில், பீடத்தில் உள்ள மொத்த பட்டதாரி மாணவர் தொகை 2335 ஆகக் காணப்பட்டது. 2009ஆம் ஆண்டின் க.பொ.த (உ.த) மாணவர்கள் 2010 ஒக்டோபர் 25ஆம் திகதி பீடத்தில் அனுமதிக்கப்பட்டனர். கற்கைநெறி அலகு முறைமை தொடர்ந்தும் தேறுதல் பயிற்சிக்கூறுக்கான உள்ளுறைப் பயிற்சி நெறியை உள்ளிட்ட பல்வேறு கற்கைநெறிகளை வழங்கியது.

குடிமதிப்பியல் துறையும் பொது மற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகளை வழங்கியது. இந்தத் துறை குடிமதிப்பியலை பொது பட்டத்துக்கான ஒரு பாடமாகவும் ஏனைய விசேட பட்டதாரி மாணவர்களுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் பாடமாகவும் வழங்கியது. குடிமதிப்பியல் துறை 2010 நவம்பர் முதல் செயற்படும்படியாக 4ஆம் வருட விசேட பட்டதாரி மாணவர்களின் முதலாவது தொகுதியினருக்கு உள்ளுறை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது.

பொருளியல் துறை மூன்றாம் வருடத்திலிருந்து துறை விசேடத்துவ நடைமுறையைப் பின்பற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கு கற்கைநெறி அலகு முறைமையின் கீழ் அதன் விரிவுரைகளைத் தொடர்ந்தும் நடத்தியது. இந்தத் துறையானது இவ்வாண்டில் 70 சிங்கள மொழிமூல மாணவர்களையும் 30 தமிழ் மொழிமூல மாணவர்களையும் 31 ஆங்கில மொழிமூல மாணவர்களையும் சேர்த்துக்கொண்டது. கடந்த வருடத்தைப் போன்றே மூன்று மொழிமூலங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கும் எல்லாப் பாடங்களுக்கும் வெவ்வேறாக விரிவுரைகள் நடத்தப்பட்டன. ஏனைய துறைகளைச் சேர்ந்த பல மாணவர்கள், குறிப்பாக, கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தைப் பயிலும் மாணவர்கள் பொருளியல் துறையினால் நடத்தப்பட்ட தெரிவுப்பாடங்களை உள்ளிட்ட கற்கைநெறிகளைக் கற்றனர். இவ்வாண்டில் தெற்காசிய பொருளாதார மாணவர் சந்திப்புக்கு (SEASM) பிரதானமாக அழுத்தம் கொடுக்கப்பட்டது. பொருளியல் துறை இக்கருத்திட்டத்தில் 2004ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டுவருகின்றது. SEASMஇற்கான நாட்டு இணைப்பாளர் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன மற்றும் பிரதி இணைப்பாளர் கலாநிதி என். ரவீந்திரகுமரன் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தனர். அது 2010ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி முதல் டிசம்பர் 1ஆம் திகதி வரை நடைபெற்றது.

ஆங்கிலத்துறை ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழி, ELT மற்றும் கலாசாரக் கற்கைகள் ஆகியவற்றில் பொது மற்றும் விசேட பட்டங்களுக்கான பல்வகைப்பட்ட கற்கைநெறி அலகுகளை வழங்கியது. புதிய நுழைவு மாணவர்கள் மற்றும் வெளிவாரியாக தமது முதலாவது பரீட்சையைப் பூர்த்தி செய்த ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோரின் மேலதிக உள்வாங்கலின் மூலம் இந்தத் துறை மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தது. இந்த மாணவர்கள் பட்டதாரி ஆங்கில ஆசிரியர்களாகவும், பல்வேறு நிறுவனங்களின் பயிற்றுவிப்பாளர்களாகவும் கொள்கை வகுப்பாளர்களாகவும் தங்களை வளப்படுத்திக்கொள்வதற்கு ஆங்கில மொழி மற்றும் ELT கற்கை நெறி அலகுகள் விசேடமாக இந்த மாணவர்களுக்கு உதவின.

புவியியல் துறையும் பொது மற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகளை வழங்கியது. 2010ஆம் ஆண்டில் இந்தத் துறையின் நோக்கு பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்களில் புதிய கற்கை விடயப்பரப்புகளை விருத்தி செய்யும் பணியில் தொடர்ந்தும் ஈடுபடுவதாகும்.

வரலாற்றுத் துறையும் பொது மற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகளை வழங்கியது. இருகூறாக்கப்பட்டதன் பின்னர் அது தனித்து ஒரு துறையாகத் தொழிற்படுகின்றது.

சர்வதேச உறவுகள் துறை பொது மற்றும் விசேட பட்டக் கற்கை நெறிகளை வழங்குகின்றது. இது பட்டதாரி மாணவர்கள் கற்பதற்கு மிகவும் நாடுகின்ற முதலாம் வருட பாடங்களில் ஒன்றாக மாறியுள்ளது. இதன் காரணமாக, விசேட பட்டக் கற்கை நெறிகளுக்கான ஏனைய துறைகள் தொடர்பாக, அதிக எண்ணிக்கையான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு துறை தீர்மானித்தது. வேறான ஒரு துறையாக மாறியதனால், புதிய ஒழுங்கு மற்றும் மேம்பாடுகளை உள்ளடக்குவதற்கும் சர்வதேச உறவுகள் துறையின் ஒட்டுமொத்தத் துறைகளை கற்கைநெறிகள் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் சர்வதேச உறவுகள் துறை தற்போதுள்ள அதன் பாடவிதானத்தைத் திருத்தி அமைத்துள்ளது.

அரசியல் விஞ்ஞான, பொதுக்கொள்கைத் துறை பொது மற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகளையும் சிங்களத் துறையும் பொது மற்றும் விசேட பட்டதாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகளையும் வழங்கின. சிங்களத் துறை மாணவர்களின் ஆராய்ச்சி ஆற்றலை ஊக்குவிப்பதற்காக மாதாந்த கருத்தரங்குகளின் தொடர் ஒன்றை ஒழுங்குசெய்தது. மக்கள் வங்கியின் அனுசரணையில் நடத்தப்பட்ட ''மகரந்த'' கலைவிழா மாணவர்களின் திறனாய்வு உணர்வை விருத்தி செய்வதற்கு உதவியது. சிங்கள மொழி பயில்வதற்காக சிங்களத் துறையில் இணைந்துள்ள சீன சர்வதேச ஒலிபரப்பு சேவையைச் சேர்ந்த இரண்டு சீன மாணவர்கள் 2010ஆம் ஆண்டில் தங்கள் ஒரு வருட கற்கைக் காலத்தைப் பூர்த்தி செய்தனர். பட்டதாரி மாணவர் கல்வியியல் பொருத்தமும் தரமும் (IRQUE) கருத்திட்டத்தின் கீழ் சிங்களத் துறையின் பாளி பௌத்த கற்கைகள் பிரிவுக்கு ரூபா. 600,000 பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமூகவியல் துறை சமூகவியலில் விசேட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை வழங்கியதுடன் பொதுப்பட்டத்துக்கான ஒரு பாடமாகவும் அதனை வழங்கியது. எதிர்காலத்தில் உளவியலில் ஒரு உப துறையை தாபிக்கும் நோக்கத்துடன் பொதுப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு பாடமாக உளவியலைக் கற்பித்தல் மற்றும் சமூகவியல் விசேட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் சமூகப் பணியில் கற்கைத் துறை ஆகிய இரண்டு புதிய கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பீட சபை மற்றும் மூதவை ஆகியவற்றின் அங்கீகாரங்களை இந்தத்துறை பெற்றுள்ளது. புதிய பதவிகளை பெற முடியாமை காரணமாக முதலாவது விடயம் இன்னும் சாத்தியமாகவில்லை. மற்றையது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பல பிரச்சினைகளை எதிர்கொண்டபோதிலும், சமூக வேலை நிகழ்ச்சித்திட்டம் எல்ஜுபிலிஜானா, சுலோவீனியா பல்கலைக்கழக சகாக்களின் உள்ளீட்டுடன் தொடர்கின்றது.

ஆங்கில மொழி கற்பித்தல் அலகு வழக்கமான வகுப்பறை ஊடாக மிகுந்த கற்றல் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன் 2010 ஒக்டோபர் 31ஆம் திகதி M-learning platform பற்றிய வணிக ஆங்கிலத்தில் ஈ டிப்புளோமா கற்கைநெறியை மீண்டும் ஆரம்பித்தது. இந்த முன்னெடுப்பின் ஊடாகப் பெறப்பட்ட அனுபவம் நவீன கணனிவழி தொலைக்கல்வித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பட்டதாரி மாணவர்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு அதன் பணியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தும் என அலகு நம்புகின்றது.

2010ஆம் ஆண்டில் அரபு மற்றும் இஸ்லாமிய நாகரீக அலகின் பணி பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டத்தில் கற்பித்தலை விருத்தி செய்யும் புதிய பணியை தொடர்தலும் அவ்வாறே பிரத்தியேகமான ஒரு அலகை (ICV அலகு) ஒழுங்குசெய்தலும் ஆகும். அலகு அதன் பாடவிதானத்தைத் திருத்தி அமைத்ததுடன் ஐந்து புதிய கற்கை அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ICV அலகு 2010ஆம் ஆண்டில் மூன்று பாரிய சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை நடத்தியது. அத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதன் பிரதான நோக்கம் பீட மாணவர்களிடையே இன ஒற்றுமையை மேம்படுத்துவதாகும்.

கணிதவியல் பல்வேறு துறைகளின் இடைத்துறைப் பாடமாகக் காணப்படுவதுடன் கணித அலகு (MU) கலைப்பீட மாணவர்களுக்கு மூன்று கற்கைநெறி அலகுகளை வழங்கியது.

பத்திரிகை எழுத்தாண்மை அலகு எதிர்காலத்தில் விசேட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் நோக்குடன் 2010ஆம் ஆண்டில் பாடவிதான மீளாய்வில் ஈடுபட்டது.

### பட்டப்பின் கற்கை நெறிகள்

இப் பீடம் 2010ஆம் ஆண்டில் பல பட்டப்பின் கற்கை நெறிகளை வழங்கியது.

குடிமதிப்பியல் துறை 2010இல் இருந்து சனத்தொகைக் கற்கையில் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தை ஒரு கற்கை நெறியாக மீண்டும் ஆரம்பித்தது. (இது பல்வேறு தொழிற்பாட்டுச் சிக்கல்கள் காரணமாக 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்தப்படவில்லை)

பொருளியல் துறை பொருளியலில் எம்.பில் / பீஎச்.டீ, பொருளியலில் எம்ஏ, நிதியியல் பொருளியலில் எம்ஏ. மற்றும் பொருளியல்; அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பட்டப்பின் டிப்புளோமா (DED) ஆகிய கற்கைநெறிகளை வழங்கியது.

ஆங்கிலத்துறை 2010ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எம்ஏ/எம்.பில் (ஆராய்ச்சி மூலம்) கற்கைநெறியை நடத்தியது. வரலாற்றுத்துறை வரலாற்றில் பட்டப்பின் ஆராய்ச்சிப் பட்டங்களை (எம்ஏ மற்றும் எம்பில்) வழங்கியது.

சர்வதேச உறவுகள் துறையும் சர்வதேச உறவுகளில் முதுமாணி (MAIR) மற்றும் சர்வதேச உறவுகளில் எம்.பில் ஆகிய கற்கைநெறிகளை நடத்தியது.

அரசியல் விஞ்ஞானத்துறை ஆராய்ச்சி மூலம் எம்ஏ நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியதுடன் நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் கூட்டுழைப்புடன் கற்கைநெறிப்பணி மற்றும் ஆராய்ச்சி மூலம் அரசியல் விஞ்ஞானத்தில் எம்ஏ நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தும் வழங்கியது. சிங்களத் துறையும் 2010ஆம் ஆண்டில் எம்ஏ/எம்.பில;/பீஎச்டீ நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

சமூகவியல் துறை 2010ஆம் ஆண்டில் பிரயோக சமூகவியலில் பட்டப்பின் டிப்புளோமா, எம்.பில், பிஎச்டீ மற்றும் சமூகவியலில் எம்ஏ நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை நடத்தியது.

### 2.1.2. உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்

**புதிய உள்ளெடுப்புகள் (பட்டதாரி மாணவர்) 2010 [2009 க.பொ.த.(உ/த)]**

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| கலை | 125 | 540 | 665 |

**பட்டதாரி மாணவர் தொகை – 2010**

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| கலை | 478 | 1771 | 2249 |

### 2.1.3. கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்கள்

**பணியாளர் தகவல்கள்**

கலைப்பீடம் 02 சிரேஷ்ட பேராசிரியர்கள், 17 பேராசிரியர்கள், 02 துணைப் பேராசிரியர்கள், 63 சிரேஷ்ட விரிவுரையாளர்கள், 09 விரிவுரையாளர்கள், 34 தகுதிகாண் நிலை விரிவுரையாளர்கள், மற்றும் 05 நிரந்தர போதனாசிரியர்களை உள்ளிட்ட கல்விசார் பணியாளர்களின் 132 நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 02 முறைமைப் பகுப்பாய்வாளர்கள், 16 தற்காலிக பயிற்சித் துணைவர்கள் மற்றும் 05 தற்காலிக போதனாரிசிரியர்கள் ஆகியோர் 2010ஆம் ஆண்டில் கல்விசார் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாண்டில் பின்வருவோர் துறைத்தலைவர்களாக செயற்பட்டனர். பேராசிரியர் டபிள்யூ.பி. அமரபந்து 2010.09.08 வரை மற்றும் டாக்டர் சுவர்ணா உக்குவத்த 2010.09.09இல் இருந்து (குடிமதிப்பியல்); பேராசிரியர் அதுல ரணசிங்க (பொருளியல்); பேராசிரியர் நிலூக்கா சில்வா (ஆங்கிலம்); திரு. டபிள்யூ.என். வில்சன் (புவியியல்); டாக்டர் டீ.என்.என்.ஆர். தேவசிறி 2010.08.01 முதல் (வரலாறு); பேராசிரியர் நயனி மெலெகொட 2010.08.01 முதல் (சர்வதேச உறவுகள்); பேராசிரியர் எஸ்.ஜ.கீதாபொன்கலன் (அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக்கொள்கை); பேராசிரியர் எல்.ஏ.டீ.ஆனந்த திஸ்ஸ குமார 2010.04.30 வரை மற்றும் வண.அகலகட சிறிசுமண தேரர் 2010.05.01 வரை (சிங்களம்), பேராசிரியர் சசங்க பெரேரா (சமூகவியல்)

பின்வருவோர் அலகு இணைப்பாளர்களாகப் பணிபுரிந்தனர்: திரு.எம்.எம்.எம்.சாபிர் (அரபு மற்றும் இஸ்லாமிய நாகரீகம்)@ மற்றும் திருமதி ஆர்.குலசிங்கம் (ஆங்கில மொழி கற்பித்தல்); திரு. கமல் வெலபொட 2010.07.31 வரை மற்றும் டாக்டர் அஜந்தா ஹப்புஆரச்சி 2010.08.01 முதல் (பத்திரிகை எழுத்தாண்மை); பேராசிரியர் ஏ.டீ.எம்.எஸ்.ஏ.அபேரத்ன (கணனி) மற்றும் பேராசிரியர் எஸ்.ஏ.நொபட் (கணிதவியல்). மேலே சொல்லப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, 2010ஆம் ஆண்டில் 53 நிரந்தர கல்விசாரா பணியாளர் குழு உறுப்பினர்கள் பீடத்தில் இருந்தனர்.

**பீட நியமனங்கள்**

பொருளியல் துறையைச் சேர்ந்த டாக்டர் சந்தன அளுத்கே தொடர்ந்தும் 2010 ஜனவரி 31ஆம் திகதி வரை தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் (IDC) இணைப்பாளராக சேவையாற்றினார். சமூகவியல் பிரிவைச் சேர்ந்த டாக்டர் இரேஷா கருணாரத்ன 2010 ஜனவரி 31ஆம் திகதி கற்கைகள் பணிப்பாளராக அவரது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்தார். புவியியல் துறையைச் சேர்ந்த திரு.லசந்த மாணவடு தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் (IDC) இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். டாக்டர் டீ.மெண்டிஸ் கற்கைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மேலே சொல்லப்பட்ட இரண்டு நியமனங்களும் 2010 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் செயல்விளைவுடையனவாக இருந்தன. ஆங்கிலத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் நிலோபர் த மெல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அலகின் (IUUC) பணிப்பாளராகத் தொடர்ந்தும் இருந்தார்.

### 2.1.4 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விபரங்கள்

**வெளியீடுகளும் சமர்ப்பிப்புகளும் - 2010**

| துறை / அலகு | கட்டுரைகள் மற்றும் நூல்கள் | சமர்ப்பிப்புகள் |
|---|---|---|
| குடிமதிப்பியல் | 09 | 03 |
| பொருளியல் | 04 | - |
| ஆங்கிலம் | 05 | 04 |
| புவியியல் | 04 | 06 |
| வரலாறு | 01 | 09 |
| சர்வதேச உறவுகள் | 03 | 03 |
| அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக்கொள்கை | 14 | - |
| சிங்களம் | 13 | 05 |
| சமூகவியல் | 06 | 04 |
| பத்திரிகை எழுத்தாண்மை அலகு | 02 | 02 |
| அரபு மற்றும் இஸ்லாமிா அலகு | - | 01 |

### 2.1.5 கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

2010ஆம் ஆண்டில் புதிய கலையரங்கு (NAT) 1.3 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான செலவில் புதுப்பிக்கப்பட்டது.

## 2.2 கல்விப்பீடம்

**அறிமுகம்**

கல்விப் பீடம் 2010ஆம் ஆண்டில் பட்டதாரி மாணவர்களுக்கான வழக்கமான கல்வி இளமாணிக் கற்கைநெறிகளை நடத்திய அதேவேளை, கல்வித்துறையில் முழு நேர பட்டப்பின் கற்கைநெறிகளை வழங்கியது.

இந்தப் பீடத்தின் பணி ''சம்பந்தப்பட்ட அறிவு, உகந்த மனப்பாங்குகள் மற்றும் பயன்மிக்க கற்பித்தல் தேர்ச்சிகள், ஆராய்ச்சி மற்றும் நாட்டுக்கான சேவை ஆகியவற்றைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள தொழில்வாண்மைமிகு அபிவிருத்திக்கு வசதியளித்தல்'' ஆகும்.

### 2.2.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**கற்கை நெறிகள்**

**நீடிப்புக் கற்கைநெறிகள் / சமுதாய சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

மானிடவியல் கல்வித்துறை நாடகம் மற்றும் அரங்கவியல் கற்பித்தலில் டிப்புளோமா பட்டப்பின்கற்கை (பகுதிநேர) கற்கைநெறியை 2010.03.13ஆம் திகதி ஆரம்பித்தது. துறையின் உறுப்பினர்கள் பீடத்தின் ஏனைய நீடிப்புக் கற்கைநெறிகளை நடத்துவதில் தொடர்ந்தும் உதவி நல்கினர்.

கல்வி உளவியல் துறை உளவளத்துணையியல் பட்டப்பின் டிப்புளோமா (பகுதி நேரம்) கற்கைநெறியை மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் தொடர்ந்தும் வழங்கியது.

சமூக விஞ்ஞான கல்வித்துறை தொடர்ந்தும் சமூக அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறியை வழங்கியதுடன் கல்விப்பீடத்தினால் நடத்தப்பட்ட எல்லா நீடிப்புக் கற்கைநெறிகளுக்கும் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தது.

விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வித்துறை கல்விப்பீடத்தினால் நடத்தப்பட்ட எல்லா நீடிப்புக் கற்கைநெறிகளுக்கும் உதவி நல்வியது.

**நீடிப்புக் கற்கைநெறிகளில் மாணவர் உள்ளெடுப்பு – 2010**

| கல்விநெறி | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா (வார இறுதி) (சிங்களம்) | 250 | 836 | 1086 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா (வார இறுதி) (ஆங்கிலம்) | 15 | 57 | 72 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா – நாடகமும் அரங்கற் கலையும் (பகுதிநேரம்) | 13 | 40 | 53 |
| சமூக அபிவிருத்தியல் பட்டப்பின் டிப்புளோமா | 14 | 14 | 28 |
| உளவளத்துணையியலில் பட்டப்பின் டிப்புளோமா | 40 | 40 | 80 |
| கல்வி முதுமாணி (பொது) பகுதிநேரம் | 12 | 44 | 56 |
| **மொத்தம்** | 344 | 1031 | 1375 |

### பட்டக்கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

பீடம் தொடர்ந்தும் கல்வி இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெற்றிகரமாக நடத்தியது.

பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முழுநேர பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றுக்கு சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கற்கைநெறி அலகு முறைமை மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிலும் தொடர்ந்தும் பயனுறுதியாக மேற்கொள்ளப்பட்டது.

மானிடவியல் கல்வித்துறை குறிப்பாக கல்வி இனமாணி மாணவர்களினதும் பீடத்தின் ஏனைய எல்லா மாணவர்களினதும் பணியாளர் குழு உறுப்பினர்களினதும் நன்மைக்காக தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக பேச்சுத் தமிழ் மற்றும் பேச்சுச் சிங்களக் கற்கைநெறிகளை நடத்தியது.

சமூக விஞ்ஞானக் கல்வித்துறை, பீடத்தின் பட்டதாரி மாணவர் மற்றும் பட்டப்பின் கல்வி பயிலும் மாணவர்களின் நன்மைக்காக கல்வியில் விசேட விடயப்பரப்புகளின் கீழ் மூன்றாம்நிலைக் கல்விக் கற்கைநெறியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது.

**பட்டதாரி மாணவர் உள்ளெடுப்பு**

| கல்விநெறி | மாணவர் எணண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| பி.எட். பகுதி I (சிங்களம்) | 04 | 56 | 60 |
| பி.எட். பகுதி I (தமிழ்) | - | 23 | 23 |
| பி.எட். பகுதி I (ஆங்கிலம்) | - | 21 | 21 |
| பி.எட். பகுதி II (சிங்களம்) | | | |
| பி.எட். பகுதி II (தமிழ்) | | | |
| பி.எட். பகுதி II (ஆங்கிலம்) | | | |
| பி.எட். பகுதி III (சிங்களம்) | 13 | 112 | 125 |
| பி.எட். பகுதி III (தமிழ்) | 01 | 37 | 38 |
| பி.எட். பகுதி III (ஆங்கிலம்) | 04 | 18 | 22 |
| மொத்தம் | 22 | 267 | 289 |

### பட்டப்பின் கற்கை நெறிகள்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி (வார இறுதி) ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கற்கைநெறியைக் கற்பதற்கு 1,086 மாணவர்கள் சேர்ந்தனர்.

கல்வி முதுமாணி சிங்கள மற்றும் ஆங்கில மொழிமூலக் கற்கைநெறிகளுக்கு (பகுதிநேரம்) மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

சமூக விஞ்ஞானக் கல்வி, விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி, மானிடவியல் கல்வி மற்றும் கல்வி உளவியல் ஆகிய துறைகள் இவ்வருடமும் பட்டப்பின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் நடத்தின. இந்தத் துறைகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எம்.பில் மற்றும் பீஎச்.டீ மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகளை மேற்பார்வை செய்வதன் மூலம் தமது பங்களிப்பை நல்கினர்.

மானிடவியல் கல்வித்துறை பீடத்தின் ஏனைய துறைகளைச் சேர்ந்த விரிவுரையாளர்களின் உதவியுடனும் வருகை தரும் விரிவுரையாளர்களாக வெளியிலிருந்து வரும் வளஆளணியினர்களின் சேவைகளைப் பெற்றும் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிப்பதில் பட்டப்பின் டிப்புளோமா (TESL) முழுநேரக் கற்கை நெறியை தொடர்ந்தும் வழங்கியது. இந்தத்துறை பீடத்தின் ஏனைய துறைகளைச் சேர்ந்த விரிவுரையாளர்களின் உதவியுடனும் வருகைதரும் விரிவுரையாளர்களாக வெளி நிறுவனங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட வள ஆளணியினர்களின் சேவைகளைப் பெற்றும் நாடகம் மற்றும் அரங்கற்கலை கற்பித்தலில் பட்டப்பின் டிப்புளோமா (முழுநேரக்) கற்கைநெறியை 2010.02.15ஆம் திகதி ஆரம்பித்தது.

கல்வி உளவியல் துறை மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில் பீடத்தினால் நடத்தப்பட்ட எல்லா பட்டப்பின் கல்வி கற்றைநெறிகளையும் நடத்துவதற்கு தொடர்ந்தும் உதவி நல்கியது.

சமூக விஞ்ஞானக் கல்வித்துறை விரிவுரைகள், தனிமுறைப்போதனைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்துதல் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் மூலம் பீடத்தினால் நடத்தப்பட்ட எல்லாக் கற்கைநெறிகளுக்கும் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தது.

விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வித்துறை பீடத்தினால் நடத்தப்பட்ட எல்லா பட்டப்பின் கற்கைநெறிகளையும் நடத்துவதற்கு உதவி வழங்கியது.

இவ்வாண்டில் கல்வி முதுமாணி முழுநேரக் கற்கைநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பின்வரும் எம்.எட். (முழுநேரக்) கற்கைநெறிகளுக்கு மட்டுமே மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது:

- மானிடவியல் கல்வித்துறையினால் நடத்தப்பட்ட TESOLஇல் எம்.எட்.
- கல்வி உளவியல் துறையினால் நடத்தப்பட்ட உளவியலில் எம்.எட்.
- சமூக விஞ்ஞானக் கல்வித்துறையினால் நடத்தப்பட்ட பொது எம்.எட்.
- 2010 ஒக்டோபர் 05ஆம் திகதி மெய்யியலில் முதுமாணி கற்கைநெறி ஆரம்பமானது. புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு பணியாளர் குழுவின் எல்லா சிரேஷ்ட உறுப்பினர்களும் மேற்பார்வையாளர்களாக சேவையாற்றுகின்றனர். இவ்வருடம் தமிழ் மொழியிலும் எம்.பில். கற்கைநெறியைக் கற்பதற்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

**பட்டப்பின் கற்கை மாணவர் அனுமதி – 2010**

| **கல்விநெறி** | **மாணவர் எண்ணிக்கை** | | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ஆண்** | **பெண்** | |
| கல்வி முதுமாணி (முழு நேரம்) - பொது | 03 | 12 | 15 |
| - முகாமைத்துவம் | 07 | 07 | 14 |
| - விஞ்ஞானம் | 03 | 06 | 09 |
| - உளவியல் | 03 | 13 | 16 |
| தத்துவ முதுமாணி | 5 | 13 | 18 |
| தத்துவக் கலாநிதி | 01 | | 01 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் | 06 | 23 | 29 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா (முழு நேரம்) (சிங்களம்) | 55 | 70 | 125 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா (முழு நேரம்) (தமிழ்) | 16 | 12 | 28 |
| கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா – நாடகமும் அரங்கியலும் (முழுநேரம்) | 12 | 21 | 33 |
| **மொத்தம்** | 111 | 177 | 288 |

## 2.2.2 உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்

**பட்டதாரி மாணவர் தொகை – 2010**

| **பீடம்** | **மாணவர் எண்ணிக்கை** | | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ஆண்** | **பெண்** | |
| கல்வி* | 19 | 264 | 283 |

(இப்போதைக்கு பீ.எட். கற்கைநெறிக்கான தேர்வு பூர்த்தியடையாததால் 3ஆம் 4ஆம் வருட மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது.)

| கல்விநெறி<br>முழுநேர கல்விநெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணியாளர்கள் | மொத்த கல்விசாரா பணியாளர்கள் |
|---|---|---|---|
| பி.எட் I | 104 | | |
| பி.எட; II | - | | |
| பி.எட் III | 185 | | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (முழுநேரம்) சிங்களம;/தமிழ் | 153 | | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்) | 29 | | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (நாடகமும் அரங்கற் கலையும்) கற்கைநெறி | 33 | | |
| கல்வியில் முதுமாணி | 54 | 29 | 14 |
| தத்துவ முதுமாணி | 18 | | |
| தத்துவக் கலாநிதி | 01 | | |
| **பகுதி நேர கல்விநெறி** | | | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (வார இறுதி) சிங்களம் | 1086 | | |
| கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (வார இறுதி) ஆங்கிலம் | 72 | | |
| நாடகம் மற்றும் அரங்கற் கலைக் கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா | 53 | | |
| சமூக அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா | 28 | | |
| உளவளத் துறையில் பட்டப்பின் டிப்ளோமா | 80 | | |
| கல்வியில் முதுமாணி (பொது) | 56 | | |

| கல்விநெறி | மொழி | உள்ளெடுப்பு 2010 | 1ஆம் வருடம் | 2ஆம் வருடம் பி.எட; I | 1ஆம் வருடம் பி.எட; II | 1ஆம் வருடம் பி.எட; III | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பி.எட் | சிங்களம் | | | 60 | - | 125 | 77 |
| | தமிழ் | | | 23 | - | 38 | 22 |
| | ஆங்கிலம் | | | 22 | - | 21 | 11 |

### 2.2.3 கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்கள்

மீளாய்வாண்டில், பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் 2010.07.31 வரை பீடத்தின் பீடாதிபதியாக சேவைநல்கினார். அவர் தனது மூன்று வருட பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்தபோது, 2010.08.02 முதல் செயற்படும்படியாக அடுத்துவரும் தொடர்ச்சியான மூன்று வருடங்களுக்கு பேராசிரியர் மாறி பெரேரா பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் 2010.09.01ஆம் திகதி தாய்மை விடுமுறை கிடைக்கும் வரை திருமதி ரீ.டீ.டீ. பதிரணகே பீடத்தின் உதவிப்பதிவாளராகத் தொடர்ந்தும் சேவையாற்றினார். நூலக மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகத்தைச் (NILIS) சேர்ந்த திருமதி அசோக அபேரத்ன அவருக்காக பதில்கடமை புரிந்தார்.

கல்விசார் பணியாளர் குழுவில் மூன்று (03) பேராசிரியர்கள், ஒரு (01) துணைப்பேராசிரியர், பத்து (10) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், எட்டு (08) விரிவுரையாளர்கள், மற்றும் ஆறு (06) தகுதிகாண் நிலை விரிவுரையாளர்கள் ஆகியோரை உள்ளிட்ட இருபத்தி எட்டு (28) உறுப்பினர்கள் பீடத்தில் இருந்தனர். பீடத்தின் கல்விசாரா பணியாளர் குழு பதின்மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

திரு. என்.வீ.கருணாசேன, டாக்டர் டபிள்யூ சந்திரதாச மற்றும் டாக்டர் ஏ.ஏ.ஜயவர்த்தன ஆகியோர் முறையே விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக்கல்வித்துறை, கல்வி உளவியல் துறை மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வித்துறை ஆகியவற்றின் துறைத்தலைவர்களாகத் தொடர்ந்தும் இருந்தனர்.

திரு. டீ.ஆர். அத்துக்கோரள 2010.05.31ஆம் திகதி ஓய்வு விடுமுறை பெறும்வரை மானிடவியல் கல்வித்துறையின் தலைவராக சேவையாற்றினார். அதன் பின்னர் 2010.06.01 முதல் 2010.08.02 வரை பேராசிரியர் மாறி பெரேரா துறைத்தலைவராகக் கடமையாற்றினார். 2010.08.02ஆம் திகதி முதல் திரு. எல்.எம்.கே. பண்டார பதில் துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் 2010.09.30ஆம் திகதி பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

பீடம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கல்வி இளமாணி பட்டம் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக நடத்தியது. (அட்டவணை I)

பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முழுநேர பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கற்கைநெறி அலகு முறைமை மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டிலும் தொடர்ந்தும் பயனுறுதியாக இருந்தது.

சமூக மானிடவியல் கல்வித்துறை குறிப்பாக பீ.எட். மாணவர்கள் மற்றும் பீடத்தின் ஏனைய எல்லா மாணவர்களினதும் பணியாளர் குழு உறுப்பினர்களினதும் நன்மை கருதி தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் பேச்சுத் தமிழ் மற்றும் பேச்சுச் சிங்களம் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நடத்தியது.

சமூக விஞ்ஞானக் கல்வித்துறை பீடத்தின் பட்டதாரி மாணவர் மற்றும் பட்டப்பின் கற்கை மாணவர்களின் நன்மை கருதி கல்வி விடய விசேட விடயப்பரப்புகளின் கீழ் மூன்றாம்நிலைக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது.

**கல்விசார் பணியாளர்களின் விபரம்:**

| பெயர்<br><br>**<u>மானிடவியல் கல்வித்துறை</u>** | பாடம் | மொழி | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | துணைப் பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | துணை விரிவுரையாளர் | பயிற்சித் துணைவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பேரா. மாறி பெரேரா | பிரயோக மொழியியல்<br>ஆராய்ச்சி முறைமைகள் | சி<br>ஆ | | ✓ | | | | | |
| திரு. டி.ஆர். அதுகோரல | கல்வியின் மெய்யியல் அடிப்படைகள்<br>வாழ்க்கை முழுவதுமான கல்வி<br>கல்வித்தத்துவம் | சி | | | | ✓ | | | |
| திரு. எல்.எம்.கே. பண்டார | கல்வியின் மெய்யியல் அடிப்படைகள்<br>வாழ்க்கை முழுவதுமான கல்வி | சி<br>ஆ | | | | | ✓ | | |
| திருமதி எஸ்.என். ராஜேந்திரம் | ஆங்கில கற்பித்தல் முறைகள்<br>மொழிக்கலைகள் | ஆ | | | | | ✓ | | |
| திரு. எஸ்.எஸ். தஹாநாயக்க | கல்வியின் மெய்யியல் அடிப்படைகள்<br>பௌத்தம்<br>பௌத்த கல்வி<br>கல்வித்தத்துவம் | சி<br>ஆ | | | | | ✓ | | |
| திருமதி இ.எஸ். நிரஞ்சனி | ஆங்கில இலக்கியம் கற்பித்தல்<br>கற்பித்தல் முறைமைகள்<br>மொழிக்கலைகள் | ஆ | | | | | ✓ | | |
| **<u>விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வித்துறை</u>**<br><br>திரு. என்.வி. கருணாசேன | பொது முறைமைகள்<br>விஞ்ஞான முறைமைகள்<br>பௌதீக விஞ்ஞானம்<br>சனத்தொகைக் கல்வி<br>கல்வியின் அடிப்படை–விஞ்ஞான அடிப்படை<br>கல்வியில் ஆராய்ச்சி முறை<br>விஞ்ஞானத்தின் தன்மை<br>போதனை வடிவமைப்பும்<br>விஞ்ஞானத்தில் மதிப்பீடும்<br>பாடவிதான நடைமுறையும்<br>விஞ்ஞானத்தில் அபிவிருத்தியும் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திரு. டபிள்யு.எம். பிரக்ஞதர்ஷன | கணித முறைகள்<br>கல்வித் தொழில்நுட்பம்<br>பாடவிதானக் கோட்பாடு<br>கல்வியின் அடிப்படை–விஞ்ஞான அடிப்படை<br>போதனை வடிவமைப்பும்<br>விஞ்ஞானத்தில் மதிப்பீடும்<br>பாடவிதான நடைமுறையும்<br>விஞ்ஞானத்தில் அபிவிருத்தியும்<br>பாடவிதானக் கோட்பாடும் அபிவிருத்தியும் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திரு. பி.கே.ஜே.இ. நோனிஸ் | தகவல் தொழில்நுட்பம்<br>கணனிக்கல்வி | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திருமதி. பி. ஜாசிங்க | தகவல் தொழில்நுட்பம்<br>கணனிக்கல்வி | சி<br>ஆ | | | | | ✓ | | |
| திருமதி. டி.வி.கே.பி. செனவிரத்ன | பொது முறைமைகள்<br>உயிரியல் விஞ்ஞானம்<br>சுற்றாடல் கல்வி<br>பாடவிதானக் கோட்பாடும் அபிவிருத்தியும் | சி<br>ஆ | | | | | ✓ | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருமதி பி.டி.எச்.எஸ்.<br>அமரசிங்க | தகவல் தொழில்நுட்பம்<br>கணனிக்கல்வி | சி<br>ஆ | | | | | | | ✓ |
| **<u>கல்வி உளவியல் துறை</u>**<br><br>கலா. டபிள்யு.<br>சந்திரதாச | கல்வி அளவீடும் மதிப்பீடும்<br>கல்வி புள்ளிவிபரங்கள்<br>கல்வியும் உளவியல் சோதனையும்<br>கல்வியில் உயர் புள்ளிவிபரவியலும்<br>உளவியலும்<br>ஆராய்ச்சி முமைமைகள் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| பேரா. கே.ஆர்.<br>அபேபால | கல்வியின் உளவியல்<br>அடிப்படைகள்<br>ஆரம்ப பிள்ளைப்பராயக் கல்வி<br>பிள்ளைப் பருவ மற்றும்<br>கட்டிளமைப்பருவ அபிவிருத்தி<br>கற்றலின் உளவியல்<br>ஆராய்ச்சி முறைமைகள் | சி | | ✓ | | | | | |
| பேரா. எம்.<br>விதாணபதிரன | கல்வியின் உளவியல்<br>அடிப்படைகள்<br>ஆரம்ப பிள்ளைப்பராயக் கல்வி<br>பிள்ளைப்பராய மற்றும்<br>கட்டிளமைப்பருவ அபிவிருத்தி<br>கற்றல் ஆராய்ச்சி முறைமைகள்<br>உளவியல் | சி<br>ஆ | | | ✓<br>துணை | | | | |
| கலா. சமுத்ரா<br>செனரத் | கல்வியின் உளவியல்<br>அடிப்படைகள்<br>பாடசாலை உளவள சேவை<br>வழிகாட்டலும் உளவள சேவையும்<br>பிள்ளைப்பராய மற்றும்<br>கட்டிளமைப்பருவ அபிவிருத்தி<br>கற்றல் ஆராய்ச்சி முறைமைகள்<br>உளவியல் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திருமதி ஆர்.டி.சி.<br>நிரோஷினி | கல்வி அளவீடும் மதிப்பீடும்<br>கல்விப் புள்ளிவிபரவியல்<br>கல்வி, உளவியல் சோதனை<br>ஆராய்ச்சி முமைமைகள்<br>பாடசாலை உளவள சேவை | சி<br>ஆ | | | | | ✓ | | |
| செல்வி வை.<br>சக்திவேல் | கல்வியின் உளவியல்<br>அடிப்படைகள்<br>கல்வி அளவீடும் மதிப்பீடும் | ஆ<br>த | | | | | | ✓ | |
| திரு. ஐ.ஜி.சி.<br>சந்திரகுமார | கல்வி அளவீடும் மதிப்பீடும் | சி | | | | | | ✓ | |
| சேல்வி இனோகா<br>ரந்தெனிய | கல்வியின் உளவியல்<br>அடிப்படைகள்<br>பாடசாலை உளவள சேவை<br>வழிகாட்டலும் உளவள சேவையும் | சி | | | | | | ✓ | |
| **<u>சமூக விஞ்ஞானக் கல்வித்துறை</u>**<br><br>பேரா. எம்.<br>கருணாநிதி | கல்வியின் சமூகவியல்<br>அடிப்படைகள்<br>பொதுவான கற்பித்தல் முறைகள்<br>கற்பித்தல் விசேட உபாயங்கள்<br>கறபித்தலின் விசேட<br>விடயப்பரப்புகள்<br>(கல்விச் சமூகவியல்) | த<br>ஆ | | ✓ | | | | | |
| கலா. ஏ.ஏ.<br>ஜயவர்தன | கல்வியின் அடிப்படை<br>ஒப்பீட்டுக் கல்வி<br>கல்விச்சட்டம்<br>கல்வியில் மனித உரிமைகள்<br>குடியியல் கல்வி<br>ஆரம்பக்கல்வி<br>சமகால கல்வி விடயங்களும்<br>கல்வியில் பிரச்சினைகளும்<br>ஆராய்ச்சி முறைகள் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திரு. எஸ். கலகமகே | கல்வியின் அடிப்படை<br>ஒப்பீட்டுக் கல்வி<br>கல்வியின் சமூகவியல்<br>அடிப்படைகள்<br>கல்விச் சமூகவியல்<br>கற்பித்தல் முறைகளின் வரலாறு<br>கல்வியின் சமூகவியல் சூழ்நிலை<br>சமகால கல்வி விடயங்களும்<br>கல்வியில் பிரச்சினைகளும்<br>ஆராய்ச்சி முறைகள் | சி | | | | ✓ | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கலா. ஏ.எம்.<br>ஹெட்டிகே | கல்வியின் அடிப்படை<br>கல்வி நிர்வாகம்<br>கல்வித் திட்டமிடல்<br>பாடசாலை மட்ட திட்டமிடலும் முகாமைத்துவமும்<br>அரசியல் விஞ்ஞான முறைகள்<br>ஆராய்ச்சி முறைகள்<br>கல்வியின் சமூகவியல் அடிப்படைகள் | சி | | | | ✓ | | | |
| திருமதி.<br>எச்.எம்.ஜே.சி.<br>ஹேரத் | கல்வியின் சமூகவியல் அடிப்படைகள் ஆரம்பக்கல்வி<br>மூன்றாம்நிலைக் கல்வி<br>கல்வியின் சமூகவியல் சூழ்நிலைகள்<br>சமகால ஆராய்ச்சி முறைகள் | சி<br>ஆ | | | | | ✓ | | |
| திருமதி. எச்.எம்.எல்.<br>குமாரி | பாடசாலை மட்டத்தில் திட்டமிடலும் முகாமைத்துவமும்<br>கல்வி நிர்வாகம்<br>கல்வித்திட்டமிடல்<br>பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம்<br>பொருளியலில் கற்பித்தல் முறைகள்<br>ஆராய்ச்சி முறைகள் | சி<br>ஆ | | | ✓ | | | | |
| திரு. சி. கஸ்துரி<br>ஆராச்சி | பாடசாலை மட்டத்தில் திட்டமிடலும் முகாமைத்துவமும்<br>கல்வி நிர்வாகம்<br>கல்வித்திட்டமிடல்<br>பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம்<br>வணிகத்தில் கற்பித்தல் முறைகள்<br>ஆராய்ச்சி முறைகள் | சி<br>ஆ | | | ✓ | | | | |
| கலா.<br>எல்.கே.பி.வெடிகாரமே<br>க | ஒப்பீட்டுக் கல்வி<br>கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்<br>ஆராய்ச்சி முறைகள்<br>மூன்றாம்நிலைக் கல்வி<br>கல்வியில் சமகால விடயங்கள்<br>கல்வியின் சமூகவியல் சூழ்நிலைகள் | சி<br>ஆ | | | ✓ | | | | |
| திருமதி.<br>எல்.என்.பி.வெடிகந்தமே<br>க | ஒப்பீட்டுக் கல்வி<br>புவியியலில் கற்பித்தல் முறைகள் | சி<br>ஆ | | | | ✓ | | | |
| திரு. எஸ். அதிரதன் | ஒப்பீட்டுக் கல்வி<br>பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம்<br>குடியியல் கல்வி | த | | | | ✓ | | | |

**கல்விசாரா பணியாளர்களின் விபரம்**

| அதிசிரேஷ்ட பணியாளர்கள் | சிரேஷ்ட பணியாளர்கள் | சிற்றூழியர்கள் |
|---|---|---|
| 04 | 04 | 06 |

**பணியாளர் அபிவிருத்தி**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் பதவியிலிருந்து பேராசிரியர் மாறி பெரேரா விலகி விடுமுறை லீவு பெற்றார். ஆதன் பின்னர் கிடைத்ததும் 2010.02.15ஆம் திகதி மானிடவியலில் பேராசிரியராகப் பதவியேற்றார்.

மீளாய்வாண்டில் கலாநிதி எம். கருணாநிதி பேராசிரியர் பதவிக்குப் பதவி உயர்த்தப்பட்ட அதேவேளை, கலாநிதி மஞ்சுளா விதானபதிரண துணைப்பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

கலாநிதி பி.ஜி.ஆர்.எஸ்.கே. செனரத் தனது பிஎச்.டி பட்டத்தை ஜேர்மனி லீப்ஸிக் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற அதேவேளை, திருமதி எச்.எம்.எல். குமாரி தனது எம்.பில் பட்டத்தைப் பெற்றார். திருமதி ஆர்.டி.சி. நிரோஷினி, திருமதி டீ.வி.கே.பி. செனவிரத்ன மற்றும் எஸ். ராஜேந்திரம் ஆகியோர் தமது விரிவுரையாளர் பதவிக்கான முன்தேவைப்பாடான எம்.எட் பட்டத்தைப் பெற்றனர்.

திரு. சி. கஸ்தூரி ஆரச்சி நியூசிலாந்து விகாட்டோ பல்கலைக்கழகத்தில் தனது பீஎச்.டி பட்டத்துக்காக பயின்ற அதேவேளை, திருமதி எல்.எம்.என்.பி. வெடிகண்டகே பெட்பட்ஷயர்

பல்கலைக்கழகத்தில் தனது பீஎச்.டி பட்டக்கல்வியை மேற்கொள்வதற்காக ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றார். செல்வி சக்திவேல் இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பிரயோக உளவியலில் எம்.எஸ்சி பட்டத்தைப் பெறுவதற்கு வழிகோலும் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

திரு. ஜி.ஐ.சி. சந்திரகுமார மற்றும் திருமதி இனோக்கா ரந்தெனிய ஆகியோர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் உயர்கல்வி கற்பித்தலில் சான்றிதழ; (CTHE) கற்கைநெறியை மேற்கொள்கின்றனர்.

### 2.2.4 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விபரங்கள்

பீட உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் பொழிப்பு கீழே பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயமாக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 20 | | 10 |
| ஆ. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | | | |
| இ. குறிப்பேடுகளின் எண்ணிக்கை | | | |
| ஈ. நூல்களின் எண்ணிக்கை | 28 | | |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை | 08 | | |
| எ. ஏனையவை | | | 01 |

| துறைகள் | சமர்ப்பிப்புகள் | வெளியீடுகள் / நூல்கள் | சொற்பொழிவுகள் |
|---|---|---|---|
| கல்வி உளவியல் | 7 | 8 | |
| மானிடவியல் கல்வி | 5 | 4 | 1 |
| விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி | 2 | - | |
| சமூக விஞ்ஞானங்கள் கல்வி | 5 | 7 | |

#### 2.2.5 நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | சமுகமளித்தோர் | பூர்த்திசெய்தோர் | சமர்ப்பணம் |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 2 | 5 | |
| ஆ. பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | | |
| இ. பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | | |
| ஈ. டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண் ணிக்கை | | | |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 2 | | |
| ஊ. ஏனையவை (SDC செயலமர்வுகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிச் செயலமர்வுகள்) | 8 | | |

### 2.2.6 ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கைநெறிகளின் விபரங்கள்

| கற்கைநெறி | மொழி | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | தத்துவ முதுமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|
| கல்வியில் முதுமாணி | ஆங்கிலம் | | | | ✓ | | |

- 2.2.7 மீண்டுவரும் செலவினங்களின் விபரங்கள்

| விடயம் | 2009 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| அ. தனிப்பட்ட வேதனங்கள் | 27,274,599 | 30,548,429 |
| ஆ. போக்குவரத்து | 2000 | 5000 |
| இ. வழங்கல் | 415,150 | 450,000 |
| ஈ. பராமரிப்பு | 196,626 | 200,000 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 726,342 | 870,00 |
| ஊ. ஏனையவை | 1,710,570 | 1,650,000 |

வரவுசெலவுத்திட்டம் 2010இன் பிரகாரம்

### 2.2.8 கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

| பெயரும் விபரங்களும் | கடன் / மானியம் | நிதியிடும் முகவர் | TEC ரூபா | RFA ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகம் நிகழ்ச்சித்திட்டம் - 2009 | மானியம் | உலக வங்கி | 4,000,000 | | |

### 2.2.9 கருத்திட்டச் செலவினங்களின் விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

| பெயர் | TCE ரூபா | 2009இல் செலவு | 2010இல் செலவு | 2010.12.31இல் உள்ளவாறு திரண்ட செலவு | பௌதீக முன்னேற்றத்தின; % |
|---|---|---|---|---|---|
| | 4,000,000 | 2,000,726.50 | 2,126,444.49 | 4,127,170.99 | % |

### 2.2.10 நிதியியல் முன்னேற்ற விபரங்கள் (செலவினம்)

| விடயம் | 2010இல் ஏற்பாடு ரூபா | 2010இல் செலவு ரூபா | சேமிப்பு / மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. மீண்டுவரும் செலவு கருத்திட்டம் நீங்கலாக | 32,940,429 | | |
| ஆ. மூலதனம் - உள்நாட்டு நிதியிடப்பட்டது | | | |
| இ. கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடப்பட்டது. | | | |
| ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடப்பட்டது | | | |

### 2.2.11 2010இல் கிடைத்த உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம்

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| அறை இல.1இன் பூர்த்திசெய்யப்பட்ட புதுப்பித்தல் | 2,263,114.96 | திருப்திகரமானது |

## 2.3. பட்டக் கற்கைகள் பீடம் (FGS)

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பட்டக் கற்கைகள் பீடம் இலங்கையில் பட்டப்பின் பட்டம் வழங்கும் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாகும். 1977இல், தாராளமயக் கொள்கைகளின் அறிமுகத்துடன், உயர்கல்விக்கான சந்தை கணிசமான அளவு மாற்றமடைந்தது. உண்மையில், இளமாணிப்பட்டம் தற்போது கல்விசார் மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கு அடிப்படைத் தகைமையாகக் கருதப்படுவதுடன் பட்டப்பின் பயிற்சி தொழில் அபிவிருத்தியின் அத்தியாவசியமான ஆக்கக்கூறாக மாறியுள்ளது.

பட்டக் கற்கைகள் பீடம் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பட்டக்கற்கைகள் பீடக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டது. அது பீடாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இருப்பதுடன் கொழும்புப் பல்கலைக்கழக மூதவைக்கும் பேரவைக்கும் பொறுப்புக்கூறும் பட்டக்கற்கைகள் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கற்கைச் சபைகளான அபிவிருத்திக் கற்கைச் சபையும் தொழில் வாண்மைக் கற்கைச் சபையும் கொள்கைவகுக்கும் முதலாவது அடுக்காகச் செயற்பட்டு அதன் விதப்புரைகளை அங்கீகாரத்துக்காக பீடச்சபைக்கு அனுப்புகின்றது. பீடச்சபை இந்தத் தீர்மானங்களை மீளாய்வு செய்து அவற்றை மூதவையின் அங்கீகாரத்துக்காக விதந்துரைக்கின்றது.

இவ்வாண்டில் பட்டக் கற்கைகள் பீட சபையின் ஆக்கக்கூறுகள் பின்வருமாறு:

பீடாதிபதி பட்டக் கற்கைகள் பீடம் (தலைவர்) - பேராசிரியர் சுனில் சந்திரசிறி

பீடங்களின் பீடாதிபதிகள்
பீடாதிபதி / கலை - பேராசிரிரியர் இந்திரலால் த சில்வா

| | |
|---|---|
| பீடாதிபதி / கல்வி | - பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் - 2010 ஜுலை வரை |
| | - பேராசிரியர் மாறி ஈ.எஸ்.பெரேரா – 2010 ஓகஸ்ட் முதல் |
| பீடாதிபதி / சட்டம் | - திரு. என் செல்வக்குமரன் |
| பீடாதிபதி / முகாமைத்துவமும் நிதியும; | - கலாநிதி பீ.எஸ்.எம்.குணரத்ன |
| பீடாதிபதி / மருத்துவம் | - பேராசிரியர் எச்.ஆர். செனவிரத்ன |
| பீடாதிபதி / விஞ்ஞானம; | - பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன |
| பணிப்பாளர;/மருத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் | - பேராசிரியர் எம்.எச்.ஆர்.ஷெரீப் |
| பேரவை நியமத்தர்கள் | - வித்தியாநிதி கலாநிதி என்.ஆர். த சில்வா |
| | - திரு. சி. மலியத்த |
| | - திரு. திலக் கருணாரத்ன |
| மூதவை நியமத்தர்கள் | - பேராசிரியர் பீ.எல்.பண்டிதரத்ன |
| | - பேராசிரியர் நிமல் கே தங்கல்ல |
| கற்கைச் சபையிலிருந்து நியமத்தர்கள் | - கலாநிதி வசந்த குணதுங்க |

பின்வருபவர்களும் பீடச்சபைக் கூட்டங்களில் அழைப்பின் பிரகாரம் பங்குபற்றினர்.

| | |
|---|---|
| தலைவர் / BSDS | - பேராசிரியர் ஜீ.ஐ.சீ.குணவர்த்தன |
| பதில் தலைவர; / BSPS | - திரு. ரணில் ஐ.சேனாரத்ன |
| கற்கைகள் பணிப்பாளர்கள் | - திரு. சரத் எஸ். விதானகம 2010 மார்ச் வரை |
| | - கலாநிதி குமுது குசும் குமார – 2010 மார்ச் முதல் |
| உசாத்துணையாளர் | - திரு.சரத் எஸ். விதானகம |
| செயலாளர் | - திரு. சமன் உயன்கொட, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் |

### 2.3.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

2007ஆம் ஆண்டில் கணனிவழி கற்பித்தலின் அறிமுகம் கற்கைநெறிகளைத் தெரிவு செய்தல், அவற்றின் காலப்பகுதி, புதிய கற்பித்தல் முறைமைகள், கற்றல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றைப் பொறுத்தவரை மாணவர்களுக்கு மிகுந்த நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதை நோக்கிய பாரிய நடவடிக்கையாகும். மற்றுமொரு முக்கியமான அபிவிருத்தி பல்துறைக் கற்கை நெறிகளில் அக்கறையுள்ள மாணவர்களின் நன்மைக்காக உயர் கட்டமைப்பைக் கொண்ட எம்.பில் / பீஎச்.டி.யின் அறிமுகம் ஆகும்.




மீளாய்வாண்டில் பட்டக் கற்கைகள் பீடம் இரண்டு (02) நிறைவேற்று டிப்புளோமா, பதினொரு (11) பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பன்னிரண்டு (12) முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடத்தியது. பீடம் அதன் பிணி ஆய்வு உளவியலில் எம்.பில் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் நடத்தியது. உப விதிகளில் சிறிய திருத்தங்களை உள்ளிட்ட எம்.பில் / பீஎச்.டி. பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றியமைத்தது. வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா (PgD. BM), வியாபாரக் கற்கைகளில் முதுமாணி (MBS), மற்றும் அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா (PgD.DS) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதிக்கு அதிகரித்த கேள்வி காணப்படுவதால் இவ்வாண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு மாணவர் தொகுதிகளை (வார நாட்கள் மற்றும் வார இறுதி) உள்ளெடுப்பதற்கு பீடம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2010ஆம் ஆண்டில் பல புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு பட்டப்பின் கற்கைகள் பீடம் ஏற்கனவே முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளதுடன் எண்ணக்கருப் பத்திரங்கள் BSDS மற்றும் BSPS மட்டங்களின் கலந்துரையாடப்படுகின்றன. பொது நிர்வாகத்தில் முதுமாணி மற்றும் பொது முகாமைத்துவத்தில் முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கு இட்டுச்செல்லும் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மூதவை மற்றும் பேரவையின் அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இந்தப்பிரேரணையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னிலையில் அதன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தர மேம்பாடு பீடத்தின் பிரான முன்னுரிமைகளில் ஒன்றாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக மூன்று (03) உபாயத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தற்போதுள்ள கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை திருத்தி மேம்படுத்துவதன் மூலம் பாடவிதான அபிவிருத்தியை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழகம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட நன்கு தகைமையுள்ள பணியாளர்கள் ஊடாக மாணவர்களுக்கு அறிவு உள்ளீடுகளை வழங்குதல்
- வெளிவாரி மதிப்பீடு. இந்த உபாயத்திட்டங்களும் பல்கலைக்கழகத்துக்கும் கைத்தொழிலுக்கும் இடையிலுள்ள தொடர்பை வலுப்படுத்துகின்றன. 2010ஆம் ஆண்டில், உலகளாவிய மற்றும் உள்நாட்டு மட்டத்தில் பொருளாதார வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், பட்டக் கற்கைகள் பீடம் அதன் மாணவர் உள்ளெடுப்பைப் பேணியது.

**பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்**

- எம்.பில் / பீஎச்.டி (பல்துறைக் கற்கைகள்)
- பிணிஆய்வு உளவியலில் எம்.பில்.
- நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி
- வியாபாரக் கற்கைகளில் முதுமாணி
- பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் முதுமாணி
- மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- முரண்பாட்டுத் தீர்வுகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- ஜப்பானியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- தகவல் முறைமை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- அமெரிக்க கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- உளவளத்துணையியல் மற்றும் உளவியல் சமூகப் பணிகளில் பட்டப்பின் டிப்புளோமா
- வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா
- உற்பத்தி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- முரண்பாடு மற்றும் சமாதானக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி

## 2.3.2. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**பட்டப்பின் மாணவர் உள்ளெடுப்பும் பட்டமளிப்பும்**

| நிகழ்ச்சித்திட்டம் | உள்ளெடுப்பு | பட்டம் பெற்றோர் |
|---|---|---|
| பிணி ஆய்வு உளவியலில் எம்.பில் | 6 | 4 |
| பல்துறைக் கற்கைகளில் எம்.பில் | 30 | 1 |
| மனித உரிமைகளில் முதுமாணி | 16 | 3 |
| முரண்பாட்டுத் தீர்வில் முதுமாணி | 14 | 2 |
| உற்பத்தி முகாமைத்துவத்தில் முதுமாணி | 20 | 10 |
| ஜப்பானியக் கற்கைகளில் முதுமாணி | 1 | - |
| தொழில் கற்கைகளில் முதுமாணி | 14 | 4 |
| மகளிர் கற்கைகளில் முதுமாணி | 3 | 2 |
| அபிவிருத்திக் கற்கைகளில் முதுமாணி | 62 | - |
| வியாபாரக் கற்கைகளில் முதுமாணி | 119 | 147 |
| நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி | - | 09 |
| பிரயோக உளவியலில் விஞ்ஞான முதுமாணி | - | - |
| மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்புளோமா | 41 | - |
| முரண்பாட்டுத் தீர்வில் பட்டப்பின் டிப்புளோமா | - | - |
| உற்பத்தி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா | 36 | 3 |
| உளவளத்துணையியல் மற்றும் உளவியல் சமூகப் பணிகளில் பட்டப்பின் டிப்புளோமா | 28 | 15 |
| ஜப்பானியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா | 10 | 1 |
| தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா | - | 5 |
| மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா | - | 4 |
| அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா | 39 | 14 |
| வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா | 72 | 90 |
| அமெரிக்க கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா | - | - |
| தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா | 102 | 03 |
| சந்தைப்படுத்தல் மற்றும் கற்றலில் நிறைவேற்று டிப்புளோமா | 31 | 13 |
| முரன்பாடு மற்றும் சமாதான கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா | 28 | - |
| சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்ளோமா | 22 | - |
| **மொத்தம்** | **694** | **330** |

### 2.3.3. கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரங்கள்

பேராசிரியர் சுனில் சந்திரசிறி பீடாதிபதியாக செயலாற்றிய அதேவேளை, திரு சமன் உயன்கொட வருடம் முழுவதும் பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தும் பதவி வகித்தார். திருமதி எம்.ஏ.பி.பி. சந்திரதாச, சிரேஷ்ட உதவி நிதியாளராக இருந்தார். திரு. சரத் எஸ். விதானகம தொடர்ந்தும் வருடம் முழுவதும் உசாத்துணையாளராகவும் 2010 மார்ச் வரை கற்கைகள் பணிப்பாளராகவும் செயற்பட்டார். கலாநிதி குமுது குசும் குமார 2010 ஏப்ரலில் கற்கைகைள் பணிப்பாளராக பீடத்தில் இணைந்துகொண்டார். பட்டக் கற்கைகள் பீடம் ஒன்பது நிரந்தர ஊழியர்களையும் பதின்மூன்று ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் கொண்டுள்ளது.

**பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாளர்கள்**

| நிகழ்ச்சித்திட்டம் | இணைப்பாளர்கள் |
|---|---|
| பல்துறைக் கற்கைகளில் எம்.பில் / பீஎச்.டி | கலா. எஸ்.பி. பிரேமரத்தின (புதிய)<br>திரு. சரத் எஸ் விதனகம (பழைய) |
| பிணி ஆய்வில் எம்.பில் | கலா. சந்திரிக்கா இஸ்மாயில் |
| நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி | திருமதி. சுமனா ஜயசூரிய |
| வியாபாரக் கல்வியில் முதுமாணி | பேரா. எச்.டி. கருணாரத்ன |
| மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா/முதுமாணி | திரு. சரத் எஸ் விதனகம |
| மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்புளோமா/ முதுமாணி | திருமதி வசந்தா செனவிரத்ன |
| முரண்பாட்டு தீர்வில் பட்டப்பின் டிப்புளோமா/முதுமாணி | கலா. கே. சர்வேஸ்வரன் |
| தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா/முதுமாணி | திரு. சரத் எஸ் விதானகம |
| ஜப்பானிய கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா/ முதுமாணி | கலா. என்.என்.ஜே. நவரத்ன |
| தகவல் முறைமை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா/முதுமாணி | கலா. சி.சி. ஜயசுந்தர |
| அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி | வண. கலா. டபிள்யு. விமலரத்ன |
| அமெரிக்க கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி | திருமதி மனீசா பஸ்கால் வனசிங்க |
| உளவள துணையியல் மற்றும் உள சமூக பணியில் பட்டப்பின் டிப்புளோமா | கலா. கமீலா சமரசிங்க |
| வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா | கலா. எம்.பி.பி. தர்மதாச |
| சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்புளோமா | திரு. சரத் எஸ். விதனகம |
| உற்பத்தி முகாமைத்தவத்தில் பட்டப்பின டிப்புளோமா/ முதுமாணி | திரு. ஆர்.ஐ. சேனாரத்ன |
| பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் முதுமாணி | பேரா. எஸ்.ஏ. நோபர்ட் |
| முரண்பாட்டு மற்றும் சமாதான கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி | திரு. ஏ. சர்வஸ்வரன் |
| m-கற்கை முறை ஊடாக சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்புளோமா | திரு. சரத் எஸ் விதானகம |

### 2.3.4 ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள்

2010 ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி ஆகிய கற்கை நெறிகள் பட்டக் கற்கைகள் பீடத்தின் மிகக் கடைசிச் சேர்க்கைகளாகும்.

### 2.3.5 கருத்திட்டங்களின் விபரங்கள்

பட்டக் கற்கைகள் பீடத்தில் இடவசதி மிகவும் பாரியதொரு பிரச்சினையாகும். இந்தப் பீடத்தில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் அவசியமான அங்கீகார நடவடிக்கைமுறை தொடர்பான ஆரம்பப் பணிகளை மிகவிரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.4 சட்ட பீடம்

### அறிமுகம்

ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தனியான ஒரு துறையாகத் திகழ்ந்த சட்டபீடம் திரு. என். செல்வக்குமரனின் பீடாதித்துவத்தின் கீழ் புதிய மூன்று துறைகளைத் தாபித்துள்ளது. வணிகச் சட்டத்துறை, தனியார் மற்றும் ஒப்பீட்டுச் சட்டம் மற்றும் பொது சர்வதேச சட்டம் ஆகிய துறைகளின் முறைசார் ஆரம்பம் 2009 டிசம்பர் 10ஆம் திகதி இலங்கை உயர்நீதிமன்ற மேன்மைமிகு பிரதம நீதியரசர் அசோகா ஜே.என். த சில்வா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஒரு வைபத்தில் இடம்பெற்றது. இவ்வைபவத்தில் மேன்மைமிகு நீதியரசர் சலீம் மார்சூப் ச.வ., பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, கொழும்புப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புரேகம ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### 2.4.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம்**

2009/2010ஆம் கல்வியாண்டு 2009 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து 2009ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. பரீட்சைகள் திட்டமிட்டவாறு 2010.06.08ஆம் திகதி ஆரம்பித்து 2010.07.31ஆம் திகதி முடிவடைந்தது. 2010 ஓகஸ்ட் மாதத்தில் ஆண்டு IV பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாக்கப்பட்டன. அதன் மூலம் 2010 ஒக்டோபர் மாதம் சட்டக் கல்லூரியினால் நடத்தப்படும் சட்டத்தரணி அனுமதிக்கான இறுதிப் பரீட்சையில் மாணவர்கள் தோற்றுவதற்கு அவர்களை இயலச்செய்தது.

பீடத்தின் 2010/2011ஆம் கல்வியாண்டு 2009 ஒக்டோபர் 04ஆம் திகதி ஆரம்பித்த போதிலும், முதலாம் வருடத்திற்கான சட்டக் கற்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தீவிர ஆங்கில நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.

மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையிலிருந்து பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டத்தில் தங்களை இயல்பாக்கிக் கொள்வதற்கு இயலச் செய்யும் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு இரண்டு வார காலம் கழிந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பல்கலைக்கழகத்துக்கு உள்ளும் வெளியிலும் இருந்து பல அனுவமும் தகைமையும் வாய்ந்த வள ஆளணியினர் பங்குபற்றினர்.

**புதிய (பட்டதாரி) மாணவர் அனுமதி – 2010 (2009 க.பொ.த. உ/த)**
*(பீடம் மற்றும் பால்நிலை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| சட்டம் | 38 | 213 | 251 |

**பட்டதாரி மாணவர் தொகை – 2010**
*(பீடம் மற்றும் பால்நிலை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| சட்டம் | 165 | 732 | 897 |

**பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டம் 2010**

சட்ட முதுமாணி 2010/2011 நிகழ்ச்சித்திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டு தேர்வு நடவடிக்கை ஆரம்பமானது. ஒவ்வொரு பாடத்துக்குமான நேரத்தை 60 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. வழங்கப்பட்ட பாடங்கள் பின்வருமாறு:

உயர் கம்பனிச்சட்டம், வங்கித்தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள், சர்வதேச வணிக நடுத்தீர்ப்பு, சர்வதேச வர்த்தகச் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், சர்வதேச மனிதநேயச் சட்டம், தனியார் சர்வதேச சட்டம், சிறுவர் உரிமைகள் சட்டம் மற்றும் மகளிர் உரிமைகள் சட்டம், IT மற்றும் IP சட்டம், குற்றவியல் நீதி மற்றும் நிர்வாகச் சட்டம். இது முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படவுள்ள விடயங்களான IT மற்றும் IP, குற்றவியல் நீதி ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

தத்துவ முதுமாணி மற்றும் கலாநிதி ஆகிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வழக்கம் போன்று வருடம் முழுவதும் தொடர்ந்தன.

கீழே தரப்பட்டுள்ள பொழிப்பு நிகழ்ச்சித்திட்ட ரீதியாக பணியாளர் வகைப்படுத்தலை வழங்குகின்றது.

| நிலையம் | கல்விநெறி | மொத்தம் | மொத்த பணியாளர் | மொத்த கல்விசாரா பணியாளர் |
|---|---|---|---|---|
| சட்டம் | எல்.எல்.பீ | 844 | 29 | 13 |
| | எல்.எல்.எம். | 96 | 13 | 2 |

### 2.4.2. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்

பின்வருபவை கற்கை நெறி, மொழிமூலம் மற்றும் கல்வியாண்டு ஆகியவற்றின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு மாணவர் தொகையின் பொழிப்பாகும்.

| நிலையம் | கல்வி நெறி | மொழி | உள்ளெடுப்பு 2010 | 1ஆம் வருட மாணவர் | 2ஆம் வருட மாணவர் | 3ஆம் வருட மாணவர் | 4ஆம் வருட மாணவர் | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| சட்டம் | எல்.எல்.பீ | சிங்களம் | | 203 | 155 | 155 | 173 | 171 |
| | | தமிழ் | | 07 | 09 | 14 | 20 | 20 |
| | | ஆங்கிலம் | | 34 | 38 | 21 | 15 | 15 |
| | எல்.எல்.எம். | ஆங்கிலம் | 96 | | | | | 71 |

### 2.4.3 மொத்த கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்கள்

**பணியாளர் தகவல்கள்**

ஒரு பேராசிரியர் 15 சிரேஷ்ட விரிவுரையாளர்கள், 2 விரிவுரையாளர்கள், 11 தகுதிகாண் விரிவுரையாளர்கள் மற்றும் 05 தற்காலிக விரிவுரையாளர்கள் ஆகியோரை உள்ளிட்ட 29 நிரந்தர உறுப்பினர்கள் கல்விசார் பணியாளர் குழுவில் இருந்தனர்.

எம்.பி.எஸ்.கே. பதிரண தற்காலிக பயிற்சித் துணைவராக பீடத்தில் இணைந்துகொண்டார். திரு. பி.எச்.என். சம்பத், அனுஷா பெரேரா, ஷர்மளா தாவூத், திரு. சிந்தக லியனகே, கோகிலா கோணசிங்க மற்றும் நிஷாரா மெண்டிஸ் ஆகியோர் தமது உயர் பட்ட கல்வியைத் தொடர்வதற்காக தொடர்ந்தும் வெளிநாடுகளில் கற்கை விடுமுறையில் இருந்தனர். கலாநிதி டி.உடகம பேராதனை பல்கலைக்கழக சட்டத்துறைக்கு உதவுவதற்காக தொடர்ந்தும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து விடுகையில் இருந்தார்.

**கூட்டங்கள்**

இவ்வாண்டில் பீடச் சபை ஒன்பது தடவை கூடியது. அத்துடன் உயர் பட்டங்கள் குழு பத்து கூட்டங்களை நடத்தியது.

**கல்விசார் பணியாளர் பற்றிய விபரங்கள்:**

பின்வருவோர் முறையே துறைகளின் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர் -

| **பெயர்** | **துறை** |
|---|---|
| பேராசிரியர் ஷார்யா ஷிராங்குவேல் | தனியார் மற்றும் ஒப்பீட்டுச் சட்டம் |
| திரு. வீ.ரீ. தமிழ்மாறன் | பொது மற்றும் சர்வதேச சட்டம் |
| திருமதி டபிள்யூ.ஐ. நாணயக்கார | வணிகச்சட்டம் |

திரு. என். செல்வக்குமரன் 2010 செப்டம்பரில் இலங்கையின் அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். கௌரவ நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சரால் திரு. என். செல்வக்குமரன் சட்டக் கல்வி மறுசீரமைப்புக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அத்துடன் அவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளிவாரி பட்டங்களுக்கான இடைக்கால சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். திருமதி நாணயக்கார வணிகச் சட்டத்துறையின் தலைவராக இருக்கின்ற அதேவேளை, சட்ட பீடத்தில் பரீட்சைகள் இணைப்பாளராகத் தொடர்ந்தும் பதவி வகித்தார். திருமதி எச்.கே.எஸ்.டீ.ஜீ. கீகணகே சட்ட பீடத்தின் உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தும் இருந்தார்.

**கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரங்கள்**

| பீடம் | அதி சிரேஷ்ட பணியாளர்கள் | சிரேஷ்ட பணியாளர்கள் | கனிஷ்ட பணியாளர்கள் | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| சட்டம் | 02 | 03 | 02 | 04 |

### 2.4.4 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயமாக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 07 | | 10 |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | 05 | | |

| | |
|---|---|
| திரு.என்.செல்வக்குமரன் | ஆய்வரங்குகளில் சமர்ப்புரைகள் மற்றும் வெளியீடுகள் -<br><br>1. 'மொழியியல் உரிமைகளை மதித்தல் - உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகள் ஊடாக நல்லிணக்கம்', 2010 நவம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புப் பத்திரம்.<br><br>2. 'சட்டவாக்கப் பரவலாக்கமும் பதின்மூன்றாவது திருத்தமும்', "பதின்மூன்றாவது திருத்தத்தில் : நடைமுறை பற்றிய கட்டுரைகள்" லக்ஷ்மன் மாரசிங்க மற்றும் ஜயம்பதி விக்கிரமரத்தின ஆகியோரால் பதிக்கப்பட்டது. பக்கம் 71-105.<br><br>3. 'நிர்வாகச் சட்டத்தில் அண்மைக்கால அபிவிருத்தி', இலங்கை நீதித்துறை அலுவலர்களின் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம். 2011 டிசம்பர் 18. |
| திரு. ஏ. சர்வேஸ்வரன் | பல்கலைக்கழக ஆய்வரங்குகளில் சமர்ப்புரைகள்<br><br>1. சர்வதேச தொழில் நிறுவனங்களின் மைய சமவாயங்களின் பார்வையில் இலங்கை தொழில் நியமங்களின் ஒரு மதிப்பீடு" பற்றிய முன்வைப்பு. கொழும்புப் பல்கலைக்கழக வருடாந்த ஆய்வரங்கு.<br><br>2. "இலங்கையில் இயற்கை வளங்களின் நல்ல ஆளுகையின் மேம்பாட்டுக்கான நீதித்துறை அணுகுமுறை" பற்றிய முன்வைப்பு. ஆய்வரங்கு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்<br><br>**தேசிய மட்டத்திலான பங்களிப்புகள்**<br><br>1. இயற்கையைப் பாதுகாக்கும் சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) கிராமிய வறுமைக் குறைப்புக் கருத்திட்டத்துக்கான இயற்கை வளங்களில் மேம்பாடு" என்பதன் மீளாய்வும் பயிற்றுனரும், இலங்கை.<br><br>2. தொழில் கற்கைகள் தேசிய நிறுவகத்தின் (NILS) நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளவாளர், தொழில் உறவுகள், மனித வலு அமைச்சு.<br><br>3. இலங்கை மன்றக் கல்லூரியின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளவாளர். |
| திருமதி ஜே. நிரியெல்ல | **ஆராய்ச்சி வெளியீடுகள்**<br>1. ஒழுங்கமைக்கப்பட்ட நாடு கடந்த குற்றம் தொடர்பான சில சமூக மற்றும் குற்றவியல் நீதிமுறைச் சவால்கள்: குறிப்பாக ஆசிய பசுபிக் பிராந்தியம் தொடர்பானது – சட்டத்தரணிகள் சங்க சட்டக் குறிப்பேடு. 2010 தொகுதி Xvi பக்கம் 132-138<br><br>2. பயனுறுதியான சிறைச்சாலை புனர்வாழ்வு முறைமை: குறிப்பாக இலங்கை தொடர்பானது -<br>ஐக்கிய அமெரிக்கா, சீனா சிறைச்சாலைச் சட்ட மீளாய்வு தொகுதி 7 இல.3 2010 மார்ச் பக்கம் 15 – 29<br><br>3. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம நியதிச் சட்டத்தின் சில அம்சங்கள் பற்றிய மதிப்பீடு.<br>சர்வதேச சட்டம் பற்றிய இலங்கைக் குறிப்பேடு, தொதுதி 2010 பக்கம்<br><br>4. முன்னாள் சிறைக்கைதிகளின் மீள் ஒருங்கிணைப்புக்கான விருப்பம்: ஒரு உலகளாவிய அணுகுமுறை. கொழும்புப் பல்கலைக் கழக மீளாய்வு. புதிய தொடர். தொகுதி. I இல. 2008 2009இல் வெளியிடப்பட்டது. பக்கம் 44 – 54 |

| | |
|---|---|
| | 5. ‘‘இளம் தவறாளிகளின் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு பற்றிய பிரச்சினைகள்’’ குறிப்பாக இலங்கை தொடர்பானது (கணனிவழி வெளியீடு)<br><br>**சமூகப்பணிகள்**<br><br>1. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையிலான இலங்கை சிறைச்சாலை நலன்புரி சங்கத்தின் உறுப்பினர்<br><br>2. தேசிய குழு உறுப்பினர் - இலங்கைத் தேசிய மன்றம், இலங்கை<br><br>3. இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சிறைச்சாலை ஆராய்ச்சி மற்றும் புனர்வாழ்வு நிறுவகத்தின் வளவாளர், இலங்கை. |
| திருமதி.ஆர்.விஜேசேகர | 1. ‘‘விவாக நிரூபணம்: போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் மீள்இணக்கப்பாடு பற்றிய விசேட நடவடிக்கைகள்’’ பற்றிய ஆராய்ச்சிப் பத்திரம் ஒன்றை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வருடாந்த ஆராய்ச்சி மகாநாட்டில் சமர்ப்பித்தார்.<br><br>2. ‘‘இலங்கை விவாகச் சட்டத்தில் முழுமையான மறுசீரமைப்பு தேவையா?’’ என்பது பற்றிய ஆராய்ச்சிப் பத்திரம் ஒன்றை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் 2010இல் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய சட்ட மகாநாட்டில் சமர்ப்பித்தார்.<br><br>3. ‘‘சிறுவர்களின் பாதுகாவல்: கலாசார உரிமையா அல்லது உரிமைக் கலாசாரமா? – பன்மைச் சட்டப் பாரம்பரியத்தில் சிறுவர்களின் பாதுகாவல் தொடர்பான முரண்பாட்டு உரிமைகளின் பகுப்பாய்வு - இலங்கை அனுபவம்’’ பற்றிய ஆராய்ச்சிப் பத்திரம் ஒன்றை மலேசியாவில் (KL) நடைபெற்ற 7ஆவது ஆசிய சட்ட நிறுவக வருடாந்த மகாநாட்டில் சமர்ப்பித்தார். (கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மீளாய்வில் வெளியிடுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.)<br><br>4. ‘‘போர் இன்றி விவாகரத்து: ஆனால், தியானத்தின் ஊடாக: இலங்கைக்கான சிறந்ததொரு மாற்று விவாகரத்து நடவடிக்கையாக ‘கூட்டுழைப்பு தியானம்’ ஒப்பீட்டுப் பகுப்பாய்வு பற்றிய ஆய்வுப்பத்திரம் ஒன்றை சட்டபீட வருடாந்த ஆய்வரங்கில் முன்வைத்தார். (கொழும்பு சட்ட மீளாய்வில் வெளியிடப்படவுள்ளது / சட்டபீடம் - 2010)<br><br>5. **மேற்கொள்ளப்பட்ட பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்:** 2010 (ஜுலை) ‘கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு ஆக்கபூர்வமான முகாமைத்துவம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல்’ பல்கலைக்கழகப் பணியாளர் பயிற்சிச் செயலமர்வு, பணியாளர் அபிவிருத்தி நிலையம், கொழும்புப் பல்கலைக் கழகம். |
| திருமதி. உடபதி எஸ் லியனகே | **வெளியீடுகள்**<br><br>1. புறக்கணிப்பான செயல்களால் ஏற்படும் தூய பொருளாதார இழப்புக்கு எதிராக பொறுப்பின் பிரயோகத்தன்மை – ஓர் இலங்கை அணுகுமுறை – பிரித்தெடுப்பு – ஆய்வரங்கு, வருடாந்த கல்விசார் கூட்டத்தொடர், கொழும்புப் பல்கலைக் கழகம், ஜுன் 2010<br><br>2. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சுற்றாடல் பாதிப்பை நிவர்த்திப்பதில் பொதுச்சட்டத்தின் பயனுறுதி: போருக்குப் பிந்திய சூழ்நிலையில் மீள்அபிவிருத்தி - பிரித்தெடுப்பு - நடவடிக்கை முறைகள், வருடாந்த ஆராய்ச்சி மகாநாடு, கொழும்புப் பல்கலைக் கழகம், நவம்பர் 2010<br><br>**சமர்ப்பிப்புகள்:**<br><br>1. மருத்துவப் புறக்கணிப்புகளும் நோயாளர்களின் உரிமைகளும் - பாரம்பரிய மருத்துவ தேசிய நிறுவகத்தின் அதிதி விரிவுரையாளர் - சுதேச மருத்துவத்துறை – 2010 |

| | |
|---|---|
| | 3. புறக்கணிப்பான செயல்களால் ஏற்படும் தூய பொருளாதார இழப்புக்கு எதிராக பொறுப்பின் பிரயோகத்தன்மை – ஓர் இலங்கை அணுகுமுறை – பிரித்தெடுப்பு – ஆய்வரங்கு, வருடாந்த கல்விசார் கூட்டத்தொடர், கொழும்புப் பல்கலைக் கழகம், ஜுன் 2010<br><br>4. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சுற்றாடல் பாதிப்பை நிவர்த்திப்பதில் பொதுச்சட்டத்தின் பயனுறுதி: போருக்குப் பிந்திய சூழ்நிலையில் மீள்அபிவிருத்தி- பிரித்தெடுப்பு- நடவடிக்கை முறைகள், வருடாந்த ஆராய்ச்சி மகாநாடு, கொழும்புப் பல்கலைக் கழகம், நவம்பர் 2010 |

### 2.4.5. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| பெயர் | சமுகமளித்தவை | பூர்த்திசெய்யப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | | |

### 2.4.5. ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கைநெறிகள்

| பீடம் | கல்விநெறி | மொழி | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | எம்.பில். | பீஎச்.டி |
|---|---|---|---|---|---|---|---|---|
| சட்டம் | எல்.எல்.எம். | ஆங்கிலம் | - | - | ✓ | - | - | - |

### 2.4.6. மீண்டுவரும் செலவினங்களின் விபரம்:

| விடயம் | 2009 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| தனிப்பட்ட வேதனங்கள் | 26,512,780 | 30,430,004 |
| போக்குவரத்து | 1,060 | 5,000 |
| வழங்கல்கள் | 619,646 | 610,000 |
| பராமரிப்பு | 176,355 | 220,000 |
| ஒப்பந்த சேவைகள் | 822,662 | 1,385,000 |
| ஏனையவை | 3,621,225 | 1,200,000 |
| மொத்தம் | 31,753,727 | 33,850,004 |

### 2.4.7. நிதியியல் முன்னேற்றங்கள் பற்றிய விபரங்கள் (செலவினம்)

| விடயம் | 2010இல் ஏற்பாடு ரூபா | 2010இல் செலவு ரூபா | சேமிப்பு / மிகை ரூபா |
|---|---|---|---|
| கருத்திட்டம் நீங்கலாக மீண்டுவரும் செலவினம் | 33,850,000 | - | - |

### 2.4.8. 2010இல் பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள்:

**உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள் / கட்டிடங்கள் / நன்கொடைகள்**

- இவ்வாண்டில் NLT கட்டிட சட்டபீடத்தின் கூரை புதுப்பிக்கப்பட்டது.

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் ரூபா. | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| • இவ்வாண்டில் NLT கட்டிட சட்டபீடத்தின் கூரை புதுப்பிக்கப்பட்டது. | - | திருப்திகரமானது |

## 2.5 முகாமைத்துவ, நிதிப்பீடம்

### அறிமுகம்

முகாமைத்துவ நிதிப்பீடம் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வளமான பாரம்பரியங்களின் துணையுடன் இலங்கையில் முகாமைத்துவ நிதிக்கல்வியில் முதன்மை வாய்ந்த நிலையமாவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் அதேவேளை, ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் சமூக சேவையில் முதன்மைநிலையைப் பின்தொடரும் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. முகாமைத்துவ நிதிப்பீடம் 1994இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, கடந்த 16 வருடங்களில் கல்விசார் துறைகள், வழங்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், கல்விசார் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர் உள்ளெடுப்பின் அளவு ஆகிய ஆற்றல்களில் வளர்ச்சி கண்டுள்ளது. பட்டம் மற்றும் பட்டப் பின் மட்டங்கள் ஆகிய இரண்டிலும் தொழிற்பாடுகளின் வளர்ச்சியின் பின்னால் உள்ள பாரிய உந்துசக்தி படிப்படியாக விரிவடையும் கைத்தொழிலின் முகாமைத்துவத் திறன்களின் தேவைப்பாடுகள் ஆகும். பீடத்தினால் வழங்கப்படும் வியாபார நிர்வாக இளமாணி (BBA) நிகழ்ச்சித்திட்டத்தின் அதிகரித்த கேள்விக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தில் இடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வருடாந்தம் அதிகரித்து வரும் Z-புள்ளியின் தேவைப்பாடு ஒரு சான்றாகும். அண்மைய வருடங்களில், வியாபார நிர்வாகத்தில் முதுமாணி (MBA) நிகழ்ச்சித்திட்டத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து, கொழும்புப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைக்கான என்றும் அதிகரித்து வரும் கேள்வியைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

அதிகரித்துவரும் கேள்விகளுக்கான பதில் நடவடிக்கையாக, ஏனைய பலவற்றுடன் வரையறுக்கப்பட்ட கட்டிட வசதி மற்றும் பணியாளர் பற்றாக்குறை ஆகியவற்றை உள்ளிட்ட எண்ணற்ற வள நெருக்கடிகள் காணப்பட்டபோதிலும், மீளாய்வுக்குட்பட்ட இக்கல்வியாண்டில், பீடம் பட்டதாரிக் கற்கைகளுக்கான அதன் புதிய மாணவர் உள்ளெடுப்பை 426ஆக அதிகரித்துள்ளது.

உலக வணிகத்தின் வேகமாக மாறிவரும் சிறப்பம்சத்தின் விளைவாக, பீடம் ஒரு வருடத்திற்கு முன்னர் BBA நிகழ்ச்சித்திட்டத்துக்கான புதிய பாடவிதானத்தை அறிமுகப்படுத்தி, இறுதி ஆண்டு பட்டதாரி மாணவர்களின் உள்ளுறைப் பயிற்சிக்கான மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்ட ஏற்பாட்டைக் கொண்டதாக அறிவு மற்றும் திறன்களின் சரியான ஒருங்கிணைப்பை முனைப்படுத்திக் காட்டுகின்றது. பரிசீலனைக்குட்பட்ட இவ்வாண்டில், புதிய பாடவிதானத்தின் முதலாவது மீளாய்வு நடைபெற்றதன் விளைவாக, புதிய பாடவிதானத்தில் சில ஆரம்பத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பட்டப்பின் கல்வியைப் பொறுத்தவரை, முகாமைத்துவம், நிதிப்பீடத்தின் பட்டப்பின் கற்கை மற்றும் தொழில் இடைநிலை அபிவிருத்தி அலகு எந்தவொரு காலகட்டத்திலும் சுமார் 300 பட்டதாரி மாணவர்களுக்கு நான்கு MBA நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. வேலை உலகில் மாறிவரும் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டத்தை ஆக்கும் நோக்கத்துடனும் சர்வதேச மாணவர்களுக்கும் பொருத்தமானவாறு நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றுவதற்காகவும் MBA பாடவிதானத்தை திருத்துவதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில், முகாமைத்துவ நிதிப்பீடம் கூட்டாண்மைத் துறைக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் துணிகர முயற்சியில் இறங்கியுள்ளது. கடந்த வருடத்தில் ஆரம்பித்து மக்கள் வங்கியின் கனிஷ்ட முகாமையாளர்களுக்கு நடத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமான முன்னேற்றத்தைக் கண்டது. 2010இல், பீடம் கொழும்பு டொக்யாட் லிமிரெட் நிறுவனத்துக்கான மற்றுமொரு ஆலோசனைச் சேவையை ஆரம்பித்தது. இந்தப் புதிய முன்னெடுப்பு கூட்டிணைந்த உலகுடன் அதன் உறுப்பினர்களுக்கான வலையமைப்பு மேற்கொள்வதற்கான உறுதியான தளத்தை உருவாக்குவதுடன் பீடம் அதன் எல்லைகளை வரிவாக்குவதற்கும் உதவுகின்றது.

## 2.5.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

**கற்கைநெறிகள்**

பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்
பின்வரும் துறைகளில் வியாபார நிர்வாக இளமாணி (விசேட பட்டம்) (4 வருட காலப்பகுதி):

- பொது முகாமைத்துவம்
- நிதியியல்
- கணக்கியல்
- வியாபாரப் பொருளியல்
- சந்தைப்படுத்தல்

பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

- தத்துவ முதுமாணி/தத்துவக் கலாநிதி
- வியாபார நிர்வாக முதுமாணி (பொது)
- நிதியியலில் வியாபார நிர்வாக முதுமாணி
- சந்தைப்படுத்தலில் வியாபார நிர்வாக முதுமாணி
- மனித வள முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக முதுமாணி

புதிய (பட்டதாரி) மாணவர் அனுமதி – 2010 [2009 க.பொ.த. (உ/த)]
*(பீடம் மற்றும் பால்நிலை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| முகாமை மற்றும் நிதி | 191 | 243 | 434 |

**பட்டதாரி மாணவர் தொகை – 2010**
*(பீடம் மற்றும் பால்நிலை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| முகாமை மற்றும் நிதி | 714 | 936 | 1650 |

| பீடம் | கல்விநெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணியாளர்கள் | மொத்த கல்விசாரா பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| முகாமை மற்றும் நிதி | பீ.பீ.ஏ. | 1652 | 58 | 20 |
| **மொத்தம்** | | **1652** | **58** | **20** |

## 2.5.2 உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

| பீடம் | கல்விநெறி | மொழி | உள்ளெடுப்பு 2010 | 1ஆம் வருட மாணவர்கள் | 2ஆம் வருட மாணவர்கள் | 3ஆம் வருட மாணவர்கள் | 4ஆம் வருட மாணவர்கள் | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகாமை மற்றும் நிதி | பீபீஏ | ஆங்கிலம் | 433 | 433 | 415 | 404 | 400 | 342 |
| **மொத்தம்** | பீபீஏ | ஆங்கிலம் | **433** | **433** | **415** | **404** | **400** | **342** |

### 2.5.3 வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

| பீடம் | கல்விநெறி | மொழி | மாணவர்கள் | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| முகாமை மற்றும் நிதி | மனித வள முகாமைத்துவத்தில் எம்.பீ.ஏ. | ஆங்கிலம் | 01 | |

### 2.5.4. கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள்

### பணியாளர்கள் பற்றிய தகவல்கள்

கலாநிதி பி.எஸ்.எம். குணரத்ன தொடர்ந்தும் பீடாதிபதியாக இருந்த அதேவேளை, 2010.01.01ஆம் திகதி வரை பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகப் பணியாற்றிய எஸ். தம்பிராசா கல்விசார் தாபனப் பிரிவுக்கான உள்ளக மாற்றம் பெற்று பீடத்தை விட்டுச் சென்றார். 2010.04.01 முதல் செயற்படும் படியாக செல்வி டபிள்யூ.ஆர்.எஸ்.எம்.வை.டீ. ஹிக்கொட உதவிப் பதிவாளராக பீடத்திற்கு மாற்றம் பெற்று வந்ததன் மூலம் இந்த வெற்றிடம் நிரப்பப்பட்டது.

திரு. டீ.எம்.எஸ். தசநாயக்க மற்றும் கலாநிதி எம்.பி.பி. தர்மதாச ஆகியோர் முறையே நிதி மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளின் தலைவர்களாகத் தொடர்ந்தும் சேவையாற்றினர். திரு. ஜி. ரணவீரகே மற்றும் கலாநிதி (திருமதி) கே.திசாநாயக்க ஆகியோர் முறையே கணக்கீட்டு மற்றும் முகாமைத்துவ, நிறுவனக் கற்கைகள் பீடங்களுக்கு 2010.10.13 முதல் செயற்படும்படியாக துறைத்தலைவர்களாக மீண்டும் நியமிக்கப்பட்டனர். பீடத்தின் முன்னைய தலைவர் கலாநிதி என்.என்.ஜே.நவரத்தின தனது ஓய்வு விடுமுறையில் வெளிநாட்டுக்குச் சென்ற காரணத்தினால், 2010.05.13 முதல் செயற்படும்படியாக கலாநிதி பவித்திரா கைலாசபதி துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார். கலாநிதி எச்.என்.பி. ஜயசிங்க வியாபாரப் பொருளியல் துறைத்தலைவராகத் தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்ததும், 2010.05.13 முதல் செயற்படும்படியாக வியாபாரப் பொருளியல் துறையின் புதிய தலைவராக பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன நியமிக்கப்பட்டார்.

நிரந்தர கல்விசார் பணியாளர் குழுவில் ஒரு (01) பேராசிரியர், ஒரு (01) துணைப் பேராசிரியர், முப்பத்து நான்கு (34) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், எட்டு (08) விரிவுரையாளர்கள் மற்றும் பதின்மூன்று (13) தகுதிகாண் விரிவுரையாளர்கள் ஆகியோரை உள்ளிட்ட ஐம்பத்தேழு (57) உறுப்பினர்கள் இருந்தனர். அதற்கு மேலதிகமாக, பீடத்தில் இரண்டு (02) கணனி போதனாசிரியர்களும் இருந்தனர். 2010ஆம் ஆண்டின் இறுதியில் கல்விசார் பணியாளர்களில் பதினொரு (11) உறுப்பினர்கள் தங்கள் பட்டப்பின் கற்றைக்காக விடுமுறையில் சென்றனர்.

**கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்:**

| பீடம் | விடயம் | மொழிமூலம் | சிரேஷ்ட பேராசிரியர்கள் | பேராசிரியர்கள் | சிரேஷ்ட விரிவுரையாளர்கள் | விரிவுரையாளர்கள் | உதவி விரிவுரையாளர்கள் | போதனாசிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகாமைத்துவமும் நிதியும் | கணக்கீடு | ஆங்கிலம் | - | - | 06 | 01 | 01 | |
| | வியாபாரப் பொருளியல் | ஆங்கிலம் | - | 01 | 06 | 01 | 02 * | |
| | நிதியியல் | ஆங்கிலம் | - | 01 | 04 | 03 | 02* | |
| | மனிதவள முகாமைத்துவம் | ஆங்கிலம் | - | - | 04 | 02 | 02 | |
| | முகாமைத்துவமும் நிறுவனக் கற்கையும் | ஆங்கிலம் | - | 01 | 07 | 01 | 02 | |
| | சந்தைப்படுத்தல் | ஆங்கிலம் | - | - | 08 | 01 | 02<br>01* | |
| **மொத்தம்** | | | | **03** | **35** | **09** | **07+05*** | |

*** தற்காலிகப் பணியாளர்கள்**

**கல்விசாராப் பணியாளர்கள் பற்றிய விபரம்:**

| **பீடம்/கிளை** | **அதி சிரேஷ்ட** | **சிரேஷ்ட பணியாளர்** | **கனிஷ்ட பணியாளர்** | **சிற்றூழியர்** |
|---|---|---|---|---|
| முகாமை, நிதி | 04 | 03 | 07 | 05 |
| பட்டப்பின் இடைநிலை அலகு | | | 10 * | |
| | | | | |
| **மொத்தம்** | **04** | **03** | **17** | **05** |

* விசேட ஏற்பாட்டில்

## 2.5.5. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:

| **விடயம்** | **வெளியீடுகள்** | **வணிக மயமாக்கப்பட்டமை** | **சமர்ப்பிப்புகள்** |
|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண். | 23 | | 11 |
| ஆ. புத்தாக்கங்களின் எண்ணிக்கை. | | | |
| இ. குறிப்பேடுகளின் எண்ணிக்கை | 01 | | |
| ஈ. நூல்களின் எண்ணிக்கை | 01 | | |
| c. கட்டுரைகளின் எண். | 03 | | |
| C. ஏனையவை | | | |
| **மொத்தம்** | 28 | | 11 |
| | | | |

| **துறை** | **சமர்ப்பிப்புகள்/ வெளியீடுகள்/ தெரிவிப்புகள் ஆராய்ச்சி/ பொழிப்புகள் / குறிப்பேடுகள்** | **தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் வாசித்த கட்டுரைகள்** | **கட்டுரைகள் மற்றும் நூல்கள்** | **அழைப்பு விரிவுரைகள்** |
|---|---|---|---|---|
| கணக்கீடு | - | 01 | - | - |
| வணிகப் பொருளியல் | | 01 | 04 | |
| வர்த்தகம், நிதி | 01 | 02 | - | - |
| மனித வள முகாமைத்துவம் | 01 | 06 | - | - |
| முகாமைத்துவ, நிறுவாகக் கற்கைகள் | 15 | - | 01 | - |
| சந்தைப்படுத்தல் | 01 | 04 | - | - |

பீடம் ஒழுங்குபடுத்திய அதன் 5ஆவது சர்வதேச ஆராய்ச்சி மகாநாட்டில் அந்தத் துறையில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் பங்குபற்றினர். கலாநிதி ஜி.ஏ.ரீ.ஆர். பெரேரா மற்றும் திரு. ஜே.ஏ.எஸ்.சி. ஜயசிங்க ஆகியோர் மகாநாட்டின் இணைத்தலைவர்களாகப் பங்குபற்றினர். 2010.12.10ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த ஆராய்ச்சிக் கூட்டத்தொடரில் பீடம் கொழும்பு வணிக குறிப்பேட்டை வெளியிட்டது.

## 2.5.6. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்:

| **விடயம்** | **சமுகமளித்தோர்** | **பூர்த்தி செய்தோர்** | **முன்வைப்புகள்** |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 02 | 02 | 01 |
| மொத்தம் | 02 | 02 | 01 |

## 2.5.7. கிடைத்த விருதுகள் பற்றிய விபரங்கள்:

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்வியியலாளர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ. உள்நாட்டு விருதுகள் | 01 | 01 | 02 |
| ஆ. தேசிய விருதுகள் | 01 | 01 | |
| இ. சர்வதேச விருதுகள் | | | |
| இ. ஏனையவை | | | 01 |
| **மொத்தம்** | **02** | **02** | **03** |

**கூட்டங்கள்**

மீளாய்வாண்டில் பீடச்சபை பத்து (10) முறை கூடியது. அதற்கு மேலதிகமாக, கிரமமான சில விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக துறைக் கூட்டங்கள், இணைந்த துறைப் பணியாளர் கூட்டங்கள் ஆகியனவும் நடைபெற்றன. பாடவிதான அபிவிருத்திக் குழு, பீடப் பரீட்சைகள் குழு, உயர் பட்டங்கள் குழு ஆகியவையும் கிரமமான தமது கூட்டங்களை நடத்தின.

**சர்வதேச ஆராய்ச்சி மகாநாடு மற்றும் ஏனைய சர்வதேச அலுவல்கள்**

பரிசீலனைக்குட்பட்ட இவ்வாண்டில் சர்வதேச விடயங்களிலும் பீடம் முனைப்பாக இருந்தது. 2010.12.10ஆம் திகதி முகாமைத்துவமும் நிதியும் பற்றிய அதன் ஐந்தாவது சர்வதேச ஆராய்ச்சி மகாநாட்டை பீடம் வெற்றிகரமாக நடத்தியது. கலாநிதி ஜி.ஏ.ரி.ஆர். பெரேரா மற்றும் கலாநிதி ஜே.ஏ.எஸ்.சி. ஜயசிங்க ஆகியோர் இணைத்தலைமை வகித்த மகாநாடு பரஸ்பரம் பயன்மிக்க சூழலில் தமது சர்வதேச சகாக்களுடன் தமது ஆராய்ச்சிப் பத்திரங்களை கலந்தாராய்வதற்கும் வாதிப்பதற்குமான உன்னதமான ஒரு தளத்தை உள்நாட்டு எழுத்தாளர்களுக்கு வழங்கியது.

பரிசீலனைக்குட்பட்ட இவ்வாண்டில், பீடம் பரந்த அடிப்படையிலான கல்விசார் ஒத்துழைப்புக்காக நோர்வே போடோ பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள முடிந்தது. மேலும், ஜப்பானியக் கல்வி அமைச்சின் உதவியுடன் டோக்கியோவில் உள்ள முகாமைத்துவக் கல்லூரிகளின் (மற்றும் பீடங்களின்) ஒரு நிறுவனமும் ஓர் அங்கீகாரம் பெற்ற 21ஆம் நூற்றாண்டின் குழுமமாகிய (ABEST21) வணிகக் கல்வி மற்றும் புலமைப்பரிசில் கூட்டமைப்பின் உறுப்பாண்மைக்கு மேற்கொள்ளப்பட்ட பீடத்தின் விண்ணப்பம் ABEST21இன் முன்னோடிக் குழுவின் விதப்புரையின் பிரகாரம் வெற்றிகரமாக அமைந்தது.

**மூலதனச் சந்தைத் தகவல் மையம் (CMIC)**

கைத்தொழிலில் அதன் கூட்டுழைப்பு மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான பீடத்தின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையாளமாக, இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழுவின் கூட்டுழைப்புடன் மூலதனச் சந்தைத் தகவல் மையம் (CMIC) ஒன்றை பீடம் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பித்து வைத்தது. இந்த விசேட மையம் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழுவினால் பேணப்படுகின்ற அல்லது அதனுடன் தொடர்பான பாரிய வீச்சிலான நேரடிக் கணனிவழித் தகவல்களை வழங்கியது. தற்போது இந்த மையத்தினால் வழங்கப்படும் சேவைகள் மாணவர்கள், பணியாளர்கள் ஆகிய இரண்டு தரப்பினராலும் தமது ஆராய்ச்சி, கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மிகக்கடுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்விடயத்தில் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு வழங்கிய உதவிக்காக பீடம் அதன் ஆழ்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

## 2.6. மருத்துவப் பீடம்

2010ஆம் கல்வியாண்டில் மருத்துவப் பீடம் பேராசிரியர் ஹர்ஷ ஆர். செனவிரத்ன அவர்களை தொடர்ந்தும் பீடாதிபதியாகக் கொண்டு இயங்கியது. மருத்துவப் பீடம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு எல்லா பல்கலைக் கழகங்களுக்குமான பொதுவான கலண்டரின் பிரகாரம் ஒருங்கிணைந்து செயற்படுவதற்குத் திட்டமிட்டது. 2010இல் உள்ளெடுக்கப்பட்ட எம்.பீ.பீ.எஸ். மாணவர்களுக்கான கற்கை நிகழ்ச்சித்திட்டம் 2010 ஜுலை 30ஆம் திகதி ஆரம்பமானது. எனினும், இடவசதியின்மை, பணியாளர்கள் போதாமை மற்றும் இறுதி ஆண்டு மாணவர்கள் 2010 மார்ச் மாதத்தில் தான் தமது கற்கைகளைப் பூர்த்தி செய்தல் ஆகிய காரணங்களால் பீ.எஸ்.சி இயன்மருத்துவ கற்கை நிகழ்ச்சித்திட்டம் 2010 மார்ச் வரை தாமதிக்கப்பட்டது.

2009 க.பொ.த. உயர் தர மாணவர் தொகுதியைச் சேர்ந்த சுமார் 200 மருத்துவ மாணவர்கள் 2010 ஜுலை 31ஆம் திகதி தமது பட்டக் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தனர். விஞ்ஞான பீடத்துடன் இணைந்து நடத்தப்படுகின்ற மருந்தியலில் பீ.எஸ்சி கற்கை நெறியில் 2008/2009 க.பொ.த. உயர் தர தொகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தமது கற்கைகளைப் பீடத்தில் ஆரம்பித்தனர். இது இந்தக் கற்கை நெறிக்கு உள்ளெடுக்கப்பட்ட 12ஆவது தொகுதியாகும்.

இது மருத்துவ பீடத்துக்கும் பூட்டான் முடியரசு அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இணைந்து கொண்ட பத்து (10) பூட்டான் மருத்துவப் பட்டதாரி மாணவர்களையும் உள்ளடக்குகின்றது.

பீடத்தினால் நடத்தப்பட்ட பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டம் கற்கை நெறி அடிப்படையிலான நீடிப்புக் கற்கை நெறிகள் மற்றும் ஆராய்ச்சிப் பட்டக் கற்கை நெறிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாணவர்கள் இந்த வருடத்தில் தமது பிஎச்.டி பட்டங்களைப் பூர்த்தி செய்தனர். இந்த ஆண்டில், பீடத்தில் உள்ள கல்விசார் பணியாளர்கள் கற்கைச் சபைகளின் உறுப்பினர்கள் என்ற வகையில் தமது சேவைகளை நல்குதல், விரிவுரைகளை நடத்துதல், பயிற்றுவிப்பாளர்கள் (பிணி ஆய்வுத் துறை), ஆராய்ச்சி மேற்பார்வையாளர்கள், பரீட்சகர்கள் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் கணிசமான பங்களிப்பை வழங்கினர்.

ஆயிரத்து ஐம்பத்தொன்றுக்கும் (1051) அதிகமான மாணவர் தொகையையும் நானூற்று ஐம்பது (450) கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்களையும் கொண்ட மருத்துவ பீடத்தில் இடவசதி ஒரு பாரிய பிரச்சினையாகும். வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகளின் காரணமாக விரிவாக்கச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. அதே பிரச்சினை காரணமாக பீ.எஸ்சி இயன்மருத்துவம் நிகழ்ச்சித்திட்டம் வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு வீட்டில் நடத்தப்பட்ட அதேவேளை, புதிய துணைமருத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் அறிமுகமும் தாமதப்படுத்தப்பட்டது. போதிய உணவக இடவசதி மற்றும் மாணவர்கள் கற்பதற்கான இடவசதி ஆகியவை போதாமை விரைவில் நிவர்த்திக்கப்பட வேண்டிய சிக்கலான பிரச்சினைகளாகும். பீடத்துக்குப் பொருத்தமான ஒரு நூலகமும் இல்லை. விரிவுரை / தனிமுறைப் போதனை அறைகள் மற்றும் பொருத்தமான கணனி நிலையம் ஆகியவை இல்லாதிருத்தல் ஏற்கனவே மாணவர்களையும் அவ்வாறே விரிவுரையாளர்களையும் ஒரே விதமாகப் பாதித்துள்ளன. கல்விசார் பணியாளர்களுக்கு வெளிநாட்டு பட்டப்பின் கற்கை வாய்ப்புகளை ஏற்பாடு செய்வதும் நிவர்த்திக்கப்பட வேண்டிய ஒரு பாரிய பிரச்சினையாக ஆகியுள்ளது. ஆகக்குறைந்தது நானூறு மாணவர்களையேனும் உள்ளடக்கக்கூடிய பொருத்தமான பரீட்சை மண்டபம் ஒன்று இல்லாதிருத்தல் பீடம் எதிர்நோக்கும் மற்றுமொரு பாரிய பிரச்சினையாகும். எனினும், பீடத்தினால் திரட்டப்பட்ட நிதியிலிருந்து ரூபா 5 மில்லியன் செலவில் புதிய கற்கைப் பிரதேசத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் (UFM) மெய்நிகர் கற்றல் நிலையம் பிணி ஆய்வு மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் மெய்நிகர் கற்றல் நிலையத்தின் (VLC) தலைவருமான டாக்டர் சேனக ராஜபக்ஷ அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. மெய்நிகர் கற்றல் நிலையம் அறுபத்தொன்பது (69) மாணவர்களுக்கு இடவசதி அளிக்கக்கூடியதாக இருப்பதுடன் ஒரு மத்திய சேவையகத்தையும் கொண்டுள்ளது. இந்த ஆய்வு கூடத்தின் ஒரு பகுதி சிலவேளைகளில் மொழிக்கற்கைகளை நடத்துவதற்காக மொழி நிலையத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

பீடம் ரூபா எட்டு மில்லியன் செலவில் அதன் தகவல் தொழில்நுட்ப (IT) வலையமைப்பில் பாரிய மேம்பாட்டுத் திட்டமொன்றைப் பூர்த்தி செய்தது. மண்டப ஒதுக்கீடு, ஆவணங்களை சுழற்சிப்படுத்தல் மற்றும் பணியாளர்கள், மாணவர்களிடையே இலத்திரனியல் ரீதியான தொடர்பாடல் ஆகியவற்றுக்கு வசதியளிப்பதற்காக ஆவண முகாமைத்துவ முறைமை (DMS) மென்பொருள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. எல்லா மாணவர் மற்றும் பணியாளர் சமூகத்துக்கும் மின்னஞ்சல் கணக்கை வழங்குவதற்கும் திட்டமிடப்படுகின்றது. IT குழு பீடத்தின் ‘மூடில்’ (MOODLE)ஐப் பயன்படுத்தி பீடத்தின் கற்றல் முகாமைத்துவ முறைமையை விருத்தி செய்யும் நடவடிக்கை முறையை மேற்கொண்டுள்ளது.

## 2.6.1. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**கற்கை நெறிகள்**
**நீடிப்புக் கற்கை நெறிகள்**

பீடம் கீழே கொடுக்கப்பட்டுள்ள நீடிப்புக் கற்கை நெறிகளைத் தொடர்ந்தும் நடத்தியது.

| கல்விநெறி | சேர்க்கப் பட்டோர் | தகுதி பெற்றோர் |
|---|---|---|
| உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், மரபணுத் தொழில்நுட்பவியலில் எம்.எஸ்.சி. | 09 | 03 |
| நஞ்சியலில் பட்டப்பின் டிப்பளோமா | -- | -- |
| சட்ட மருத்துவம் மற்றும் விஞ்ஞானத்தில் டிப்புளோமா | 68 | -- |
| தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் டிப்புளோமா | 09 | பூர்த்திசெய்யப்படவில்லை |
| தொழில் சுகாதாரம் மற் றும் பாதுகாப்பில் சான்றிதழ் கற்கை நெறி | 02 | 0 |
| மனித போசாக்கு மற்றும் உணவு விதிமுறையில் சான்றிதழ் | 10 | * |
| உயிர்-புள்ளிவிபரவியல் மற்றும் தொற்றுநோயியலில் சான்றிதழ் | 18 | |

| | | |
|---|---|---|
| கற்கை நெறி | | 14 |
| அனர்த்த முகாமைத்துவத்தல் டிப்புளோமா கற்கை நெறி (கணனி வழி) | 29 | -- |
| பிணிஆய்வு மரபணுவியலில் எம்.எஸ்சி | 06 | -- |
| மரபணுவியல் நோயறுதியில் எம்.எஸ்சி | 06 | -- |
| சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டப்பின் டிப்புளோமா | - | - |

**பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- மருத்துவ மற்றும் அறுவைச்சிகிச்சை இளமாணி
- விஞ்ஞான இளமாணி - இயன்மருத்துவம் (விசேடம்) (4 வருட காலம்)

**பட்டப்பின் கற்கை நிகழ்சித்திட்டங்கள்**

- உயிர்இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் மரபணுத் தொழில்நுட்பத்தில் எம்.எஸ்சி.
- பிணிஆய்வு மரபணுவியலில் எம்.எஸ்சி.
- மரபணுவியல் நோயறுதியில் எம்.எஸ்சி.
- நஞ்சியலில் பட்டப்பின் டிப்புளோமா
- சுகாதார அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்புளோமா

## 2.6.2. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**புதிய (பட்டதாரி) மாணவர் அனுமதி – (2010 க.பொ.த. உயர்தரம்)**
*(பீடம் மற்றும் பால் ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| மருத்துவம் | 121 | 109 | 230 |

**பட்டதாரி மாணவர் தொகை – 2010**
*(பீடம் மற்றும் பால்நிலை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் | மாணவர் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| மருத்துவம் | 589 | 562 | 1151 |

**பட்டதாரி மாணவர் உள்ளெடுப்பு**

*(பிறந்த மாவட்டம் மற்றும் பீடம் வாரியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் மற்றும் க.பொ.த. (உ/த) / மாவட்டம் | மருத்துவம் |
|---|---|
| கொழும்பு | 114 |
| கம்பஹா | 15 |
| களுத்துறை | 09 |
| மாத்தளை | -- |
| கண்டி | 04 |
| நுவரெலியா | -- |
| காலி | 13 |
| மாத்தறை | 25 |
| அம்பாந்தோட்டை | 07 |
| யாழ்ப்பாணம் | |
| கிளிநொச்சி | -- |
| மன்னார் | -- |
| முல்லைத்தீவு | -- |
| வவுனியா | 02 |
| திருகோணமலை | |
| மட்டக்களப்பு | 02 |

| | |
|---|---|
| அம்பாறை | 01 |
| புத்தளம் | 01 |
| குருணாகல் | 09 |
| அனுராதபுரம் | 01 |
| பொலனறுவை | |
| பதுளை | 07 |
| மொனராகலை | |
| கேகாலை | 05 |
| இரத்தினபுரி | 03 |
| வெளிநாடு | 12 |
| **மொத்தம்** | **230** |

**பட்டதாரி மாணவர் உள்ளெடுப்பு**
*(பீடம் மற்றும் சமய ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| மதம் / பீடம் | பௌத்தம் | ரோமன் கத்தோலிக்க | கிறிஸ்தவம் | இந்து | முஸ்லிம் | வேறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவம் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு | 905 | 52 | 33 | 30 | 27 | | **1047** |
| | | | | | | | |

**பட்டதாரி மாணவர் உள்ளெடுப்பு**
*(பிறந்த மாவட்டம் மற்றும் பீடம் வாரியாக வகைப்படுத்தப்பட்டது)*

| பீடம் மற்றும் க.பொ.த. (உ/த) / மாவட்டம் | மருத்துவம் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு |
|---|---|
| **கொழும்பு** | 666 |
| **கம்பஹா** | 40 |
| **களுத்துறை** | 35 |
| மாத்தளை | 19 |
| **கண்டி** | 19 |
| நுவரெலியா | -- |
| காலி | 48 |
| **மாத்தறை** | 38 |
| **அம்பாந்தோட்டை** | 12 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | -- |
| மன்னார் | -- |
| முல்லைத்தீவு | 08 |
| வவுனியா | -- |
| திருகோணமலை | -- |
| **மட்டக்களப்பு** | 04 |
| **அம்பாறை** | 12 |
| புத்தளம் | 04 |
| **குருணாகல்** | 17 |
| அனுராதபுரம் | 11 |
| பொலனறுவை | -- |
| பதுளை | 29 |
| மொனராகலை | -- |
| **கேகாலை** | 18 |
| **இரத்தினபுரி** | 19 |
| **வெளிநாடு** | 38 |
| **மொத்தம்** | **1047** |

## 2.6.3. வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

மருத்துவ பீடத்துக்கும் பூட்டான் முடியரசின் அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் பத்து (10) பூட்டான் மருத்துவ மாணவர்கள் மருத்துவ பட்டதாரி மாணவர்களாக பீடத்தில் சேர்ந்துகொண்டனர்.

## 2.6.4. மொத்த கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள்

### பணியாளர்கள்

2010ஆம் ஆண்டில், நிரந்தர கல்விசார் பணியாளர் குழுவில் எட்டு (8) சிரேஷ்ட பேராசிரியர்கள், இருபது (20) பேராசிரியர்கள், இரண்டு (02) துணைப் பேராசிரியர்கள், அறுபத்து மூன்று (63) சிரேஷ்ட விரிவுரையாளர்கள், நாற்பத்திரண்டு (42) விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு (1) சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் ஆகியோரை உள்ளிட்ட 136 உறுப்பினர்கள் இருந்தனர்.

விரிவாக்கப்பட்ட பீடம் கொழும்பு வைத்திய சாலைகள் குழுமத்தில் உள்ள 90 உசாத்துணையாளர்கள், கொழும்பிலுள்ள சட்ட மருத்துவ அலுவலர்கள், மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவகத்தின் உசாத்துணையாளர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள், மாவட்ட வைத்தியசாலைகள், சுற்றயல் கூறுகள், மாநகர மருந்தகங்கள் ஆகியவற்றில் உள்ள மருத்துவ அலுவலர்கள், சுகாதார மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுமார் பதினான்கு பொதுப் பயிற்சியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

### புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இளைப்பாறல்கள்

#### இளைப்பாறல்கள்

- சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. டபிள்யூ. பதிரண
- பேராசிரியர் டி.என். பெர்னாந்து

#### பதவி உயர்வுகள்

| பெயர் | பதவி | துறை |
|---|---|---|
| கலா. பீ.ஜே. வீரசுந்தர | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். I | சட்ட மருத்துவம் |
| கலா. எஸ். ஸ்ரீ ரங்கநாதன் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். I | மருந்தாக்கவியல் |
| கலா. ஏ.ஏ.பி.ரி. சாங்க் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். II | பிணி ஆய்வு மருத்துவம் |
| கலா. பி. கட்டுலந்த | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். II | பிணி ஆய்வு மருத்துவம் |

#### புதிய நியமனங்கள்

| பெயர் | தொழில் | துறை |
|---|---|---|
| கலா. டி.சி. ரணசிங்க | விரிவுரையாளர் | இயன்மருத்துவம் |
| கலா. எஸ்.எம். சேனநாயக்க | விரிவுரையாளர் | மனநோய் மருத்துவம் |
| கலா. சி.எம். ராஜசூரிய | விரிவுரையாளர் | மனநோய் மருத்துவம் |
| கலா. எல்.ஆர்.எம். தயாபண்டார | விரிவுரையாளர் | மனநோய் மருத்துவம் |
| கலா. டி.எம்.எஸ்.எம். அபேசேகர | விரிவுரையாளர் | சமூக மருத்துவம் |
| கலா. எஸ். செனவிரத்ன | விரிவுரையாளர் | குழந்தை மருத்துவம் |
| கலா. வை.டபிள்யு.எஸ். சுரனதி | விரிவுரையாளர் | நுண்ணுயிரியல் |

திரு. பி.எம்.எஸ். பண்டார, எச்.ஜி.டி. சிறியாணி மற்றும் திரு. கோலித பண்டார ஆகியோர் முறையே பிரதிப் பதிவாளர், உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவிகளைத் தொடர்ந்தும் வகித்தனர். திரு. பி.எம்.எஸ் பண்டார 2010 ஏப்ரல் முதல் ஆறு மாத காலத்துக்கு பல்கலைக் கழகத்தின் பதில் பதிவாளராகவும் பதவி வகித்தார்.

### 4.6.5. ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

**வெளியீடுகள் மற்றும் சமர்ப்பிப்புகள்**

| துறை | சமர்ப்பிப்புகள்/வெளியீடுகள்/ தெரிவிப்புகள்/ஆராய்ச்சி/ பொழிப்புகள்/குறிப்பேடுகள் | தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் வாசித்த கட்டுரைகள் | கட்டுரைகள் மற்றும் நூல்கள் | அழைப்பு விரிவுரையாளர்கள் | பட்டமளிப்புப் பேருரைகள் | ஆதிதி விரிவுரையாளர்கள் | பேருரைகள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| உடலமைப்பியல்+மனித மரபணு | 05 | 21 | -- | 01 | 01 | 05 | -- | 09 |
| பிணி ஆய்வு மருத்துவம் | 27 | 20 | 27 | 14 | | 7 | | |
| சமூக மருத்துவம் | 55 | 22 | 10 | 18 | 01 | 01 | -- | -- |
| உயிர் இரசாயனவியல் | 15 | 01 | 01 | | | | | |
| சட்ட மருத்துவம் | 15 | 09 | 03 | 03 | | 01 | | |
| மகப்பேறு, பெண்நோயியல் | 18 | 17 | 02 | 05 | - | - | - | 03 |
| நுண்ணுயிரியல் | 05 | 25 | 02 | 32 | | | 01 | 01 |
| குழந்தை மருத்துவம் | 39 | | | | | | | |
| ஒட்டுண்ணியியல் + MRU | 15 | 11 | 33 | 02 | -- | 02 | -- | -- |
| நோயியல் | 06 | 06 | - | 04 | - | 02 | - | - |
| மருத்தாக்கவியல் | 14 | 15 | 7 | 2 | - | 1 | - | - |
| மருந்தகவியல் | 1 | 1 | - | - | - | - | - | 2 |
| உடற்றொழிலியல் | 23 | - | 02 | - | | - | - | 02 |
| உளவியல் மருத்துவம் | 30 | 16 | 20 | 05 | - | 04 | - | 02 |
| அறுவை மருத்துவம் | 23 | 28 | | 07 | | | | |
| விலங்கு மனை | 03 | | | | | | | |
| MEDARC | 15 | 4 | 6 | 5 | - | 2 | - | 25 |
| மனித மரபணுவியல் அலகு | 06 | 02 | 01 | 01 | -- | -- | -- | -- |

### 2.6.6 கிடைத்த விருதுகள் பற்றிய விபரங்கள்

பின்வருபவை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிய சாதனைகளாகும்:

1. திரு. டபிள்யூ. பதிரண (இளைப்பாறிய சிரேஷ்ட மருந்தியல் விரிவுரையாளர் மற்றும் மருந்தியலில் பீ.எஸ்சி) மற்றும் மருந்தியல் பீ.எஸ்சி மாணவி செல்வி. சந்தமாலி சேனநாயக்க ஆகியோருக்கு "இயற்கை ஆக்கக்கூறு பற்பசை" உற்பத்திக்கான ஆக்க உரிமை வழங்கப்பட்டது.
2. உலகளாவிய சுகாதாரம் பற்றிய சர்வதேச மகாநாடு பொது சுகாதார ஆசிய பசுபிக் அகடமிக் கொன்சோட்டியம் மற்றும் பீடம் ஆகியவற்றினால் இணைந்து 2010 ஜுலையில் நடத்தப்பட்டது.
3. சிறந்த சுவரொட்டிக்கான முதலாவது பரிசு மலேசியாவில் சர்வதேச மருத்துவக் கல்வி மகாநாட்டில் பேராசிரியர் ஏ.ஜே.பெரேரா மற்றும் டாக்டர் பி.கலப்பத்தி ஆகியோரினால் பெறப்பட்டது.
4. இலங்கையில் முதன் முதலாக ஒரு நோயாளிக்கு ஈரல் மாற்று சிகிச்சை பேராசிரியர் மந்திக விஜேரத்ன மற்றும் பீடத்தில் உள்ள அறுவைச் சிகிச்சை மருத்துவத் துறையைச் சேர்ந்த ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.
5. பின்வரும் பணியாளர் குழு உறுப்பினர்களுக்கு விஞ்ஞானக் குறிப்பேடுகளில் எடுத்தாளலுக்கான ஜனாதிபதி விருது கிடைத்தது.

| துறை | கல்விசார் பணியாளர்கள் |
|---|---|
| உடலமைப்பியல் | பேரா. ரொஹான் ஜயசேகர கலா.வஜிர திசாநாயக்க |
| பிணிஆய்வு மருத்துவம் | கலா. சேனக ராஜபக்ஷ |
| சமூக மருத்துவம் | பேர. துலிதா பர்னாந்து கலா. சி. அரம்பேபால<br>கலா. உபுல் செனரத் |
| உயிர் இரசாயனவியல் | பேரா. எஸ். அத்துகோரல<br>கலா. எஸ். விஜேசுந்தர |

| | |
|---|---|
| நுண்ணுயிரியல் | பேரா. ஜெனிபர் பெரேரா<br>கலா. இனோகா கொரியா<br>கலா. உசானி ராஜபக்ஷ |
| மகப்பேறு, பெண்நோயியல | பேரா. எச்.ஆர். செனவிரத்ன<br>பேரா. சந்திரிகா விஜேரத்ன<br>திருமதி சுமேதா விஜேரத்ன<br>கலா. எஸ்.எச். தொடம்பகல |
| குழந்தை மருத்துவம் | பேரா. மனோரி சேனநாயக்க |
| ஒட்டுண்ணியியல் | பேரா. நதீரா கருணவீர<br>பேரா. தீபிகா பர்னாந்து<br>கலா. சிசிர பதிரன<br>கலா. ஷாமினி குணவர்தன<br>கலா. யமுனா சிறிவர்தன |
| நோயியல் | பேரா. சந்து த சில்வா |
| மருந்தியல் | பேரா. ரோஹினி பர்னாந்துபுள்ளே |
| உடற்றொழிலியல் | கலா. எஸ். வாசலதந்திரி<br>கலா. அஞ்ஜலா த சில்வா |
| உளவியல் மருத்துவம் | பேரா. கேமாமாலி பெரேரா |

6. பல்கலைக்கழக உளவியல் பிரிவுக்கு 2007ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய வைத்தியசாலை சுகாதார உன்னத விருது (தங்கம்) வழங்கப்பட்டது.
7. பீடாதிபதி, கலாநிதி இந்திக கருணாதிலக, கலாநிதி கொமிந்த பொன்னம்பெரும, பேராசிரியர் நந்ததேவ சமரசேகர, பேராசிரியர் ரோஹினி செனவிரத்ன, கலாநிதி டி.ஜே.அந்தனி மற்றும் கலாநிதி ரி.சாங் ஆகியோரை உள்ளிட்ட குழு நேபாள லும்பினி மருத்துவக் கல்லூரியின் வேண்டுதலின் பிரகாரம் அதன் கல்விமான்கள் மற்றும் நிர்வாகிகளின் குழுவொன்றைச் சந்திப்பதற்கு நியமிக்கப்படது.

8. 2010 ஏப்ரலில் தாய்வான் தாய்பேயில் நடைபெற்ற குழந்தை மருத்துவ ஆராய்ச்சிக்கான ஆசிய சங்க 6ஆவது காங்கிரசில் அதிசிறந்த சுவரொட்டி விருது கலாநிதி ஷாலினி ஸ்ரீரங்கநாதன், கலாநிதி ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் கலாநிதி பீ.பி.எஸ்.எச். பெனரகம ஆகியோரால் வெல்லப்பட்டது.

9. மருத்துவ பீட பௌத்த சகோரத்துவத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ‘வஸ்ஸன தியவர’ 2010 ஏப்ரலில் துனுமத்தலாவ கிராமத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

10. குறைந்த-மத்திய வருமான நாடுகளிலிருந்து அதிசிறந்த பிணி ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஜோன் ஜே. சியாரோ IJGO பரிசுப் பத்திர விருது சர்வதேச மகப்பேறு, பெண்நோயியல் குறிப்பேட்டினால் கலாநிதி சி.அரம்பேபொல மற்றும் கலாநிதி டெவ்லிகர் ஆகியோருக்கு 2009இல் வெளியிடப்பட்ட அவர்களின் ‘கருப்பையின் அடிப்பாகத்தின் தடிப்பத்தை அளவிடுவதற்காக வயிற்றுச் சுவரை ஊடுகடந்து செல்கின்ற மற்றும் யோனிவழி ஊடுகடந்து செல்கின்ற அதீத ஒலிஅலை ஒப்பீடு’ கட்டுரைக்காக வழங்கப்பட்டது.

## 2.6.7. ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகள் பற்றிய விபரங்கள்

பீடத்தின் மனித மரபணுவியல் அலகு மரபணுவியல் நோயறுதி, பிணி ஆய்வு மரபணுவியல் மற்றும் புத்துயிர்ப்பு மருத்துவம் ஆகிய துறைகளில் மூன்று வெவ்வேறான எம்.எஸ்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

**கூட்டங்களும் குழுக்களும்**

மீளாய்வாண்டில் பீடச்சபை பதினான்கு (14) கூட்டங்களை நடத்தியது. பாடவிதான அபிவிருத்தி மற்றும் அபிவிருத்திக் குழு, ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டக் குழு, ஒழுக்க நன்னெறி மீளாய்வுக்குழு மற்றும் அனுமதிக்குழு ஆகியவையும் கிரமமாக கூட்டங்களை நடத்தின. இந்தக் குழுக்களின் கூட்ட அறிக்கைகள் பீடச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு மூதவைக்கு விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.

**பீடத்துக்கு விஜயம் செய்தவர்கள்**

அதிமேதகு டாஷோ பாப் கிசாங் - பூட்டான் தூதுவர்

**சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்புகள்**

| | | |
|---|---|---|
| பேரா. பர்னாந்து டி.என் | பேரா. பெரேரா ஏ.ஜே | பேரா. செனவிரத்ன எச்.ஆர் |
| கலா. வீரசிங்க எம்.சி | கலா.அரம்பேபால என்.எம்.சி.கே | கலா. செனரத் எல்.டி.ஜே.யு |
| பேரா. விஜேரத்ன சி.என் | கலா. தொடம்பகல எஸ்.எச் | பேரா. லமாபதுசூரிய எஸ்.பி |
| பேரா. கருணவீர என்.டி | பேரா. பர்னாந்துபுள்ளே பீ.எம்.ஆர் | பேரா. த ஏப்ரூ கே |
| கலா. காரியவசம் எச் | திரு. பதிரன டபிள்யு | கலா. விஜயபண்டார எம்.டி.ஜே |
| பேரா. மென்டிஸ் என் | பேரா. சமரசிங்க டி | கலா. கருணதிலக ஐ.எம் |
| கலா. டி.ஜே அந்தோனி | கலா. அதுல களுஆரச்சி | |

**தேசிய மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்புகள்**

| | | |
|---|---|---|
| பேரா. ஜயசேகர எம்.எம்.ஆர்.டபிள்யு | பேரா. சுனேத்ரா அத்துக்கோரால | பேரா. மத்தியூ சி.பி.டி.டபிள்யு |
| கலா. விஜேசுந்தர டபிள்யு.எஸ்.எஸ் | பேரா. பர்னாந்து டி.என் | கலா. அரம்பேபொல என்.எம்.சி.கே |
| பேரா. செனவிரத்ன ஆர் த ஏ | திருமதி. லங்காதிலக கே. | கலா. குணவர்தன என்.எஸ் |
| கலா. செனரத் எல்.டி.ஜே.யு | கலா. வீரசிங்க எம்.சி | கலா. டி.பி.டி.எல் சமரநாயக்க |
| கலா. வெலியங்க ஏ.ஏ.எஸ்.எச் | பேரா. ரிஸ்வி ஷெரி∴ப் | |
| கலா. லனரொலே ஆர்.டி | கலா. கடுலந்த பி | பேரா. லமாபதுசூரிய எஸ்.பி |
| பேரா. பர்னாந்து எஸ்.எஸ் டி | கலா. கருணாநாயக்க பி | கலா. குணதுங்க எம்.டபிள்யு |
| பேரா. சேனநாயக்க எம்.பி | கலா. த சில்வா ஷம்யா | பேரா. பெரேரா ஏ.ஜே |
| கலா. அஜந்தன் ஆர் | பேரா. செனவிரத்ன எச்.ஆர் | கலா. சேனநாயக்க சி.பி |
| கலா. ரொட்ரிகோ இஷானி | திருமதி. விஜேரத்ன எஸ் | பேரா. ரந்தெனிய சி |
| கலா. விக்ரமசிங்க வி.பி | பேரா. கருணவீர என்.டி | கலா. பர்னாந்து டி |
| கலா. செனரத் எல் டி ஜே யு | கலா. பதிரன எஸ் | கலா. ஸ்ரீ ரங்கநாதன் எஸ் |
| கலா. கொரிய இ | பேரா பர்னாந்துபுள்ளே பி.எம் ஆர் | கலா. அபயதீர ஏ.யு |
| கலா. சமரசேகர டி.டி | கலா. கலப்பத்தி பி | கலா. வீரசிங்க எம்.சி |
| கலா. களுஆரச்சி ஏ | பேரா. மென்டிஸ் என் | திருமதி. த சொய்சா பி |
| பேரா. விஜேரத்ன சி.என் | பேரா. சமரசிங்க டி | பேரா. சமரசேகர டி.என் |
| கலா. தொடம்பகல எஸ்.எச் | கலா. த சில்வா வருணி | பேரா. ஜயகொடி ஆர்.எல் |
| கலா. டயஸ் எம்.என்.ஜே.ஆர் | பேரா. த அப்ரூவ் கே | பேரா. விஜெயரத்ன எஸ்.எம் |
| கலா. த சொய்சா எம்.ஐ.எம் | பேரா. அங்குனவெல பி | |

## 2.7 விஞ்ஞான பீடம்

**அறிமுகம்**

பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன 2011 ஜனவரி 08ஆம் திகதி வரை பீடத்தின் பீடாதிபதியாகத் தொடர்ந்தும் சேவையாற்றினார். பீடம் அதன் கல்விசார் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றது.

இவ்வாண்டில், இரண்டு புதிய விரிவாக்கு ப்படுத்தல் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவையாவன: EC 2001 புகைப்படக்கலை மற்றும் EC 1004 – தகவல் திறன்கள் அபிவிருத்தி.

சுற்றாடல் விஞ்ஞானத்தில் புதிய சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று விலங்கியல் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

கைத்தொழில் புள்ளிவிபரவியல் மற்றும் கணிதவியல் நிதி கணனி ஆய்வுகூடங்கள் 2010 ஜனவரி 07ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டன. தாவர விஞ்ஞானங்கள் துறையைச் சேர்ந்த கலாநிதி ரி.எல்.எஸ். திரிமான புதிய பட்டக் கற்கைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். முதல் அரையாண்டுப் பரீட்சைகள் ஜனவரி 18ஆம் திகதி ஆரம்பமாயின. வருடாந்த ஆராய்ச்சி மகாநாடுகள் மே 12 மற்றும் 13ஆம் திகதிகளில் நடைபெற்றன.

பின்வரும் செயலமர்வுகள் நடைபெற்றன:

- அணுக்கரு விஞ்ஞானத் துறையினால் நடத்தப்பட்ட மருத்துவ கதிரியக்கவியலில் கதிர்வீச்சுப் பாதுகாப்பு.
- CELESTRA 2010 – கணிதவியல் மற்றும் வானியல் சங்கத்தினால் நடத்தப்பட்டது.
- விலங்கியல் துறையினால் நடத்தப்பட்ட அனர்த்த இடர் குறைப்பு மற்றும் முதலுதவி

2009/2010 புதிய மாணவர் தொகுதி உள்ளெடுப்பு 2010 ஜுலையில் மேற்கொள்ளப்பட்டு 2010 ஆகஸ்ட் 30ஆம் திகதி புதிய கல்வியாண்டு ஆரம்பமானது.

புத்தள என்னுமிடத்தில் கல்விக்கூடம் ஒன்றைத் தாபிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை பீடம் ஏற்றுக்கொண்டது.

கூட்டாண்மை நிதியில் புதிய டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டம் ஒன்று கணிதவியல் துறையினால் ஆரம்பிக்கப்பட்டது.

## 2.7.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

### கற்கைநெறிகள்

#### பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்

2010.08.30ஆம் திகதி 2009 க.பொ.த. (உ/த) தொகுதியைச் சேர்ந்த புதிய மாணவர்கள் பீடத்தில் அனுமதிக்கப்பட்டனர். பௌதீக விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அனுமதிக்கப்பட்ட பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை முறையே 240 மற்றும் 122 ஆகும். அதற்கு மேலதிகமாக இரண்டு நேரடி உள்ளெடுப்புகளாக 48 மற்றும் 65 மாணவர்கள் முறையே மூலக்கூற்று உயிரியல், உயிர் இரசாயனம் மற்றும் கைத்தொழில் புள்ளிவிபரவியல், கணிதவியல் நிதி கற்கை நெறிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பீடம் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாகவும் திட்டமிட்டவாறும் நடத்தியது.

#### விஞ்ஞான இளமாணி (பொதுப்பட்டம்) (3 வருட காலம்)

- உயிரியல் விஞ்ஞானங்கள்
- பௌதீக விஞ்ஞானங்கள்
- மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனம்
- கைத்தொழில் புள்ளிவிபரவியல் மற்றும் கணிதவியல் நிதி

### பீடத்திலுள்ள பட்டதாரி மாணவர்களின் பெறுபேறுகள் - 2010

***(துறை / குறிப்பாக வகுப்பு மற்றும் பால் ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)***

| துறை | 1ஆம் வகுப்பு | | 2ஆம் மேல் | | 2ஆம் கீழ் | | சாதாரண சித்தி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| **பொதுப் பட்டம்** | | | | | | | | | | |
| உயிரியல் விஞ்ஞானம் | - | 02 | 01 | 02 | 01 | 05 | 11 | 17 | 13 | 26 |
| பௌதிக விஞ்ஞானம் | | | | | 03 | 05 | 47 | 25 | 50 | 30 |
| மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல் | | | | | | 01 | 10 | 06 | 10 | 07 |
| கைத்தொழில் புள்ளிவிவரவியல், கணிதவியல் நிதி | | 01 | 01 | | | | 21 | 01 | 22 | 02 |
| **சிறப்புப் பட்டம்** | | | | | | | | | | |
| தாவர விஞ்ஞானம் | | | | | | | | | | |
| தாவர உயிர்த்தொழில்நுட்பவியல் | | 01 | | 01 | | 03 | | 04 | | 09 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயிர்த் தகவல்நுட்பம் | | | | | 01 | 02 | | | 01 | 02 |
| இரசாயனவியல் | | 07 | 01 | 04 | 02 | 04 | 03 | 03 | 06 | 18 |
| கணிப்பு இரசாயனம் | | | | 01 | 02 | 02 | 02 | 01 | 04 | 04 |
| இரசாயன உயிரியல் | | | | | 03 | 02 | | 01 | 03 | 03 |
| மருந்தியல் | | 02 | 01 | 01 | | 02 | 04 | 02 | 05 | 07 |
| மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல் | | 06 | 02 | 04 | | 05 | | 01 | 02 | 16 |
| பௌதிகவியல் | 02 | 02 | 05 | 01 | | | | | 07 | 03 |
| கணிப்புப் பௌதிகவியல் | | 01 | 02 | 01 | 05 | | 01 | | 08 | 02 |
| பொறியியல் பௌதிகவியல் | | 01 | 02 | 02 | 01 | 01 | 02 | | 05 | 04 |
| கணிதவியல் | | | | | | | | | | |
| கணிதவியல் நிதி | 01 | 02 | | 01 | 02 | 02 | 02 | | 05 | 05 |
| மரபுமுறையான கணிதவியல் | 01 | 01 | | | | | 03 | 01 | 04 | 02 |
| நிதி, வியாபார மற்றும் கணிப்புக் கணிதவியல் | 01 | | | 02 | | 03 | 05 | 01 | 06 | 06 |
| கணனி விஞ்ஞானத்துடன் கணிதவியல், புள்ளிவிபரவியல் | | | 01 | 01 | | | 01 | | 02 | 01 |
| புள்ளிவிபரவியல் | | 03 | 02 | 01 | | 01 | 01 | 02 | 03 | 07 |
| கணனி விஞ்ஞானத்துடன் புள்ளிவிபரவியல் | 01 | 02 | 02 | 03 | 01 | | 01 | | 05 | 05 |
| கைத்தொழில் புள்ளிவிபரவியல் | | 01 | 01 | | 04 | 02 | 02 | | 01 | 03 |
| விலங்கியல் | | | | 03 | 02 | | | | 02 | 03 |
| **நான்கு வருட பொதுப் பட்டம்** | | | | | | | | | | |
| உயிரியல் விஞ்ஞானம் | | | | | 01 | | | 01 | 01 | 01 |
| மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல் | | | | | | 01 | 01 | 02 | 01 | 03 |
| கைத்தொழில் புள்ளிவிபரவியல், கணிதவியல் | | | | | 01 | | 02 | 02 | 03 | 02 |
| பௌதிக விஞ்ஞானம் | | | 01 | | 02 | 04 | 08 | 04 | 11 | 08 |

**பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்**

தத்துவ முதுமாணி / தத்துவக் கலாநிதி
விஞ்ஞான முதுமாணி
- பிரயோக சேதன இரசாயனம்
- பகுப்பாய்வு இரசாயனம்
- பிரயோக இலத்திரனியல்
- கமத்தொழில் நுண்ணுயிரியல்
- பிரயோகப் புள்ளிவிபரவியல்
- வளிமண்டலப் பௌதீகவியல், இயக்க வானியல் மற்றும் இயற்கை அனர்த்த ஆயத்த நிலை
- இரசாயனக் கல்வி
- சுற்றாடல் விஞ்ஞானம்
- பௌதீகக் கல்வி
- தாவரக் கலம் மற்றும் இழைய வளர்ப்பு
- கணிதவியல் கல்வி
- கணிதவியல் நிதி

## பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர்களின் உள்ளெடுப்பு

*(பட்டம் மற்றும் பால் ரீதியாக வகைப்படுத்தப்பட்டது)*

| துறை | கல்விநெறி | ஆரம்பமானது/ தொடர்கின்றது | இணைப்பாளர் | மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | |
| விலங்கியல் | சுற்றாடல் விஞ்ஞானத்தில் 10வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | பேரா. வை.என்.ஏ ஜயதுங்க | 04 | 11 | 15 |
| விலங்கியல் | சுற்றாடல் விஞ்ஞானத்தில் 11வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | பேரா. வை.என்.ஏ ஜயதுங்க | 05 | 12 | 17 |
| விலங்கியல் | சுற்றாடல் விஞ்ஞானத்தில் 12வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. டி. வீரக்கோன்<br>பேரா. வை.என்.ஏ ஜயதுங்க | 04 | 09 | 13 |
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனவியலில் 21வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. கே.ஆர்.ஆர். மஹானாம | 13 | 15 | 28 |
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனவியலில் 22வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா.கே.ஆர்.ஆர். மஹானாம | 12 | 25 | 37 |
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனவியலில் 23வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா.கே.ஆர்.ஆர். மஹானாம | 13 | 20 | 33 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனவியலில் 24வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா.கே.ஆர்.ஆர். மஹானாம | 08 | 24 | 32 |
| இரசாயனவியல் | பகுப்பாய்வு இரசாயனவியலில் 25வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. சி.டி. விஜேரத்ன | 14 | 22 | 36 |
| இரசாயனவியல் | பிரயோக சேதன இரசாயனவியலில் 2வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. டி.ரி.யு. அபேதுங்க | 07 | 11 | 18 |
| இரசாயனவியல் | பிரயோக சேதன இரசாயனவியலில் 3வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. டி.ரி.யு. அபேதுங்க | 06 | 18 | 24 |
| இரசாயனவியல் | இரசாயனவியல் கல்வியில் 1வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | பேரா. எஸ். ஹேவகே | 05 | 10 | 15 |
| இரசாயனவியல் | இரசாயனவியல் கல்வியில் 2வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | | 05 | 07 | 12 |
| இரசாயனவியல் | இரசாயனவியல் கல்வியில் 3வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. ஆர்.எஸ். தசநாயக்க | 02 | 11 | 13 |
| பௌதிகவியல் | பௌதிகவியல் கல்வியில் 1வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. டி.டி.என்.பீ. தயா | 08 | 10 | 18 |
| பௌதிகவியல் | பௌதிகவியல் கல்வியில் 2வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. ஆர்.வி. குரே | 10 | 08 | 18 |
| பௌதிகவியல் | பிரயோக இலத்தினியலில் 1வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. ஜே.கே. ஜயனந்த | 13 | 02 | 15 |
| பௌதிகவியல் | பிரயோக இலத்தினியலில் 2வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | பேரா. டி.யு.ஜே. சொன்னாதர | 23 | 05 | 28 |
| பௌதிகவியல் | பிரயோக இலத்தினியலில் 3வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. சி.எம். எதிரிசிங்க | 21 | 07 | 28 |
| பௌதிகவியல் | பிரயோக இலத்தினியலில் 4வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | பேரா. டி.யு.ஜே. சொன்னாதர | 14 | 05 | 19 |
| பௌதிகவியல் | பிரயோக இலத்தினியலில் 5வது எம்.எஸ்.சி. | ஆரம்பமானது | கலா. எம்.கே. ஜயனந்த | 21 | 05 | |
| பௌதிகவியல் | வளிமண்டல பௌதிகவியல், இயக்க வானியல் மற்றும் இயற்கை அணர்த்த ஆயத்தநிலையில் 1வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. கே.பி.எஸ்.சி. ஜயரத்ன | 09 | 06 | 15 |
| புள்ளிவிவரவியல் | பிரயோக புள்ளிவிவரவியலில் 5வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. டி. ஆட்டிகல | 11 | 10 | 21 |
| புள்ளிவிவரவியல் | பிரயோக புள்ளிவிவரவியலில் 6வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. டி. ஆட்டிகல | 11 | 14 | 25 |
| புள்ளிவிவரவியல் | பிரயோக புள்ளிவிவரவியலில் 7வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. சி.டி. திலகரத்ன | 12 | 11 | 23 |
| புள்ளிவிவரவியல் | பிரயோக புள்ளிவிவரவியலில் 8வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | | | | |
| தாவர விஞ்ஞானம் | தாவரக்கலம், இழைய வளர்ப்பில் 5வது எம்.எஸ்.சி | தொடர்கின்றது | கலா. ரி.டி. சில்வா | 01 | 06 | 07 |
| தாவர விஞ்ஞானம் | தாவரக்கலம், இழைய வளர்ப்பில் 6வது எம்.எஸ்.சி | தொடர்கின்றது | கலா. எச். கத்திரிஆராச்சி | 02 | 09 | 11 |
| தாவர விஞ்ஞானம்நள | தாவரக்கலம், இழைய வளர்ப்பில் 7வது எம்.எஸ்.சி | ஆரம்பமானது | கலா. ரி.எல்.எஸ். திரிமன்னே | 02 | 07 | 09 |
| தாவர விஞ்ஞானம் | கமத்தொழில்சார் நுண்ணுயிரியலில் 1வது எம்.எஸ்.சி. | தொடர்கின்றது | கலா. சி.எம். நாணயக்கார | 02 | 09 | 11 |
| கணிதவியல் | இறுதிக் கணிதம் | ஆரம்பமானது | கலா.எஸ்.எஸ்.என். பெரேரா | 26 | 11 | 37 |
| கணிதவியல் | கணிதக் கல்வி | ஆரம்பமானது | கலா. டி.ஆர். ஜயவர்தன | 17 | 14 | 31 |

இதற்கு மேலதிகமாக பல கலாநிதி மற்றும் தத்துவ முதுமாணி ஹறிகழ்ச்சித்திட்டங்கள் பீடத்தினால் நடத்தப்பட்டன.
2010ஆம் ஆண்டில் 05 பீஎச்.டி மாணவர்களும் 05 எம்.பில் மாணவர்களும் பதிவுசெய்யப்பட்டனர்.

## 2.7.2 கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் பற்றிய தகவல்கள்

### பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

கலாநிதி ரீ.எல்.எஸ். திரிமான்ன பட்டக் கற்கைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் பேராசிரியர் டி.பி. திசாநாயக்க பட்டப்பின் கற்கைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கலாநிதி சீ.டி. திலகரத்ன புதிய பிரயோகப் புள்ளிவிபரவியலில் எம்.எஸ்சி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். திருமதி ஏ.கருணாரத்ன 2009/2010 மற்றும் முன்னைய எம்.எஸ்சி தொகுதிக்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். கலாநிதி மயூரி விஜேசிங்க விலங்கியல் துறையின் சுற்றாடல் விஞ்ஞானத்தில் எம்.எஸ்சி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கணனிவழி ஆக்கக்கூறின் இணைப்பாளராக சேவையாற்றுகின்றார்.

**புதிய நியமனங்கள் / பதவி உயர்வுகள் / இளைப்பாறல்கள் / பதவி விலகல்கள்**

**கல்விசார்**

| | பெயர் | துறை | பதவி | செயற்படும் திகதி |
|---|---|---|---|---|
| நியமனங்கள் | திருமதி. ஜே.எச்.டி.எஸ்.பி திஸேரா | புள்ளிவிபரவியல் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2010.04.07 |
| நியமனங்கள் | திரு. ஜி.பி. லக்ராஜ் | புள்ளிவிபரவியல் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2010.07.13 |
| பதவி உயர்வுகள் | கலா. டபிள்யு.எம்.கே.பி. விஜேரத்ன | பௌதிகவியல் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம். I | ஜுலை 1999 |
| நியமனங்கள் | திரு. எம்.கே.ஏ.சி. மஹாசிங்க | கணிதவியல் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2010.10.20 |
| நியமனங்கள் | திரு. பி.எல்.ஜே.எஸ்.எஸ். லியனகே | கணிதவியல் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2010.01.20 |
| இளைப்பாறல் | பேரா. எச்.டி. குணவர்தன | இரசாயனவியல் | பேராசிரியர் | 2010.09.30 |
| இளைப்பாறல் | பேரா. எஸ். ஹேவகே | இரசாயனவியல் | பேராசிரியர் | 2010.09.30 |
| பதவி விலகல் | வி.எம்.ஏ. ராஜகருணா | கணிதவியல் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2010.08.23 |

**கல்விசாரா**

| | | | | |
|---|---|---|---|---|
| இளைப்பாறல் | திரு. யு.ஆர்.டி. ரத்நாயக்க | அணுக்கரு விஞ்ஞானம் | சிரேஷ்ட பணியாளர் தொழில்நுட்ப அலுவலர் | 2010.01.08 |
| பதவி விலகல் | திரு. ரி.ஏ.டி. ஆரியரத்ன | அணுக்கரு விஞ்ஞானம் | | 2010.07.01 |
| இளைப்பாறல் | திரு. கே.எல்.சி. பெரேரா | தாவர விஞ்ஞானம் | தொழிலாளர் விசேட தரம் | டிசெம்பர் 2010 |

| | | | | |
|---|---|---|---|---|
| நியமனங்கள் | திரு. டபிள்யு.பி. புஷ்பகுமார | பௌதிகவியல் | ஆய்வுகூட உதவியாளர் | 2010.09.15 |
| பதவி உயர்வுகள் | திரு. டி.எம்.கே.என். தசநாயக்க | பௌதிகவியல் | தொழில்நுட்ப அலுவலர் தரம் I | 2010.02.13 |
| பதவியுயர்வுகள் | திரு. எல்.ஏ.ஏ. இந்திக | பௌதிகவியல் | தொழில்நுட்ப அலுவலர் (உத) | 2008.04.03 |

**விடுகை**

கல்விசார் பணியாளர் குழுவைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் இவ்வாண்டில் ஓய்வு விடுமுறை பெற்றதுடன் எட்டு உறுப்பினர்கள் கற்கை விடுமுறையில் சென்றனர்.

## 2.7.3 ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

பீடத்திலுள்ள பணியாளர்களின் வெளியீடுகள், தெரிவிப்புகள், நூல்கள் மற்றும் தனிநூல்கள் ஆகிவை கீழே தரப்பட்டுள்ளன:

| ஆராய்ச்சி | துறை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தாவர விஞ்ஞானம் | இரசாயனவியல் | கணிதவியல் | விலங்கியல் | புள்ளிவிபரவியல் | பௌதிகவியல் | அணுக்கரு விஞ்ஞானம் |
| வெளியீடுகள் | 08 | 01 | 03 | 17 | 13 | -- | -- |
| வெளியீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது | -- | -- | -- | 05 | 02 | 09 | -- |
| தெரிவிப்புகள் | 04 | 07 | 03 | 28 | - | 14 | -- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சமர்ப்பிப்புகள் | -- | -- | -- | -- | | -- | 01 |
| சமர்ப்பிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது | -- | -- | -- | -- | 02 | -- | - |
| நூல்களா;/தனிநூல்கள் | -- | - | -- | 02 | - | 12 | -- |
| பேருரைகளா;/சிறப்புப் பேருரைகள் | -- | - | -- | 02 | -- | 01 | -- |

**ஆராய்ச்சி வெளியீடுகள்**

பின்வரும் கல்விசார் பணியாளர்களால் 42 ஆராய்ச்சிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் 16 வெளியீடுகள் பிரசுரத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் 63 தெரிவிப்புகள் மற்றும் 01 சமர்ப்பிப்பு என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. 04 நூல்கள் பிரசுரிக்கப்பட்டதுடன் 02 பேருரைகளும் மேற்கொள்ளப்பட்டன:

பேரா.ரி.ஆர்.ஆரியரத்ன
பேரா.ஜே.கே.டி.எஸ்.ஜயனெத்தி
திருமதி.ஏ.கருணாரத்ன
பேரா. பிரீத்தி ரன்தெனிய
பேரா.வை.என்.ஏ.ஜயதுங்க
கலா.சி.எம்.நாணயக்கார
கலா.தீப்தி விக்கிரமசிங்க
திரு.எச்.எச்.இ.ஜயவீர
கலா.சமன்த வீரசிங்க
பேரா.டி.யூ.ஜே.சொன்னாதார
கலா.சி.டி.திலகரத்ன
பேரா.டபிள்யு.டி. ரத்னசூரிய
பேரா.பி.மஹாவத்த
கலா.ஆர்.வி.குரே
கலா.மயூரி விஜேசிங்க
கலா.ஐ.எம்.கே.பர்னாந்து
கலா.ஆர்.லெல்வல
கலா.எம்.கே.ஜயானந்த
பேரா.எச்.ஏ.எஸ்.ஜி.தர்மரத்ன
பேரா.டபிள்யு.எஸ்.பிரேமவன்ச
கலா.என்.வி. சந்திரசேகர
கலா.எச்.எஸ்.கத்திரிஆராச்சி
கலா.இனோகா பெரேரா
கலா.என்.பல்லேவத்த
கலா.வி.ரமல்

## 2.7.4. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

பல கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் விஞ்ஞான மேம்பாட்டுக்கான இலங்கைச் சங்கம், HETC கருத்திட்டம், தேசிய தாவரவியல் தோட்டங்கள், அடிப்படை கற்கைகளுக்கான நிறுவகம் (IFS), இரசாயன நிறுவகம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கையில் இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான தேசிய அதிகார சபை, FCCISL, இலங்கை ஒலிம்பியட் போட்டி போன்ற பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட தேசிய செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

பேராசிரியர் சுனில் பிரேமவன்ச நோய் தடுப்பியல் சங்கத்தினால் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட MLT அலுவலர்களுக்கான விரிவுரைகளை நடத்தினார். எம்.டி.எஸ். புஷ்பராணி ஜப்பானிய நகோயா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பணியைப் பூர்த்தி செய்தார். பேராசிரியர் மஹாவத்த மற்றும் கே.டி.பெரேரா ஆகியோர் பல்கலைக்கழக அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட மைக்ரோ சொப்ட் எக்செல் மற்றும் MS எக்சஸ் தீவிர கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தனர்.

**தனியார் துறையுடனான தேசிய / சர்வதேச முகவராண்மைகள் ஊடாக தேசிய அபிவிருத்திக்கான பங்களிப்பு**

**தனியார் துறையுடனான வலையமைப்பு**

பின்வரும் கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்கள் தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஆசிய பல்கலைக்கழக வலையமைப்பு, சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை தாவர வளர்ப்பு தேசிய குழு, கைத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான சபை, லிங் ஹேபல் புரடக்ற்ஸ் பிறைவேற் லிமிரெட் போன்ற பல்வேறு இடங்களில் பணிபுரிவதன் மூலம் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்தனர்.

பேரா.டி.யு.ஜே. சென்னாதார
பேரா.டபிள்யு.டி. ரத்னசூரிய
பேரா. பிரீத்தி ரன்தெனிய
கலா.ரி.டி.சில்வா
கலா.ஜி.ஏ.யு. ஜயசேகர
கலா.சி.எம். நாணயக்கார
கலா. என். பல்லேவத்த
பேரா.எம்.ஆர்.சூரியாரச்சி
பேரா.ரி.ஆர்.ஆரியரத்ன
பேரா.சுனில் பிரேமவன்ச
கலா. தீப்தி விக்ரமசிங்க
கலா.சி.டி. திலகரத்ன
கலா.எஸ்.ஆர்.டி. ரோசா
பேரா.ஆர். ஹேவமான்ன
பேரா.வை.என்.ஏ.ஜயதுங்க
கலா.டபிள்யு.என்.விக்ரமசிங்க
கலா. எம்.டி.ரி.ஆட்டிகல
கலா. எச். கத்திரிஆரச்சி
திருமதி.டி.என். த சில்வா

### 2.7.5 கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

**உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள், கட்டிடங்கள் மற்றும் நன்கொடைகள்:**

புதிய சிற்றுண்டிச் சாலையின் நிர்மாணப்பணிகளை 2010ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் நிர்மாணிப்பதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், அது இற்றைவரை ஆரம்பிக்கப்படவில்லை.

மூன்று மாடி கணிதவியல் / புள்ளிவிபரவியல் கட்டிடத்தின் மேல் மாடியில் மின்சார கம்பி இணைப்பு மற்றும் வலையமைப்பு வசதிகள் வழங்கப்படவேண்டியுள்ளன.

மாணவர்களுக்கான வாசிப்புப் பிரதேச நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது.

**நெருக்கடிகள்**

போதிய உணவக வசதியின்மை முடியுமானவரை விரைவில் நிவர்த்திக்கப்பட வேண்டிய பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். நூலக வசதிகளும் மேம்படுத்தப்படவேண்டி உள்ளன.

சுமார் 750 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கக்கூடிய பரீட்சை மண்டபமும் அவசியமான ஒரு தேவையாகும்.

## 2.8 ஸ்ரீ பாளி வளாகம்

**அறிமுகம்**

மேற்கு வளாகமாக 1996இல் தாபிக்கப்பட்ட ஸ்ரீபாளி வளாகம் அதனைத்தொடர்ந்து அதன் பெயர் ''ஸ்ரீபாளி வளாகம்'' என மாற்றப்பட்டு 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 27(1)இன் கீழ் 1998ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது.

இந்த வளாகம் 2010ஆம் ஆண்டில், வெகுசன ஊடகங்கள் துறை மற்றும் அரங்காட்டற்கலைத் துறை ஆகிய இரண்டு துறைகளுடன் தொடர்ந்தும் செயற்பட்டது. போதிய சிரேஷ்ட கல்விசார் பணியாளர்கள் இல்லாமை இந்த இரண்டு துறைகளையும் பீடங்கள் அந்தஸ்துக்குத் தரமுயர்த்தும் நடவடிக்கைமுறைக்குத் தடங்கலாக அமைந்தது. மீளாய்வாண்டில் மொழிப்பிரிவு மற்றும் கணனிக் கற்கைகள் பிரிவு ஆகியவை தொடர்ந்தும் இரண்டு அலகுகளாக செயற்பட்டதுடன் எதிர்காலத்தில், இந்த இரண்டு அலகுகளும் தனியான துறைகளாகத் தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.8.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**கற்கை நெறிகள்**

கலை இளமாணி (விசேட பட்டம்) (4 வருட காலம்)

- வெகுசன ஊடகக் கற்கைகள்
- அரங்காட்டற் கலைகள்

**மாணவர் உள்ளெடுப்பு**

| கல்வி ஆண்டு | மாணவர் உள்ளெடுப்பு | | |
|---|---|---|---|
| | வெகுசன ஊடகங்கள் | அரங்காட்டற் கலைகள் | மொத்தம் |
| 2004/2005 | 32 | 24 | 56 |
| 2005/2006 | 56 | 50 | 106 |
| 2006/2007 | 50 | 45 | 95 |
| 2007/2008 | 74 | 77 | 151 |
| மொத்தம் | 212 | 196 | 408 |

2010ஆம் ஆண்டில், வளாகத்திலிருந்து ஐந்தாவது தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்றனர். 2011ஆம் ஆண்டில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழாவில் அவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படும்.

இறுதிப் பரீட்சையில் பட்ட மாணவர்களின் செயல்நிறைவேற்றம் - 2010

| செயல் நிறைவேற்றம் பட்டம் | 1ஆம் வகுப்பு | 2ஆம் வகுப்பு மேல் | 2ஆம் வகுப்பு கீழ் | சாதாரண சித்தி | பட்டம் பெற்றவர்களின் மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வெகுசன ஊடகங்கள் | 02 | 17 | 13 | 03 | 35 |
| அரங்காட்டற் கலைகள் | 03 | 13 | 06 | 02 | 24 |

**நிதி உதவி**

**நிதி உதவி அளிக்கப்பட்ட மாணவர்கள் விபரம் பின்வருமாறு:**

| உதவுதொகை | மஹாபொல புலமைப்பரிசில்கள் |
|---|---|
| 32 | 12 |
| 73 | 13 |
| 65 | 12 |
| 90 | 28 |
| 260 | 65 |

## 2.8.2 கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் பற்றிய விபரம்

2010ஆம் ஆண்டில் கலாநிதி ரியூடர் வீரசிங்க தொடர்ந்தும் வளாகத்தின் முதல்வராகப் பணியாற்றினார்.

எல்லா கல்விசார் மற்றும் நிர்வாகத் தீர்மானங்களும் வளாகச் சபையின் கலந்தாராய்வுடன் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் வளாகச் சபையின் ஆக்க அமைவு பின்வருமாறு:

முதல்வர் (தலைவர்) - கலாநிதி எல். ரியூடர் வீரசிங்க

**பேரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் -**

திரு. ரொஹான் வீரசிங்க
திரு. ஜினதாச பீரிஸ்

**மூதவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் -**

வண. அகலகட சிறிசுமண தேரர்

**துறைகளின் தலைவர்கள் -**

1. கலாநிதி ஆர்.சி.கே.ஹெட்டிஆரச்சி / வெகுசன ஊடகத்துறை
2. திரு. ஜே.எம்.ஆர்.சி. பண்டார – தலைவர் / அரங்காட்டற்கலைத் துறை

**பணியாளர்கள் பற்றிய தகவல்கள்**

2009ஆம் ஆண்டில் கலாநிதி ரியூடர் வீரசிங்க வளாகத்தின் முதல்வராக நியமிக்கப்பட்ட அதேவேளை, திருமதி ஏ.எச்.லியனகே சிரேஷ்ட உதவிப் பதிவாளராகத் தொடர்ந்தும் சேவையாற்றினார். மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில், கலாநிதி ஆர். ஹெட்டிஆரச்சி வெகுசன ஊடகத் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் திரு ஜே.எம்.ஆர்.சி. பண்டார அரங்காட்டற்கலைத் துறையின் தலைவராகத் தொடர்ந்தும் பணிபுரிந்தார்.

2010ஆம் ஆண்டில் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 85ஆகக் காணப்பட்டது. இந்த மொத்தத்தொகை முதல்வர், 03 நிர்வாக, 14 கல்விசார், 03 கல்விசார் ஆதரவு, 04 தொழில்நுட்ப மற்றும் 60 கல்விசாராப் பணியாளர்களை உள்ளடக்கியதாகும்.

**ஸ்ரீ பாளி வளாகத்தில் உள்ள கல்விசார் பணியாளர்கள்**

| கல்விசார் துறை | கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | சிரேஷ்ட விரிவுரையாளர்கள் | விரிவுரையாளர்கள் | தகுதிகாண் விரிவுரையாளர்கள் | போதனாசிரியர்கள் | உதவி நூலகர் | கற்கை விடுமுறையில் உள்ள விரிவுரையாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வெளிநாடு | உள்நாடு |
| வெகுசன ஊடகங்கள் | 09 | 05 | - | 02 | 02 | - | 02 | - |
| அரங்காட்டற் கலைகள் | 06 | 03 | 01 | 02 | - | - | - | 02 |
| நூலகம் | 01 | - | - | - | - | 01 | - | - |

பட்டக்கற்கை நெறிகளின் பாடத்திட்டம் அரங்காட்டற் கலைகள் மற்றும் வெகுசன ஊடகத்தின் பரந்த ஒரு விடயப்பரப்பை உள்ளடக்குவதுடன் வளாகத்தில் உள்ள பல்துறை விரிவுரையாளர்களின் எண்ணிக்கை கற்பித்தல் மற்றும் பரீட்சை விடயங்களுக்குப் போதியதாக இல்லை. எனவே, பல்கலைக்கழகம் வருகை தரும் பணியாளர்களின் நிபுணத்துவ சேவையைப் பெற்றது. பொதுவாக, வருகைதரும் பணியாளர்களில் சுமார் 75 பேர் ஒரு அரையாண்டுக்கு பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். 2010ஆம் ஆண்டில் இந்த பட்டக் கற்கைநெறிகள் ஒவ்வொன்றுக்குமான உள்ளெடுப்பு 150 ஆகும்.

**நிர்வாக மற்றும் கல்விசாராப் பணியாளர்கள்**

| நிர்வாகப் பணியாளர்கள் | | | கல்விசாராப் பணியாளர்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2009இல் புதிய நியமனங்கள் | தொழில்நுட்பப் பணியாளர்கள் / கல்விசார் ஆதரவு | | கல்விசாராப் பணியாளர்கள் | | 2010இல் புதிய நியமனங்கள் |
| - முதல்வர்<br>- சிரேஷ்ட உதவிப் பதிவாளர்<br>- உதவிப் பதிவாளர்<br>- உதவி நிதியாளர் | 01<br>01<br>01<br>01 | --<br>--<br>--<br>-- | பயிலும் தொழில்நுட்ப அலுவலர்<br>தொழில்நுட்ப அலுவலர்<br>AV தொழில்நுட்ப அலுவலர்<br>கணனி தொழில்நுட்பப் போதனாசிரியர்<br>கணனி செய்நிரலர் | 01*<br>01<br>01<br>01*<br>01 | எழுதுநர் மற்றும் இணை சிற்றூழியர் தரம்<br>பாதுகாப்புப் பணியாளர் | 23<br>24<br>10 | 03*<br>- |
| | 04 | | | 05 | | 57 | 03 |

*TTO *ICT *களஞ்சியப் பொறுப்பாளர்

### 2.8.3. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| சமர்ப்பிப்புகள்/வெளியீடுகள் | நூல்கள் |
|---|---|
| 23 | 3 |

## 2.9 கொழும்புப் பல்கலைக் கழக சமூக நீடிப்பு நிலையம் (CUCEC)

கொழும்புப் பல்கலைக் கழக சமூக நீடிப்பு நிலையம் (CUCEC) இலங்கையில் சமுதாய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பைக் கொண்ட ஒரு பல்கலைக் கழகத்தின் முதலாவது பல்துறை நிலையமாகும். இந்நிலையம் சவால்மிக்க புத்தாக்க ஆராய்ச்சிகளைப் பொறுப்பேற்பதுடன் பிரதான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி விடயங்களில் சம்பந்தப்பட்ட பயிற்சியை அளித்து தகவல் பரிமாற்றம், பரப்புதல் நிலையமாகவும் தொழிற்பட்டு தேசிய அவ்வாறே பிராந்திய மட்ட கொள்கை வகுக்கும் நடவடிக்கை முறை மற்றும் சமுதாய மட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் இணைப்பு நிலையமாகவும் தொழிற்படுகின்றது.

பயிற்சியில் கூட்டுழைப்பதற்கும் பங்குபற்றுவதற்கும் அத்துடன் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சிக்கும் உயர் தொழில்துறையைச் சார்ந்தவர்களைத் தூண்டும் சுற்றாடலை உருவாக்குவதற்காக நாட்டின் நகரப் பல்கலைக் கழகத்தின் பல்வகைப்பட்ட புலமை

வளங்களை இயங்கச் செய்வதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகம் ஒன்றை இந்நிலையம் முதன்முறையாக வழங்குகின்றது.

CUCECஇன் கருத்திட்டங்களில் உறுதியான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் ஏனைய பல்கலைக் கழகங்களின் நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் CUCECஇற்கு உண்டு.

### 2.16.1 கருத்திட்டப் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்

| கிளை | பதவி | பெயர் |
|---|---|---|
| கொழும்புப் பல்கலைக் கழக சமூக நீடிப்பு நிலையம் | பணிப்பாளர் | பேரா. கே.ஏ.பி. சித்திசேன |
| | இணைப்பாளர் | கலா. எம். கணேசமூர்த்தி |
| | ஆராய்ச்சி உதவியாளர் | ரி.எச்.சி. ஷிவாந்தி |
| | கணனிப் பிரயோகங்கள் உதவியாளர் | கே.ஏ. வன்னிஆரச்சி |
| | சாரதி | திரு. ஆர்.ஜி. செனவிரத்ன |

**2.9.2 முகாமைத்துவச் சபை பற்றிய விபரங்கள்**

| | பதவி | பெயர் |
|---|---|---|
| கொழும்புப் பல்கலைக் கழக சமூக நீடிப்பு நிலையம் | தலைவர்<br>பணிப்பாளர் | பேராசிரியர் ஷானிகா ஹிரிம்புரேகம<br>பேராசிரியர் கே.ஏ.பி. சித்திசேன |
| | சபை உறுப்பினர் | பேராசிரியர் எச்.ஆர். செனவிரத்ன |
| | சபை உறுப்பினர் | பேராசிரியர் டபிள்யு.ஐ. த சில்வா |
| | சபை உறுப்பினர் | திரு. என். செல்வக்குமரன் |
| | சபை உறுப்பினர் | திரு. சி. மலியத்த |
| | சபை உறுப்பினர் | திரு. எம். வரக்காவுள்ள |

**2.9.3 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:**

- CUCEC 2010 டிசம்பர் 23ஆம் திகதி முதல் உலக வங்கி மற்றும் IFADயின் அனுசரணையில் கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் DZLiSPPயின் (உலர் வலய சீவனோபாய ஆதரவு மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம்) பொருளாதார மற்றும் நிதியியல் பகுப்பாய்வு மற்றும் தாக்க மதிப்பீட்டை ஆரம்பித்துள்ளது.

- சிறுவரின் தனிப்பட்ட பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டப் பயனாளிகளிடையே அறிவு, மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் (KABP) பற்றிய அளவீட்டுக்கான ஆராய்ச்சிப் பிரேரணை ஒன்று விலைமனுக்கோரலுக்காக கனேடிய சர்வதேச செம்பிறைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கருத்திட்டம் வழங்கப்படவில்லை

- இலங்கையில் மனித விலைப்படுத்தல் மற்றும் சட்ட வலுவூட்டல் பற்றிய ஆராய்ச்சிக்கான ஆராய்ச்சிப் பிரேரணை ஒன்று விலைமனுக்கோரலுக்காக புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்திடம் (IOM) ஒப்படைக்கப்பட்டுள்ளது: குறிப்பு இல: எல்கே 01-004. இந்தக் கருத்திட்டம் வழங்கப்படவில்லை.

| விடயம் | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | இலங்கையின் மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் சட்டவிரோத மதுபான வியாபாரத்தின் தன்மை,<br>அடிமட்ட அளவீடு - வேல்ட் விஷன் லங்கா,<br>மற்றும்<br>இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் விலைப்படுத்தலின் தன்மையும் அளவும் |
| **மொத்தம்** | **03** |

**2.9.4 மீண்டுவரும் செலவினங்கள் பற்றிய விபரங்கள்:**

| விடயம் | 2009 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| அ. தனிப்பட்ட வேதனங்கள் | 931,200.00 | 931,200.00 |
| ஆ.பிரயாணம் | - | - |
| இ. வழங்கல்கள் | 76,384.42 | - |
| ஈ. பராமரிப்பு | 15,192.72 | 385,672.16 |

| | | |
|---|---|---|
| உ. ஒப்பந்த சேவைகள் | 38,080.00 | 38,080.00 |
| ஊ. ஏனையவை | 6,500.00 | - |
| **மொத்தம்** | **1,067,357.14** | **1,354,352.16** |

**2.9.5 மூலதனச் செலவினங்கள் பற்றிய விபரங்கள்:**

| விடயம் | 2009 | 2010 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரகணங்கள் கொள்வனவு | - | - |
| ஆ. இயந்திரங்கள் கொள்வனவு | 102,000.00 | - |
| இ. கட்டிட மற்றும் அமைப்புகளின் கொள்வனவு | - | - |
| ஈ. ஏனையவை | 11417.50 | - |
| **மொத்தம்** | **113,417.50** | **-** |

**2.9.6 கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை):**

| கருத்திட்டத்தின் பெயர் | கடன் /மானியம் | நிதியிடும் முகவர் | TEC ரூபா | RFAரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| இலங்கையின் மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் சட்டவிரோத மதுபான வியாபாரத்தின் தன்மை | 2,292,000.00 | மதுவரித் திணைக்களம் | | | |
| அடிமட்ட அளவீடு - வேல்ட் விஷன் லங்கா | 393,250.00 | வேல்ட் விஷன் லங்கா | | | |
| இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் விலைப்படுத்தலின் தன்மையும் அளவும் | 502,800.00 | இலங்கை சிறுவர் அபிவிருத்தி மகளிர் வலுவூட்டல் அமைச்சு | | | |
| **மொத்தம்** | 3,188,050.00 | | | | |

**2.9.7 நிதியியல் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (பொதுவான வருமானம்):**

| வருமான மூலம் | 2010இல் ஏற்பாடு ரூபா. | 2010இல் சேகரிப்பு ரூபா. | பற்றாக்குறை / மிகை ரூபா. |
|---|---|---|---|
| அ. பட்டக் கற்கைகள் | | | |
| ஆ.பட்டப்பின் கற்கைகள் | | | |
| இ. மதியுரை சேவைகள் | | | |
| ஏனையவை | 1,114,750.00 | 1,114,750.00 | |
| | | | |
| | | | |

**ஏனைய செயற்பாடுகள்**

- அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்துக்கான ஆராய்ச்சி முறைகள் பற்றிய சான்றிதழ் கற்கை நெறி இவ்வாண்டில் 2010 பெப்ரவரி முதல் ஜுன் வரையிலும் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலும் இரண்டு தடவைகள் CUCECயினால் நடத்தப்பட்டன.
- கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். கணேஷமூர்த்தி 2010 ஜனவரி 01ஆம் திகதி முதல் செயற்படும்படியாக தன்னார்வ இணைப்பாளராக (பகுதி நேரம்) CUCECயில் நியமிக்கப்பட்டார்.

## 2.10 ணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC)

### அறிமுகம்

பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC) அது ஆரம்பிக்கப்பட்டது முதல் பதின்மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்துள்ளது. கொழும்புப் பல்கலைக் கழகம் மட்டுமன்றி இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக் கழகங்களும் / நிறுவனங்களும் பயன்பெறத்தக்க வகையில் பல்வகைப்பட்ட விதத்தில் உயர் கல்வியை விருத்தி செய்வதற்காக SDC அதன் உள்ளீடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்தச் செயற்பாடுகள் கல்விசார், நிர்வாக, எழுதுவினைஞர் மற்றும் சிற்றூழியர் தரத்திலான செயற்பாடுகளைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில் SDC பின்வருவனவற்றை உள்ளடக்கிய பயிற்சிச் செயற்பாடுகள் ஊடாக 581 பேருக்குப் பயிற்சியளித்தது;

- மாணவர் மையக் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளை விருத்தி செய்தல் மற்றும் பதியவைத்தல், விரிவுரையாளர்களுக்கான கட்டாய தகுதிகாண் தேவைப்பாட்டைப் நிறைவு செய்வதற்கான கற்கை நெறியை உள்ளிட்ட தொழில்வாண்மை விருத்தி
- ஆதரவுப் பணியாளர்களின் திறன்களை விருத்தி செய்தல்
- பல்கலைக் கழக நடவடிக்கைமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் கல்விசார், நிர்வாக மற்றும் கல்விசாராப் பணியாளர்களின் தயார்நிலையை மேம்படுத்தல்.
- பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் மனப்பாங்குத் தோற்றப்பாட்டை விருத்தி செய்தல்

SDC அது முதலில் தாபிக்கப்பட்ட நோக்கத்தை, அதாவது, விரிவுரையாளர்களின் தகுதிகாண் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்தல் என்னும் அதன் ஆரம்ப பயிற்சி அழுத்தத்தைத் தொடர்ந்தும் பேணியது. இந்த நோக்கத்துடன், CTHE (உயர் கல்வி கற்பித்தலில் சான்றிதழ்) நிகழ்ச்சித்திட்டத்தை SDC நடத்தியது. ஏனைய அபிவிருத்தி நிலையங்களின் வள ஆளணியினரைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களின் வேலை நிகழ்ச்சித்திட்டத்தை வகுப்பதற்கு ஆலோசனை கூறுதல் ஆகியவற்றின் ஊடாக SDC அவற்றுக்கு உதவியது.

2008 முதல் 2010 வரையான காலப்பகுதிக்கான செயற்பாடுகள் பற்றிய ஐந்தாவது புற மீளாய்வு பேராசிரியர் கிறிஸ்டின் மேசன் ஒகொன்னர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

பணியாளர் அபிவிருத்திக்காக SDCஇற்கு வழங்கப்பட்ட சுவீடன் SIDA-SAREC மானியம் பொதுவாக இலங்கையின் உயர் கல்வி முறைமைக்கும் குறிப்பாக கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கும் ஆதரவளிப்பதில் பன்னிரண்டு வருட காலத்தைப் பூர்த்தி செய்து இவ்வாண்டில் முடிவடைந்தது.

### 2.10.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

#### கற்கை நெறிகள்

உயர் கல்வி கற்பித்தலில் சான்றிதழ் (CTHE) 13ஆவது கற்கை நெறி பல்கலைக் கழகப் பணியாளர்களுக்காக SDCயினால் நடத்தப்பட்டது. இதில் பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 56 கல்விமான்கள் பங்குபற்றினர். இந்த எண்ணிக்கையில், குறிப்பாக சிலர் பெரும்பான்மையாக பட்டப்பின் கற்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றதன் விளைவாக போதிய வரவின்மையால் தொடர்வதற்கான தகைமையைப் பெறவில்லை. இதில் எஞ்சியவர்கள் முன்னைய மாணவர் தொகுதியைச் சேர்ந்தவர்களுடன் சேர்த்து 51 பேர் சித்தியடைந்தனர். அது 89% சித்தி வீதமாகும். SEDA, UK சான்றிதழுக்கான சித்திகள் 27ஆகக் காணப்பட்டது. எனவே சர்வதேச மட்டத்தில் 52 சதவீதமானவர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். இலங்கையில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 67 விரிவுரையாளர்களுக்கான 14ஆவது CTHE கற்கை நெறி 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டு கற்கை நெறிகளுக்கும் திருமதி வீரக்கோன் இணைப்பாளராக செயலாற்றினார்.

### 2.10.2. கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்

கலாநிதி பி.கைலாசபதி 2010 மார்ச் 14ஆம் திகதி தனது பதவியிலிருந்து விலகும் வரை பணிப்பாளராகச் சேவையாற்றினார். அப்போதிருந்து, திருமதி வை.எம்.எஸ்.கே. வீரக்கோன் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றினார். பணியாளர் குழு, சிரேஷ்ட விரிவுரையாளராக திருமதி வை.எம்.எஸ்.கே. வீரக்கோன், விஞ்ஞான முறை உதவியாளராக பி.டி.தயானந்த, கணனிப் பிரயோகங்கள் உதவியாளராக ஜி.ஐ. குணதாச, தொழிலாளராக பீ.டபிள்யூ.ஜே.எம். பெரேரா ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில், SDCயின் பணியாளர் குழுவில் புதிய ஓர் உறுப்பினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். திருமதி எம். விஜேவர்தனவின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2010.02.03ஆம் திகதி எஸ்.டபிள்யூ.டி.ஏ. சிறிமான்ன கணனிப் பிரயோகங்கள் உதவியாளராகப் பதவியேற்றார்.

### 2.10.3 ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

ஏக்கரத்ன, சூகி மற்றும் வீரக்கோன், சிறினிகா (2010) – உள்நாட்டு நோக்கங்களுக்குப் பொருந்தக்கூடியவாறு உலகளாவிய ஆசிரியர் தளத்தை இணைப்பதன் மூலம் உயர் கல்வி ஆசிரியர் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் பயன்படுத்துவதற்கான ஆசிரியரின் மையநிலைமையை அடையாளம் காணல். கற்றல் கற்பித்தல் புலமைப்பரிசிலுக்கான சர்வதேச சங்கத்தின் 7ஆவது வருடாந்த மகாநாடு

வீரக்கோன், சிறினிகா மற்றும் ஏக்கரத்ன, சூகி. (2010) – அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அமைப்பில் பல்கலைக் கழகப் பணியாளர்களிடையே கற்பித்தல் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துக்குப் பொருத்தமான ஒத்த ஆசிரியர்களை உருவாக்குவதற்கான உக்திகள், கற்றல் மற்றும் கற்பித்தல் சர்வதேச மகாநாட்டின் எட்டாவது லண்டன் புலமைப்பரிசில், லண்டன், ஐக்கிய இராச்சியம்.

வீரக்கோன் சிறினிகா (2010) – உயர் கல்வியில் அதிசிறந்த நடைமுறையை மேம்படுத்தும் உக்தியாக செய்துகாட்டல் கற்பித்தல்: CTHE; ஆறாவது மகாநாடு, உயர் கல்வியை மேம்படுத்துவதற்கான இலங்கைச் சங்கம், கொழும்பு, இலங்கை.

### 2.10.4 நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்:

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆளணியினரால் நடத்தப்பட்ட பல செயலமர்வுகள் SDCயில் நடைபெற்றன. கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக உள்ளடக்கப்பட்ட பல்வகைப்பட்ட தலைப்புகள் எமது பட்டதாரி மாணவர்களை மேலும் பயனுறுதி உடையவர்களாக ஆக்குவதற்கான உக்திகள் மற்றும் முறைகள், பல்கலைக் கழகங்களில் பணியாளர் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான உக்திகள் மற்றும் முறைகள், மாணவர் பயணத்துக்கு ஆதரவளித்தல்: மாணவர் கற்றல் மற்றும் திறன் விருத்தியை மேம்படுத்துவதற்கு மதிப்பீட்டைப் பயன்படுத்துதல், கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு ஆக்கபூர்வமான முகாமைத்துவம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல், உயர் கல்வியில் அதிசிறந்த செயன்முறைகளின் தாக்குப்பிடிக்கும் இயல்பை உறுதிப்படுத்துவதற்கு மாற்றத்தை முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

செயலமர்வுகளை நடத்துவதற்கு உதவிய வெளிநாட்டு வள ஆளணியினர்கள் தொகுதி பேராசிரியர் லிஸ் பீட்டி, பேராசிரியர் கிறிஸ்டின் மேசன் ஓ கொன்னர், பேராசிரியர் எஸ்.யூ.கே. ஏகரத்ன மற்றும் அஞ்சி றே ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

கல்விசார், நிர்வாக மற்றும் ஆதரவுப் பணியாளர்கள் தமது கடமைகளையும் பணிகளையும் பயனுறுதியுடன் மேற்கொள்வதற்கு அவர்களின் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக கணனித் திறன்கள், ஆங்கிலத் தேர்ச்சி, பயனுறுதியான நிதியியல் நடவடிக்கைமுறைகள் போன்ற கற்கை நெறிகளை SDC பல்கலைக்கழகத்தில் நடத்தியது. திசைமுகப்படுத்தல் மற்றும் வாகனத்தைச் செலுத்தும்போது கடைப்பிடிக்கும் நன்னடத்தை பற்றிய அமர்வுகள் பல்கலைக் கழகச் சாரதிகளுக்காக நடத்தப்பட்டன.

உயர்கல்வியின் பயனுறுதியை மேம்படுத்துவதற்கான இலங்கைச் சங்கத்துடன் (SLAIHEE) இணைந்து ''உயர் கல்வியில் அதிசிறந்த செயன்முறைகளைப் பேணுவதில் உள்ள சவால்கள்'' என்னும் கருப்பொருளைக்கொண்ட கல்வி அபிவிருத்தி பற்றிய ஒரு மகாநாடு நடைபெற்றது. இதில் பல்வேறு தேசிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 104 கல்விமான்கள் சமுகமளித்திருந்தனர்.

### 2.10.5 வேறு ஏதேனும் தொடர்பான விபரங்கள்

2008 முதல் 2010 வரையான காலப்பகுதிக்கான SDCயின் செயலாற்ற மீளாய்வு பேராசிரியர் கிறிஸ்டின் மேசன் ஓ கொன்னர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. ''SDC தெளிவாகவே அதன் அசல் ஆணையை ஈடுசெய்கின்றது, உண்மையில் அதனையும் விஞ்சுவதாக உள்ளது. பணியாளர்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியிலும், நிறுவன ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் மற்றும் சர்வதேச ரீதியாகவும் தொடர்ந்தும் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதில் SDCயின் வெற்றிக்காக அது மனமாரப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்'' என அந்த மீளாய்வு அறிக்கை குறிப்பிடுகின்றது.

''உயர் கல்வியில் அதிசிறந்த செயன்முறைகளை தாக்குப்பிடிப்பதில் உள்ள சவால்கள்'' என்னும் கருப்பொருளைக் கொண்ட 6ஆவது SDC-SLAIHEE கூட்டு மகாநாடு 2010 ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெற்றது.

**தேசிய / சர்வதேச முகவராண்மைகள் மற்றும் தனியார் துறையுடனான வலையமைப்பு ஆகியவற்றின் ஊடாக தேசிய அபிவிருத்திக்கான பங்களிப்பு**

ஏனைய நாடுகளில் உள்ள பணியாளர் உறுப்பாண்மை மற்றும் கல்வி அபிவிருத்திச் சங்கம் (SEDA, UK), தொழில்வாண்மை மற்றும் நிறுவன அபிவிருத்தி (POD) வலையமைப்பு, ஐக்கிய அமெரிக்கா, கற்றல் மற்றும் கற்பித்தலின் புலமைப்பரிசிலுக்கான சர்வதேச சங்கம் (ISSoTL) போன்ற பணியாளர் மற்றும் கல்வி அபிவிருத்தி நிறுவனங்களுடன் SDC தொடர்ந்தும் பணிபுரிந்தது. SDCயினால் நடத்தப்பட்ட கற்கை நெறிகளில் இரண்டு SEDA, UKயினால் அங்கீகரிக்கப்பட்டது. UK கும்ப்றியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கற்றல், கற்பித்தல் மற்றும் மாணவர் அனுபவம் சார்பான உபவேந்தர் பேராசிரியர் லிஸ் பீற்றி கற்கை நெறிகளைப் பரிசீலித்து மீளாய்வு செய்தார்.

SDCயின் தாபகப் பணிப்பாளராகிய பேராசிரியர் எஸ்.யூ.கே. ஏக்கரத்ன கல்விசார் அபிவிருத்தியில் அன்னாரின் உன்னத தலைமைத்துவத்துக்காக கீர்த்தி மிகு கல்வி அபிவிருத்திக்கான சர்வதேச சங்கத்தின் (ICED) விருதைப் பெற்றார். SDCயின் பணிப்பாளர் பணியாளர் அபிவிருத்தி பற்றிய பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் நிலையியல் குழு உறுப்பினராவார்.

வீரக்கோன் ஐக்கிய அமெரிக்க தொழில்வாண்மை மற்றும் நிறுவன அபிவிருத்தி (POD) வலையமைப்பின் சர்வதேச நடுவராக தொடர்ந்தும் பணிபுரிந்தார். அத்துடன் அவர் உயர்கல்வி பயனுறுதியை மேம்படுத்துவதற்கான இலங்கைச் சங்கத்தின் (SLAIHEE) தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

**தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் ஆங்கிலத் திறன்கள்**

பல்கலைக் கழகப் பணியாளர்களின் பல்வேறு தேர்ச்சி மட்டங்களை இலக்காகக் கொண்டு ஆங்கிலத் தேர்ச்சிக் கற்கை நெறிகளை SDC நடத்தியது. கணனிக் கல்வி அறிவு முதல் தரவுத் தள முகாமைத்துவம் போன்ற உயர் மட்டங்கள் வரை பல்வகைப்பட்ட கணனித் திறன்கள் பற்றிய பல்கலைக் கழகப் பணியாளர்களின் பயிற்சிக்கும் SIDA-SAREC மானியத்தினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி SDC நிதியளித்தது.

**சமுதாய சேவைகள்**

கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு வெளியில் உள்ள பாதுகாப்பு அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சு ஆகியவற்றுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் SDC அதன் சமுதாய சேவையைத் தொடர்ந்தது.

**மாணவர் நலனோம்பல்**

கற்கும் மாணவர்களின் தரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட மாணவர் மையக் கற்றல், மாணவரின் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தல், SDC கற்கை நெறிகள் மற்றும் செயலமர்வுகள் ஊடாக பட்டதாரிகளின் திறன்களை விருத்தி செய்தல் ஆகியவற்றுக்கு வசதி அளிப்பதன் மூலம் மாணவர் நலனோம்பலுக்கு SDC பங்களிப்புச் செய்கின்றது.

## 2.11 மனித உரிமைக் கற்கை நிலையம் (CSHR)

**நோக்கு**

மனித உரிமைக் கற்கை நிலையத்தின் ஒட்டுமொத்த நோக்கு ''எல்லா மக்களினதும் கண்ணியமும் உரிமைகளும் மதிக்கப்படுகின்ற நாடளாவிய மனித உரிமைகள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்''.

**பணி**

மனித உரிமைக் கற்கை நிலையத்தின் பணி 'பல்துறை அணுகுமுறையைப் பயன்படுத்தி மனித உரிமைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான உன்னத நிலையமாகத் திகழ்வதாகும்.'

**தோற்றப்பாடு**

மனித உரிமைக் கற்கை நிலையம் 1980களின் வன்முறையின் விளைவாக 1991ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட சேவை நோக்கைக் கொண்ட இலாபமீட்டாத நிறுவனமாகும். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தின் நோக்கெல்லையின் கீழ் வரும் இந்நிலையம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்பூட்டல் மற்றும் பரிகாரங்களை நோக்காகக் கொண்டதாகும்.

இந்நிலையம் மனித உரிமைகள் துறையில் விழிப்பூட்டல், கல்வி மற்றும் பயிற்சி அளித்தல், அவ்வாறே, இந்த விடயப்பரப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி ஆகியவற்றின் தேவையை அடையாளம் கண்டுள்ளதுடன் இந்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மனித உரிமைகள் அரங்கில் முக்கியமான ஒரு நிறுவனமாகவும் உணரப்படுகின்றது.

எனவே, மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் செயற்பாடுகள், இலங்கையில் உள்ள பல பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு அவர்களின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக தகவல்களை வழங்குவதை குவிமையப்படுத்துகின்றன. இந்த மக்கள் குழுக்கள் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள், கிராமிய சமுதாயங்கள், இராணுவத்தினர், பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அலுவலர்கள் மற்றும் சிறைகளில் இருப்போர், பல்கலைக் கழகச் சமுதாயம், மாற்று ஆற்றல் உள்ள ஆட்கள் மற்றும் ஊடக ஆளணியினர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

மனித உரிமைக் கல்வி என்னும் விடயப்பரப்பில், மனித உரிமை அம்சங்கள் பற்றி பெரிதும் தேவைப்படும் அறிவை ஊட்டுவதற்காக மனித உரிமைக் கற்கை நெறிகள் பரந்த அளவிலான சமுதாயத்தினருக்குக் கிடைக்கச்செய்வதை மனித உரிமைக் கற்கை நிலையம் குவிமையமாகக் கொண்டுள்ளது.

மனித உரிமைக் கற்கை நிலையத்தின் உபாயத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இரண்டாவது மிக முக்கியமாக குவிமைய விடயப்பரப்பு மனித உரிமைகள் ஆராய்ச்சியாகும். தற்போது சமுதாயத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக தற்போதைய அவ்வாறே நடைமுறைசார்ந்த ஆராய்ச்சியில் மனித உரிமைக் கற்கை நிலையம் குவிமையத்தைக் கொண்டுள்ளது.

மனித உரிமைக் கற்கை நிலையம் செயற்படுகின்ற அரச துறை மற்றும் குடியியல் சமூகங்களிடையே பல்வேறு குழுக்களின் வலுவூட்டலைத் தொடர்வதற்கு ஆற்றலைக் கட்டியெழுப்புதல் அதனை இயலச் செய்கின்ற மூன்றாவது குவிமைய விடயப்பரப்பாகும்.

மனித உரிமைக் கற்கை நிலையம் குவிமையப்படுத்தும் நான்காவது விடயப்பரப்பு அறிவுச் சேவைகளாகும். இதனை நோக்கி, பல்கலைக் கழக சமுதயாத்துக்கும் பொதுமக்களுக்கும் நிலையம் தனது வள நிலையம் ஊடாகவும் அவ்வாறே இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகவும் தகவல்களைத் தொடர்ந்தும் வழங்குகின்றது.

நிறுவன ரீதியான அபிவிருத்தி என்னும் அதன் இறுதிக் குவிமையத்தின் ஊடாக, அதன் எல்லா இலக்குக் குழுக்களுக்கும் தரமான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதை மனித உரிமைகள் கற்கை நிலையம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனை அடைவதற்காக, அதன் பணியாளர்கள் இந்நிலையத்துடனேயே இருப்பர் என மனித உரிமைக் கற்கை நிலையம் நம்புகின்றது.

### 2.11.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

| நிலையம் | கற்கைநெறி | மொத்தம் | மொத்தப் பணியாளர்கள் | மொத்த கல்விசாராப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| **CSHR** | மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளில் தொலைக் கல்வி டிப்புளோமா | 101 | 1 – கல்விசார் இணைப்பாளர் | 1- நிர்வாக இணைப்பாளர்<br>1- உதவி இணைப்பாளர் |
| | மனித உரிமைகளில் E டிப்புளோமா | 13 | கல்விசார் குழு | 1- நிர்வாக இணைப்பாளர்<br>1 மூடில் நிர்வாகி |
| | மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் ஆசிய பசுபிக் பிராந்திய முதுமாணி | 06 | 2 கல்விமான்கள் கல்விசார் குழு | 1 – இணைப்பாளர்<br>2 – உதவி இணைப்பாளர் |

**வள நிலையம்**

வள நிலையம் வருடம் முழுவதும் அதன் பயன்படுத்துனர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான பெரிதும் தேவைப்படும் அறிவையும் தகவல்களையும் வழங்கியது. சட்டம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பயிலும் பட்டதாரி மாணவர்கள் பல்கலைக் கழகச் சமுதாயத்தில் பிரதான பயன்படுத்துனர்களாவர். ஒப்படைகளுக்காகத் தயார் செய்கின்றபோது நூலகத்தின் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது.

## 2.11.2 உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

**மனித உரிமைகளில் E டிப்புளோமா**

மனித உரிமைக் கற்கை நிலையம் மனித உரிமைகளில் கணனி வழி டிப்புளோமா கற்கையை விருத்தி செய்வதற்காக உயர் கல்வி அமைச்சின் தொலைக்கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் (DEMP) ஊடாக பரந்த ஆட்களின் குழுக்களுக்கு அதன் மனித உரிமைகள் பற்றிய அறிவைப் பரப்புவதை விரிவாக்கம் செய்தது.

**மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளில் தொலைக்கல்வி டிப்புளோமா**

மனித உரிமைக் கற்கை நிலையம் 2005ஆம் ஆண்டில் மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளில் தொலைக்கல்வி டிப்புளோமாவை அறிமுகப்படுத்தியது. இந்தக் கற்கை நெறி கிரமமாக வகுப்புகளுக்குச் சமுகமளிக்க முடியாத, ஆனால், இந்த விடயப்பரப்புகளில் முறைசார் பயிற்சி தேவையாக உள்ள ஆட்களை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும்.

| பீடம் / நிலையம் | கற்கைநெறி | மொழிமூலம் | மொத்த மாணவர்கள் | மொத்த மாணவர்கள் |
|---|---|---|---|---|
| **CSHR** | மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளில் தொலைக் கல்வி டிப்புளோமா | *தமிழ் மற்றும் சிங்களம்* | *101* | *117 – (2009 உ.த.மாணவர் தொகுதி)* |
| | மனித உரிமைகளில் E டிப்புளோமா | *ஆங்கிலம்* | | |

### வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

**மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் ஆசிய பசுபிக் முதுமாணி**

ஆசிய பசுபிக் பிராந்திய நிகழ்ச்சித்திட்டத்தின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கல் பங்காளராக இருக்குமாறு சிட்னி பல்கலைக் கழகத்தினாலும் மற்றும் தாய்லாந்து மஹிடோல் பல்கலைக் கழகம், இந்தோனேசிய கத்ஜா மாதா பல்கலைக் கழகம், கத்மண்டு சட்டக் கல்லூரி, பூர்பஞ்சால் பல்கலைக் கழகம் ஆகிய நான்கு பல்கலைக் கழகங்களுடன் பணிபுரியுமாறும் மனித உரிமைக் கற்கை நிலையத்திடம் கோரப்பட்டது. உத்தேசிக்கப்பட்டுள்ள பட்டம் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத் துறையில் பல்வேறு துறைகள் மேற்கொள்ளவேண்டியுள்ள பங்களிப்பை அங்கீகரித்து உறுதியான துறைகளுக்கிடையிலான அணுகுமுறையை மேற்கொள்ளும்.

| பீடம் / நிலையம் | கற்கைநெறி | மொழிமூலம் | 2010 உள்ளெடுப்பு | பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **CSHR** | மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயப்படுத்தலில் ஆசிய பசுபிக் பிராந்திய முதுமாணி | *ஆங்கிலம்* | *06* | *பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கின்றனர்* |

## 2.11.4 மொத்த கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள்

**முகாமைத்துவ சபை பற்றிய விபரங்கள்:**

| பதவி | பெயர் |
|---|---|
| தலைவர் | உப வேந்தர், கொழும்பு பல்கலைக் கழகம் |
| பதில் பணிப்பாளர் | பேரா. ஷார்யா ஸ்கார்னிவல் |
| சபை உறுப்பினர் | திரு. என். செல்வக்குமரன் |
| சபை உறுப்பினர் | திருமதி இந்திரா நாணயக்கார |
| சபை உறுப்பினர் | திரு. வி.ரி. தமிழ்மாறன் |

| | |
|---|---|
| சபை உறுப்பினர் | பேரா. ஜயதேவா உயன்கொட |
| சபை உறுப்பினர் | பேரா. கார்லோ பொன்சேகா |
| சபை உறுப்பினர் | பேரா. சந்திரா குணவர்த்தன |
| சபை உறுப்பினர் | கலாநிதி ஆர்.கே.டபிள்யூ. குணசேகர |
| சபை உறுப்பினர் | திருமதி ஜெசீமா இஸ்மாயில் |
| சபை உறுப்பினர் | திருமதி மனோரி முத்தட்டுவேகம |
| சபை உறுப்பினர் | திரு. எஸ்.எஸ். விஜேரத்ன |
| சபை உறுப்பினர் | சூரியா விக்கிரமசிங்க |

**நிர்வாக மற்றும் கருத்திட்டப் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்**

| கிளை | பதவி | பெயர் |
|---|---|---|
| **நிர்வாகம்** | | |
| | பதில் பிரதம நிர்வாக அலுவலர் | மெலனி பலிகக்கார<br>*LL.B, LL.M, வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா, சட்டத்தரணி* |
| | கணக்கியல் அலுவலர் | துஷாரி ஹேவகே<br>*ICASL (இடைநிலை)* |
| | கணக்கீட்டு எழுதுவினைஞர் | பீ.கே.டபிள்யூ.எஸ். லக்மினி<br>*ICASL (பகுதி I)* |
| | வரவேற்பாளர் / பதில் செயலாளர் | சனிதா த சில்வா |
| | அலுவலக உதவியாளர் | லக்ஷ்மன் விஜயலால் |
| | அலுவலக உதவியாளர் B தரம் | ருவானி தில்ருக்ஷி |
| **கருத்திட்டங்கள்** | கருத்திட்ட அலுவலர் | நிலானி த சில்வா<br>*BA, MSPD* |
| | கருத்திட்ட அலுவலர் | மெலனி பலிகக்கார<br>*LL.B, LL.M, வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா, சட்டத்தரணி* |
| | கருத்திட்ட இணைப்பாளர் (உசாத்துணை அடிப்படையில்) | தயானி பனாகொட<br>*LL.M, MBA, MA, சட்டத்தரணி* |
| | உதவி கருத்திட்ட இணைப்பாளர் | லேகா ஹேரத்<br>*LL.B, சட்டத்தரணி* |
| | உதவி கருத்திட்ட இணைப்பாளர் | கௌஷல்யா ஆரியரத்ன<br>*LL.B, MA, சட்டத்தரணி* |
| | உதவி கருத்திட்ட இணைப்பாளர் | சக்கி இஸ்மாயில்<br>*LL.B* |
| | மூடில் நிர்வாகி (உசாத்துணை அடிப்படையில்) | திலினி சந்திரசேகர<br>*BSc. விசேடம் (கௌரவப்பட்டம்) IT (SLIIT)* |
| **அறிவுச்சேவை** | ஆவணப்படுத்தல் / தகவல் அலுவலர் (உசாத்துணை அடிப்படையில்) | காயத்ரி அபேதீர<br>*Bsc, ALA (இலங்கை)* |
| | உதவி நூலகர் | மஹேஷா அபேவிக்கிரம<br>*ALA (இலங்கை) இதழியலில் டிப்புளோமா* |
| | நூலக உதவியாளர் | ருவான் சந்திரசேகர |
| **மொத்தம்** | | **16** |

## 2.11.5 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:

| விடயம் | பெயர் | வெளியிடப்பட்டவை |
|---|---|---|
| அ. ஆராய்ச்சிகள் | 1. காதி நீதிமன்றங்கள் தொடர்பான தற்போதுள்ள சட்டங்களின் கருமபீட மீளாய்வு | 2010 டிசம்பர் 17 |
| ஆ.புத்தாக்கங்கள் | - | |

| | | |
|---|---|---|
| இ.குறிப்பேடுகள் | - | |
| ஈ. நூல்கள் | 1. சமூக சமத்துவம் மற்றும் உரிமைகள் மதிப்பீடு<br><br>2. இலங்கையில் காதி நீதிமன்ற முறைமை மீளாய்வு – சுலானி கொடிகார<br><br>3. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றி மாதிரி சட்டகம் - ஜெஹான் குணதிலக | 2010 டிசம்பர் 17 |
| உ. கட்டுரைகள் | - | |
| ஊ. ஏனையவை | 1. CSHR E – செய்திமடல்<br>(அ) தொகுதி 6 வெளியீடு 2<br>(ஆ) தொகுதி 6 வெளியீடு 3<br><br>2. '*ஒப தன்னவாத?' (உமக்குத் தெரியுமா?)* தொகுதி 1 இல.1 | ஜன – ஜுன் 2010<br>ஜுலை – டிச. 2010<br><br>2010 |

**CSHR E- செய்திமடல்**

E செய்தி மடல் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டது. CSHRஇன் வலைத்தளத்திலும் அதனைப் பார்வையிடலாம். CSHRஇன் செயற்பாடுகள் பற்றிய மிகப்பிந்திய தகவல்கள், பங்களிப்பாளர்களின் மனித உரிமைகள் பற்றிய கட்டுரைகள், மனித உரிமைகள் பற்றிய தற்போதைய தகவல்கள் மற்றும் தொடர்பான தகவல்களை இந்த வெளியீடு கொண்டுள்ளது.

**ஆராய்ச்சி**

2010.12.17ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் மூன்று புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அவையாவன:

01. சமூக சமத்துவம் மற்றும் உரிமைகள் மதிப்பீடு
02. இலங்கையில் காதி நீதிமன்றங்கள் பற்றிய திறனாய்வு
03. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றி மாதிரி சட்டகம் - அடிப்படையான ஓர் மீளாய்வு

## 2.11.6. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்:

| பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | இடம் | மொழிமூலம் |
|---|---|---|---|
| 1. பாடசாலைகளுக்கான மனித உரிமைக் கல்வி | 5 | வடக்கு – கிழக்கு மாகாணம் | சிங்களம் |
| 2. சமூகத்துக்கான மனித உரிமைக் கல்வி | 15 | நாடு முழுவதும் | சிங்களம் |
| 3. இராணுவப் படையினருக்கான மனித உரிமைக் கல்வி | 3 | கொழும்பு | ஆங்கிலம் |
| 4. சிறைச்சாலை அலுவலர்களுக்கான மனித உரிமைக் கல்வி | 18 | நாடு முழுவதும் | சிங்களம் |
| 5. பல்கலைக் கழக மாணவர்களுக்கான மனித உரிமைக் கல்வி | 3 | சப்ரகமுவ பல்கலைக் கழகம், கொழும்புப் பல்கலைக் கழகம் | சிங்களம் / தமிழ் |
| 6. காதிமார்களுக்கான மனித உரிமைகள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம். | 2 | கொழும்பு, பொலன்னறுவை | தமிழ் |

**பாடசாலைகளுக்கான மனித உரிமைக் கல்வி – HRES**

இந்த நிகழ்ச்சித்திட்டம் முறைசாரா விதத்தில் இரண்டாம் நிலை மாணவர்வளுக்கு மனித உரிமைகள் பற்றி கற்பிப்பதற்கு வடிவமைக்கப்பட்டதாகும். இங்கு மாணவர்களுக்கு மனித உரிமைகளின் பல்வேறு பரிமாணங்கள் போதிக்கப்படுகின்றன.

**சமூகத்துக்கான மனித உரிமைக் கல்வி – HREC**

இந்தக் கருத்திட்டம் தமது பிரதேசங்களில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு முனைப்பாக ஈடுபட்டுள்ள சமூகத் தலைவர்கள் ஊடாக மனித உரிமைகள் பற்றிய அறிவைப் பரப்புவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. CSHR உடன் இணைக்கப்பட்டுள்ள முப்பத்தொன்பது (39) மனித உரிமைக் கல்வி நிலையங்கள் நாடு முழுவதிலும் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு மனித உரிமைகள் பற்றிய அறிவை ஊட்டுவதில் ஈடுபட்டிருந்தன.

**இராணுவப் படையினருக்கான மனித உரிமைக் கல்வி**

கனிஷ்ட கட்டளையிடும் அதிகாரிகளுக்கான கற்கைநெறி மற்றும் பணியாளர்கள் அவ்வாறே சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரிகளுக்கான கற்கைநெறி ஆகிய மாணவ அதிகாரிகளின் கற்கைநெறியில் மனித உரிமைகள் (HR) மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் (IHL) ஆகியவை பாடங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

**சிறைக்கைதிகளுக்கான மனித உரிமைக் கல்வி**

இந்தக் கருத்திட்டம் சிறைக்கைதிகளின் பாதுகாப்பு அவ்வாறே, அவர்களின் கடமைகளை மேற்கொள்வதோடு சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கான தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சாதனங்கள் பற்றிய சிறைச்சாலை அலுவலர்களுக்கான அறிவூட்டல் மற்றும் உணர்வூட்டல் மீது கவனம் செலுத்துகின்றது. ஒவ்வொரு இலக்குக் குழுவினதும் தேவையை அடிப்படையாகக் கொண்டு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

**பல்கலைக் கழகங்களுக்கான மனித உரிமைகள் பற்றிய விழிப்பூட்டல்**

இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் பல்கலைக் கழகச் சமூகத்துக்கு மனித உரிமைகள் பற்றிய அடிப்படை விழிப்பூட்டல் மற்றும் அறிவூட்டல் ஆகும். பல்கலைக் கழகச் சமூகத்துக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், பரிகாரங்கள் மற்றும் தொடர்பான தலைப்புகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இந்தச் செயற்பாட்டுக்கு டயகோனியா நிதியிட்டது.

**மனித உரிமைகள் உள்ளுறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் இவ்விடயப்பரப்பில் ஆர்வம் உள்ள பட்டதாரிகளுக்கு மனித உரிமைகள் பற்றிய நடைமுறைப் பயிற்சியை வழங்குகின்றது. இந்த உள்ளுறைப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ஆதரவு தேடுதல், ஒழுங்கமைத்தல் பரப்புதல் பயிற்சி மற்றும் ஏனைய மனித உரிமைகள் பற்றிய திறன்கள் ஆகியவை பற்றி அறிவூட்டப்படுகின்றது.

## 2.11.7 மீண்டுவரும் செலவினங்கள் பற்றிய விபரங்கள்:

| விடயம் | 2009 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| அ. தனிப்பட்ட வேதனங்கள் | 2,239,530 | 3,687,504 |
| ஆ. பிரயாணம் | 253,840 | 106,627 |
| இ. வழங்கல்கள் | 809,822 | 822,162 |
| ஈ. பராமரிப்பு | 1,227,897 | 1,191,690 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 924,000 | 1,344,000 |
| ஊ. ஏனையவை | 1,632,697 | 4,664,848 |
| மொத்தம் | 7,087,786 | 11,816,831 |

## 2.11.8 மூலதனச் செலவினங்கள் பற்றிய விபரங்கள்:

| விடயம் | 2009 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரணங்கள் கொள்வனவு | 4,437,922 | 395,228 |
| ஆ. இயந்திரங்கள் கொள்வனவு | 433,950 | 155,194 |
| இ. கட்டட மற்றும் அமைப்புகள் கொள்வனவு | | |
| ஈ. ஏனையவை | | |

### 2.11.9 கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

| பெயர் மற்றும் விபரங்கள் | நிதியிடும் முகவர் | TCE ரூபா | RFA ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|
| முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | சிட்னி பல்கலைக் கழகம் | | | |
| சமத்துவமாக நீதி கிடைத்தல் | UNDP | | | |
| HREC/HRES | டயகோனியா | | | |
| கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டி | நெதர்லாந்து றோயல் தூதரகம் | | | |

### 2.11.10 கருத்திட்டச் செலவினங்கள் பற்றிய விபரங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை):

| பெயர் மற்றும் விபரங்கள் | செலவு 2009 ரூபா | செலவு 2010ரூபா | 2010.12.31இல் உள்ளவாறு திரண்ட செலவினம் | பௌதீக முன்னேற்றத்தின் % |
|---|---|---|---|---|
| முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 650,259 | 1,750,698 | 2,400,957 | 100% |
| சமத்துவமாக நீதி கிடைத்தல் | 1,948,099 | 1,750,728 | 3,698,827 | 100% |
| HREC/HRES | 8,049,438 | 80,101,240 | 88,150,678 | 100% |
| கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டி | - | - | | |

### 2.11.11. நிதியியல் முன்னேற்றங்கள் பற்றிய விபரங்கள் (செலவினம்):

| விடயம் | 2010இல் ஏற்பாடு ரூபா | 2010இல் செலவினம் ரூபா | சேமிப்பு / மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் நீங்கலாக மீண்டுவரும் செலவினம் | | 11,816,831 | |
| ஆ. கருத்திட்டம் நீங்கலாக மூலதனம் | | 155194 | |
| இ. கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடப்பட்டவை | | | |
| ஈ. கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடப்பட்டவை | 14,453,508 | 11,511,550 | 2,941,958 |

### 2.11.12. நிதியியல் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (ஈட்டப்பட்ட வருமானம்):

| வருமான மூலம் | 2010இல் ஏற்பாடு ரூபா | 2010இல் சேகரிப்பு ரூபா | பற்றாக்குறை / மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. பட்டக் கற்கைகள் | 30,000,000 | 2,153,701 | 846,299 |
| ஆ. பட்டப்பின் கற்கைகள் | 16,150,000 | 2,207,408 | 592,408 |
| இ. உசாத்துணை | | | |
| ஈ. ஏனையவை | | | |

### 2.11.13. 2010இல் கிடைத்த உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள்:

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| அமைவிடத்தைப் புதுப்பித்தல் | 405,516 | |

## 2.12 தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (NEREC)

**1. நோக்கு**

ஆராய்ச்சி, மதிப்பீடு, அபிவிருத்தி, பரப்புதல் செயற்பாடுகள் மற்றும் தகவல் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் கல்வி மற்றும் பயிற்சியை மேம்படுத்தல்.

**2. பணி**

தேசிய மற்றும் பிராந்திய தோற்றப்பாட்டைக் கொண்ட வலுமிக்க, முன்னோக்கிய, வெளிநோக்கிய கல்வி ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் பயிற்சி நிலையத்தைத் தாபித்தல்

**3. (அ) அறிமுகம்**

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (NEREC) இலங்கை, கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பீடத்தில் 2000ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியுடன் தாபிக்கப்பட்டது. NERECஐத் தாபிப்பதற்கான நிதி உதவியைப் பொறுத்தவரை, பொதுக் கல்விக் கருத்திட்டம் 2 மற்றும் மனித வள அபிவிருத்தி அமைச்சின் ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் ஈடுபடுத்தல் கருத்திட்டம், கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அடிப்படை ஆதரவை அளித்தன. NERECஇன் பிரதான குறிக்கோள் கல்வித்துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு கல்வியைத் திட்டமிடுவோருக்கு ஆலோசனை வழங்குவதாகும். கல்வி பரீட்சித்தல், மதிப்பீடு மற்றும் பயிற்சி ஆகியவை அதன் தொழிற்பாடுகளாகும்.

**(ஆ) சாதனைகள்**

NEREC ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது தரம் 04, 08 மற்றும் 10இன் அடைவில் தேசிய மதிப்பீடு, இரண்டாவது தேசிய மொழி, சமூக ஒருமைப்பாடு, பாடசாலை மட்ட முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் 28 ஆராய்ச்சிக் கற்கைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

**(இ) எதிர்காலத் திட்டங்கள்**

- 2011ஆம் ஆண்டில் தரம் 08ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவின் தேசிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- கல்வி ஆராய்ச்சி பற்றிய குறுகிய கால கற்கைநெறி நடத்தப்படும்.
- இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மட்ட கல்வி தொடர்பாக பீட மட்டத்திலான ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படும்.

### 2.12.1 கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் | : | பேரா. எம். கருணாநிதி |
| அலுவலக முகாமையாளர் | : | நயனி கமேதிகே |
| அலுவலக முகாமையாளர் | : | திரு. கே.எம். கனிஷ்கா கருணாநாயக்க |

2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீடு 2009ஆம் ஆண்டில் பூர்த்தியானது. இந்தக் கற்கையில் கல்விப்பீடத்தின் நான்கு (04) பீடங்களைச் சேர்ந்த பின்வரும் கல்விசார் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கலா. டபிள்யூ. சந்திரசேன
பேரா. எம். கருணாநிதி
பேரா. மாறி பெரேரா
திரு. பி.கே.ஜே.ஈ. நோனிஸ்
திருமதி பி. ஜாசிங்க
திருமதி ஆர்.டி.சி. நிரோஷினி

*இறுதி அறிக்கை உலக வங்கிக்கும் கல்வி அமைச்சுக்கும் 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.*

### 2.12.2 ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:

2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீடு 2009ஆம் ஆண்டில் பூர்த்தியானது. இறுதி அறிக்கை உலக வங்கிக்கும் கல்வி அமைச்சுக்கும் 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள்:

- 2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீட்டு இறுதி அறிக்கை (சிங்கள மொழி) – கல்வி அமைச்சு
- 2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீட்டு இறுதி அறிக்கை (தமிழ் மொழி) – கல்வி அமைச்சு
- 2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீட்டு பொழிப்பு அறிக்கை (சிங்கள மொழி) – கல்வி அமைச்சு

பரப்புதல் கருத்தரங்குகள்

- கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவு தேசிய மட்டத்தில் பரப்புதல் கருத்தரங்கை ஒழுங்கு செய்தது. கல்வி அமைச்சு, வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணக் கல்வி அலுவலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 300 அலுவலர்கள் பங்குபற்றினர். ஆய்வுக் குழுவைச் சேர்ந்த கலா. எம்.கருணாநிதி, கலா. டபிள்யூ. சந்திரதாச, பேரா. மாறி பெரேரா, திரு. ஜே. நோனிஸ் மற்றும் பி. ஜசிங்க ஆகியோர் ஆராய்ச்சியின் பல்வேறு அம்சங்களை முன்வைத்தனர்.

  தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளின் பயன் பற்றிய தனது கருத்தைத் தெரிவித்தார்.

- இரண்டாவது பரப்புதல் கருத்தரங்கு 2010 ஜுன் 9ஆம் திகதி NERECஇல் நடைபெற்றது. உலக வங்கி நிபுணர்கள் மற்றும் கல்வி அமைச்சினதும் நிதி ஆணைக்குழுவினதும் திட்டமிடல் பிரிவு அலுவலர்கள் பங்குபற்றினர்.

### 2.12.3 செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

- கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவு பரப்புதல் செயலமர்வொன்றை தேசிய மட்டத்தில் ஒழுங்கு செய்தது. கல்வி அமைச்சு, வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாண கல்வி அலுவலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 300 அலுவலர்கள் பங்குபற்றினர். ஆய்வுக் குழுவைச் சேர்ந்த கலா. எம்.கருணாநிதி, கலா. டபிள்யூ. சந்திரதாச, பேரா. மாறி பெரேரா, திரு. ஜே. நோனிஸ் மற்றும் பி. ஜசிங்க ஆகியோர் ஆராய்ச்சியின் பல்வேறு அம்சங்களை முன்வைத்தனர்.

  தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளின் பயன் பற்றிய தனது கருத்தைத் தெரிவித்தார்.

- இரண்டாவது பரப்புதல் கருத்தரங்கு 2010 ஜுன் 9ஆம் திகதி NERECஇல் நடைபெற்றது. உலக வங்கி நிபுணர்கள் மற்றும் கல்வி அமைச்சினதும் நிதி ஆணைக்குழுவினதும் திட்டமிடல் பிரிவு அலுவலர்கள் பங்குபற்றினர்.

### 2.12.4 கருத்திட்ட நிதி பற்றிய விபரங்கள்

| பெயர் | மானியம் | நிதியிடும் முகவர் |
|---|---|---|
| 2008ஆம் ஆண்டில் தரம் 04ஐப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் அடைவு பற்றிய தேசிய மதிப்பீடு | 9,760,752.00 | உலக வங்கி |

### 2.12.5 வேறு ஏதேனும் தொடர்பான விபரங்கள்

உலக வங்கி நிபுணர்கள் மற்றும் கல்வி அமைச்சின் ESDFP ஆகியோருடன் கலந்துரையாடல்.

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சாதனைகளின் தேசிய மதிப்பீட்டுக்கான எதிர்காலத் திட்டங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. உலக வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளர் கலா. ஹர்ஷ அதுருபான அவர்களின் தலைமையில் ஒரு குழு மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

துணை விதிகளின் திருத்தம்

பேரவை அதன் 430ஆவது கூட்டத்தில் NEREC துணைவிதிகளின் திருத்தத்தை அங்கீகரித்தது.

2010ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க புதிய திருத்திய துணை விதியின் பிரகாரம், முகாமைத்துவ சபைக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை NEREC மேற்கொண்டுள்ளது.

புதிய முகாமைத்துவ சபையின் முதலாவது கூட்டம் நவம்பர் 2ஆவது வாரத்தில் நடைபெற்றது. 2010ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபையின் நான்கு (04) கூட்டங்கள் நடைபெற்றன.

தற்போதைய பணிப்பாளரின் 3 வருட பதவிக்காலம் 2010.10.31ஆம் திகதி முடிவடைந்தது. ஒரு பணிப்பாளரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.13 உடற்கல்வித் துறை

**அறிமுகம்**

உடற்கல்வித்துறை உப-வேந்தரின் பணிப்பின் கீழ் இயங்குகின்றது. விளையாட்டுச் சபை ஓர் ஆலோசனைக் குழுமமாகச் செயற்படுகின்றது. இந்தத் துறை தொடர்ச்சியாக சபையில் இரண்டு வருடங்கள் சேவையாற்றுவதற்கு உப-வேந்தரால் நியமிக்கப்பட்ட இருபத்தாறு (26) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. உடற்கல்வித்துறை ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழக இணைந்த கழகத்தின் ஆதரவுடன் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இணைந்த கழகத்தை உருவாக்குதல் உடற்கல்வித் துறையினால் ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படுகன்றது. இது குறித்த விளையாட்டுகளுக்கான 36 அணித்தலைவர்களையும் சிரேஷ்ட பொருளாளராக உடற்கல்வி பணிப்பாளரையும் கொண்டுள்ளது.

**பணியாளர்கள் பற்றிய தகவல்கள்**

உடற்கல்வித்துறையின் கல்விசார் பணியாளர் குழு பதில் பணிப்பாளர், 3 போதனாசிரியர்கள், சிரேஷ்ட பணியாளர் உதவியாளர் (சுருக்கெழுத்தாளர்), சிரேஷ்ட பணியாளர் உதவியாளர் (எழுதுவினைஞர்), 2 பயிலுனர்கள், மைதானக் காப்பாளர், 7 தொழிலாளர்கள் மற்றும் புல் வெட்டும் இயந்திர இயக்குனர் ஆகியோரை உள்ளடக்கியதாகும். இந்தத் துறை 2010ஆம் ஆண்டில் 17 பகுதிநேர பயிற்றுவிப்பாளர்களின் உதவியைப் பெற்றது.

**10ஆவது இலங்கை பல்கலைக் கழக விளையாட்டுகள் - 2010**

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஆண் மற்றும் பெண் பட்டதாரி மாணவர்கள் இருசாராரும் SLUSAயினால் ஒழுங்குசெய்யப்பட்ட 10ஆவது இலங்கை பல்கலைக் கழக விளையாட்டுகள் - 2010இல் முப்பத்தாறு (36) விளையாட்டுகளில் பங்குபற்றி ஒட்டுமொத்த சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். 2010ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக் கழகம் தொடர்ந்து மூன்றாவது தடவையாக ஒட்டுமொத்த சம்பியன்களாத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆண் மற்றும் பெண் நீச்சல் குழுக்கள் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பல சாதனைகளை நிலைநாட்டினர்.

**பீடங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டி**

சம்பந்தப்பட்ட விளையாட்டுகளுக்குப் பொறுப்பான போதனாசிரியர்களின் மேற்பார்வையின் கீழ், அணித்தலைவர்கள் புதிய மாணவர்களுக்கான திறந்த மற்றும் பீடங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளையும் விளையாட்டுப்போட்டிகளையும் அத்துடன் வர்ண விருது வழங்குவதற்குத் தேவையான எண்ணிக்கையிலான சினேகபூர்வ போட்டிகளையும் ஒழுங்குசெய்தனர்.

**தேசிய / சர்வதேச குழுமங்களுக்கான பங்களிப்புகள்**

பல்கலைக் கழகம் தேசிய / சர்வதேச மட்டத்தில் பின்வரும் விளையாட்டுக் குழுமங்களுடன் இணைந்துள்ளது.

- இலங்கை கிறிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை
- இலங்கை சதுரங்க சம்மேளனம்
- இலங்கை றக்பி உதைபந்தாட்டச் சங்கம்
- இலங்கை அமச்சூர் படகுவலித்தல் சங்கம்
- இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கம்
- இலங்கை பாரம் தூக்குதல் சம்மேளனம்

- இலங்கை மல்யுத்தச் சம்மேளனம்
- இலங்கை கரம் சம்மேளம்
- இலங்கை டென்னிஸ் சங்கம்

**மாவட்டச் சங்கம்**

- மேல் மாகாண பூப்பந்தாட்டச் சங்கம்
- கொழும்பு ஹொக்கி சங்கம்
- கொழும்பு படகுவலித்தல் கழகம்
- கொழும்பு மாவட்ட கிறிக்கெற் சங்கம்
- கொழும்பு மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம்

**APIIT விளையாட்டு விழா**

கொழும்புப் பல்கலைக் கழக கரம் ஆண்கள் அணி APIIT விளைாயட்டு விழாவில் பங்குபற்றி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

**உலக பல்கலைக்கழக விளையாட்டுகள்**

எமது பல்கலைக் கழகத்தின் ஆறு (06) வீரர்களை உள்ளடக்கிய இலங்கை பல்கலைக் கழக விளையாட்டுச் சங்க ஆண்கள் அணி ஜப்பானில் நடைபெற்ற 5ஆவது உலக பல்கலைக் கழக தரைப்பந்தாட்ட சம்பியன் போட்டி 2010இல் பங்குபற்றியது.

**5ஆவது UTIM சர்வதேச விளையாட்டு விழா – 2010 -மலேசியா**

றகர், உதைப்பந்தாட்டம் மற்றும் பூப்பந்தாட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்) அணிகள் மலேசியாவில் நடைபெற்ற 5ஆவது UTIM சர்வதேச விளையாட்டு விழா – 2010இல் பங்குபற்றின.

**சர்வதேச பல்கலைக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுகள் - 2010 – மலேசியா**

படகுவலித்தல் ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் கிறிக்கெற் அணிகள் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச பல்கலைக் கழக விளையாட்டுகள் - 2010இல் பங்குபற்றின.

## 2.14 சுகாதார நிலையம்

**பணியாளர்கள்**

பிரதான மருத்துவ அலுவலர், கலாநிதி (திருமதி) ரோஸ் பீரிஸ் முப்பத்தைந்து (35) வருட அர்ப்பணிப்பு மிக்க சேவையின் பின்னர் 2010.02.26ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். சிரேஷ்ட மருத்துவ அலுவலர் கலா. கே.டி.ஐ. வாசுதேவ பதில் பிரதான மருத்துவ அலுவலராக நியமிக்கப்பட்டார். மருத்துவ அலுவலர் கலா. எஸ்.ரி. கணனகே 2010 பெப்ரவரியிலிருந்து தனது பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுகின்றது. கலா. (செல்வி) எஸ்.பி. பெரேரா ஒப்பந்த அடிப்படையில் மருத்துவ அலுவலராக நியமிக்கப்பட்டார்.

பல் அறுவைச் சிகிச்சை வைத்தியர் (திருமதி) எதிரிவிக்கிரம நிரந்தரமான பல் அறுவைச் சிகிச்சை வைத்தியர் இற்றைவரை நியமிக்கப்படாத காரணத்தினால் தொடர்ந்தும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றார்.

2010.10.01ஆம் திகதி புதிய பொது சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

**சேவைகள்**

- சுகாதார நிலைய மருத்துவர்கள் மருத்துவ உசாத்துணைச் சேவையை வழங்குவதுடன் உளவளச் சேவையாளர்களாகவும் தொழிற்படுகின்றனர்.

- எல்லா புதிய மாணவர்களுக்கும் மருத்துவ வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்காக அவர்களின் மருத்துவர்களினால் நிரப்பப்பட வேண்டிய கேள்விக்கொத்து ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- எல்லா மருத்துவ மாணவர்களும் UMOவினால் முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

- பல்கலைக் கழகச் சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எல்லோரும் (கொழும்புப் பல்கலைக் கழகம் / UGC / PGIM / IIM / ஹொரண ஸ்ரீ பாளி) பல்கலைக் கழக மருத்துவ அலுவலரினால் சோதிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

- அவ்வாறே இந்த நிறுவனங்களின் எல்லா ஊழியர்களும் நீடிப்புச் சேவைக்காக பரிசோதிக்கப்படுகின்றனர்.

- பாரம் தூக்குதல், படகுவலித்தல், மல்யுத்தம், வீதி ஓட்டம் போன்ற விசேட விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மாணவர்களின் மருத்துவ மற்றும் உடல் தகுதிப் பரிசோதனைகள் நடைபெற்றன.

- UGC / PGIM / IIM ஆகியவற்றில் உள்ள பணியாளர்களுக்கு மருத்துவ பராமரிப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன.

**பொது மருத்துவ சேவை**

கிரமமான பொது சுகாதார சேவை செயற்பாடாக நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களில் பூச்சிகொல்லிகளை விசிறுதல் மேற்கொள்ளப்பட்டது. அடிக்கடி வடிகான் முறைமைகள் தடைப்படுகின்ற பிரச்சினையை சுகாதார நிலைய துப்புரவேற்பாட்டு தொழிலாளர்களால் தீர்க்க முடியாமல் இருந்த காரணத்தினால் இந்த சேவைக்கு தனியார் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் மாநகரசபை ஆகியவற்றிலிருந்து வெளிவளம் இடப்பட்டதனால் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

சுத்திகரிப்புச் சேவைகள், குப்பைகளை அகற்றுதல் மற்றும் தொடர்பான சேவைகள் சுகாதார நிலையத்தினால் கண்காணிக்கப்பட்டன.

2010 மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை டெங்கு நோய் பரவிய காலப்பகுதியில் விடுதிகள், உணவகங்கள் மற்றும் பல்கலைக் கழகத்தின் எல்லாக் கட்டிடங்களையும் உள்ளடக்கி விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

### வழங்கப்பட்ட சேவைகள்

மொத்தமாக எட்டாயிரத்துத் தொண்ணூற்று மூன்று (8093) மாணவர்களும் பணியாளர் குழு உறுப்பினர்களும் சிகிச்சைக்காக மருத்துவ நிலையத்திற்கு வந்திருந்தனர். மூவாயிரத்து நானூற்று அறுபது (3460) நோயாளர்களுக்கு மருந்து கட்டப்பட்டது. எழுபத்தி நான்கு (74) புதிய மாணவர்களுக்கும் நீடிப்புச் சேவை கோரப்பட்ட எண்பத்தெட்டு (88) ஊழியர்களுக்கும் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இருநூற்று நாற்பத்தெட்டு (248) நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

மீளாய்வாண்டில், இருநூற்று முப்பத்தெட்டு (238) நோயாளிகளுக்கு தடுப்பு மருந்துகள் ஏற்றுதல் கண்காணிக்கப்பட்ட அதேவேளை, சுமார் நானூறு (400) இரத்த, சிறுநீர் மற்றும் ஏனைய கிரமமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நானூறு (400) சந்தர்ப்பங்களில் முதலுதவி மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன. பல்சிகிச்சைக் கூறில், நூற்று எண்பத்தைந்து (185) நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். நானூற்றுப் பதினான்கு (414) நோயாளர்கள் உசாத்துணை சேவைக்கு சமூகமளித்த அதேவேளை, நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது (199) நோயாளர்களுக்கு பற்கள் நிரப்பப்பட்டதுடன் ஐம்பத்தொரு (51) நோயாளர்களுக்கு பற்கள் பிடுங்கப்பட்டன.

## 2.15 நூலகம்

**அறிமுகம்:**

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் எல்லா நூலகங்களும் சுமுகமாக இயங்கின. எனினும், நூல்கள் மற்றும் பருவ இதழ்களுக்கான நிதி ஒதுக்கீடு இன்மையால் நூலகத்தின் அபிவிருத்தியும் அதன் சேவைகளும் தடங்கலுக்கு உள்ளாயின. நூலகம் தொடர்ந்தும் மேற்கொண்ட பட்டதாரி மாணவர்களுக்கான கல்விசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக பீட நூலக ஒத்துழைப்பு அபிவிருத்தியடைந்தது.

### 2.15.1 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்:

நூல்கள் மற்றும் பருவ இதழ்களுக்கான ஒதுக்கீடு இல்லாமை பாரிய சிரமங்களை ஏற்படுத்தியது. வழக்கமாக வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் எல்லா வெளியீடுகளினதும் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்தல் சந்தாக்களைப் புதுப்பிப்பதைப் பாதித்தது. எனினும், இவ்வாண்டில் பல்கலைக்கழகம் காலத்துக்குக் காலம் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான 56 தலைப்பிலான குறிப்பேடுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டது. கடந்த மூன்று வருடங்களில் சந்தா

செலுத்தப்பட்ட பருவ இதழ்களின் எண்ணிக்கைக் குறைவு நூலகம் எதிர்நோக்கிய கவலைக்குரிய சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றது. பருவ இதழ்களுக்கான சந்தா 2008இல் ரூபா 138 மில்லியன், 2009இல் ரூபா 131 மில்லியன் மற்றும் 2010இல் ரூபா 56 மில்லியன் ஆகும். சாதாரணமாக பருவ இதழ்களுக்கான சந்தா ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதால், பல்கலைக் கழகம் இந்தச் சூழ்நிலையை UGCஇற்கும் திறைசேரிக்கும் விளக்கி நூல்களுக்கும் பருவ இதழ்களுக்குமான ஒதுக்கீடுகளை ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் ஆராய்ச்சி நூலகங்களுக்கும் 2003 முதல் e-வளங்களுக்கு நிதியிட்ட நூலக Sida/SAREC ஆதரவுக் கருத்திட்டம் 2010ஆம் ஆண்டு ஜுன் மாதம் முடிவடைந்தது. பெரும்பாலான இலத்திரனியல் தரவுத் தளங்களை அடையும் வாய்ப்பு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டிருந்ததால் இந்நிலைமை நூலகங்களால் வழங்கப்படும் சேவைகளில் மிகக்கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**கிடைக்கக்கூடிய E-வளங்கள்**

1. எமரல்ட் (Sida/SAREC நூலக ஆதரவுக் கருத்திட்டத்தின் ஊடாக)
2. எச் டபிள்யூ வில்சன் (Sida/SAREC நூலக ஆதரவுக் கருத்திட்டத்தின் ஊடாக)
3. JSTOR (புதுப்பித்தல் கட்டணம் நூலக ஒதுக்கீடுகளிலிருந்து)
4. Ebsco host (அமெரிக்க தகவல் மற்றும் வளங்கள் நிலையத்தின் ஊடாக)
5. சில விஞ்ஞான மொடியூல்கள் நேரடியாக (ITI ஊடாக)
6. ஒன்பது தரவுத் தளங்கள் (INASP ஊடாக)
7. E-நூல்கள் மற்றும் செய்திப் பத்திரிகைகளைப் பெறுதல் (திறந்த மூலம்)

பட்டதாரி மாணவர்களுக்கு e-வளங்களில் பயிற்சி அளித்தல் அறிமுகப்படுத்தப்பட்டதால் பிரதான மருத்துவ மற்றும் விஞ்ஞான நூலகங்களின் e -வள நிலையங்களின் பயன்பாட்டுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. மாணவர்களுக்குக் கிடைக்கும் கணனிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.

**2010இல் வழங்கல்களின் எண்ணிக்கை**

| வகுதி | பிரதான | மருத்துவ | விஞ்ஞான |
|---|---|---|---|
| இரவல் வழங்கல் | 36775 | 12245 | 5731 |
| உசாத்துணை | 9696 | 10862 | 7310 |
| பணியாளர் | 1937 | 276 | 542 |
| | **48408** | **23383** | **13583** |
| சராசரி நாளாந்த வருகை | 844 | 496 | 254 |

**2010ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை**

| வகுதி | பிரதான | மருத்துவ | விஞ்ஞான |
|---|---|---|---|
| மாணவர்கள் | 4388 | 1413 | 2464 |
| கல்விசார் பணியாளர்கள் | 61 | 259 | 359 |
| தற்காலிக (தேசிய) | 48 | - | - |
| தற்காலிக (சர்வதேச) | 01 | - | - |
| **மொத்தம்** | **4467** | **1672** | **2823** |

| பீடம் | கற்கைநெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணியாளர்கள் | மொத்த கல்விசாராப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| பிரதான நூலகம் | | 5255 | 10 | 39 |
| மருத்துவ நூலகம் | | 2013 | 01 | 17 |
| விஞ்ஞான நூலகம் | | 2464 | 01 | 12 |
| | | | | |
| மொத்தம் | | 9732 | 12 | 61 |

### 2.15.2 கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்:

| | | | நூலகர் | பிரதி நூலகர் | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் - I | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் - II | உதவி நூலகர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிரதான நூலகம் | | | 01 | - | 02 | 03 | 04 | |
| மருத்துவ நூலகம் | | | | - | 01 | - | - | |
| விஞ்ஞான நூலகம் | | | | | | 01 | - | |
| | | | | | | | | |
| மொத்தம் | | | 01 | - | 03 | 04 | 04 | |

**பணியாளர் அபிவிருத்தி:**

கல்விசார் பணியாளர்கள்:

- கலா. அனுர கருணாநாயக்க ஜப்பானிய சுகோபா பல்கலைக் கழகத்திலிருந்து பீஎச்.டி பட்டத்தைப் பெற்ற பின்னர் ஏப்ரல் மாதத்தில் கடமையை மீண்டும் பொறுப்பேற்றார்.
- இவ்வாண்டு மே மாதம் தென்னாபிரிக்க பல்கலைக்கழகம் கலா. சமிந்த ஜயசுந்தரவுக்கு பிஎச்.டி பட்டம் வழங்கியது.
- இரண்டு சிரேஷ்ட உதவி நூலகர்கள் மலேசியாவிலும் கொழும்பிலும் தமது பீஎச்.டி பட்டக் கற்கையை மேற்கொண்டுள்ளனர்.
- ஒரு உதவி நூலகர் MLSப் பெற்றுள்ளார்.
- இரண்டு உதவி நூலகர்கள் தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.
- ஒரு உதவி நூலகர் PGDISM பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

நிறைவேற்றுப் பதவியினர்:

- உதவிப் பதிவாளர் முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்துள்ளார்.

நூலக உதவியாளர்கள்:

- பல நூலக உதவியாளர்கள் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டுள்ளனர். மூன்று நூலக உதவியாளர்கள் இலங்கை நூலக சங்கத்தின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

**கல்விசாராப் பணியாளர்கள்:**

| நூலகம் | | சிரேஷ்ட பணியாளர் | கனிஷ்ட பணியாளர் | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| | AR/ நூலக சேவை | SSA & SA | LA தரம். I, II & III; CAA | நூ. ஊழியர்; நூல் கட்டுனர்; மற்றும் சிற்றூழியர். |
| பிரதான நூலகம் | 01 | 08 | 13 | 18 |
| மருத்துவ நூலகம் | - | 04 | 06 | 07 |
| விஞ்ஞான நூலகம் | - | 03 | 04 | |
| | | | | |
| மொத்தம் | 01 | 15 | 23 | 25 |

### 2.15.3 ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்:

**வெளியீடுகள்:**

**மகாநாட்டுப் பத்திரங்கள் மற்றும் சமர்ப்பிப்புகள்:**

1. ஜயசூரிய எஸ்.சி., பீற்றர்சன் டி.ரி.ஏ. - மூன்று மருத்துவ நூலகங்களில் சாதன பயன்பாட்டின் ஒப்பீட்டு மதிப்பீடு. JULAவில் வெளியீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2. ஜயசூரிய எஸ்.சி., ரமணன். ரீ. இலங்கையில் நூலக ஆய்வரங்கு: தடைகள் மற்றும் வாய்ப்புகள்

பல்கலைக் கழகம் 2010 மே 12ஆம் திகதி ''அறிவுப் பொருளாதாரமும் உயர் கல்வியும்'' என்னும் கருப்பொருளைக் கொண்ட வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கை நடத்தியது. மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஹர்ஷலால் ஆர். செனவிரத்ன ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவராக செயலாற்றினார்.

இந்திய உயர் ஸ்தானிகர் அதிமேதகு அஷோக் கே. காந்தா ''அறிவுப் பொருளாதாரமும் உயர் கல்வியும் - இந்தியக் கல்வி'' பற்றி பேருரை நிகழ்த்தினார்.

கொரியக் குடியரசின் தூதுவர் அதிமேதகு கலாநிதி சோய் கி சூல் ''கொரியாவில் உயர் கல்வி'' பற்றிய ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

2010 மே 13ஆம் திகதி, ஏழு பீடங்களும் தமது ஆராய்ச்சி அமர்வுகளை தனித்தனியாக நடத்தின. கலைப்பீடத்தின் ஆய்வரங்கின் கருப்பொருள் ''சமகால இலங்கையில் சவால்களும் வாய்ப்புகளும்'' என்பதாகும். இந்த ஆய்வரங்கில் பதினெட்டு (18) சமர்ப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. கல்விப் பீடத்தின் அமர்வில் பத்து பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. பட்டக்கற்கைகள் பீடம், சட்ட பீடம் மற்றும் முகாமைத்துவமும் நிதியும் ஆகிய பீடங்களில் அமர்வுகளில் முறையே எட்டுப் பத்திரங்கள், பதினொரு பத்திரங்கள் மற்றும் நான்கு பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
ஓய்வு நிலைப் பேராசிரியர் பிரியாணி சொய்சா மருத்துவ பீடத்தின் அமர்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். றுகுணு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் பேருரை நிகழ்த்தினார். ஆறு பத்திரங்கள் ''முழுநிறைவான'' அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டன.

சமூக மருத்துவ சிரேஷ்ட பேராசிரியரும் மருத்துவ பீடத்தின் முன்னைநாள் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் துலித பெர்னாண்டோ ''ஆரோக்கியத்துக்கான ஆராய்ச்சி'' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

விஞ்ஞான பீடத்தின் அமர்வுகளில் இருபது சமர்ப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. முகாமைத்துவ நிதிப்பீடம் அதன் 5ஆவது வருடாந்த சர்வதேச ஆராய்ச்சி மகாநாட்டை 2010 டிசம்பர் 10ஆம் திகதி நடத்தியது. இந்த மகாநாடு உள்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் தமது வெளிநாட்டு சகாக்களைச் சந்தித்து அவர்களின் ஆராய்ச்சிகள் பற்றி கலந்தாராய்வதற்கும் வாதிப்பதற்குமான உன்னத களம் ஒன்றை வழங்கியது.

கலைப்பீடம் 2010 ஜனவரி 08ஆம் திகதி ''இலங்கையில் மொழிப்பயன்பாடு : வகைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறை'' பற்றிய ஆய்வரங்கை நடத்தியது. பன்மொழி/இருமொழி போதனைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சியின் பிரதான விடயங்களையும் சவால்களையும் கலந்துரையாடுவதற்கான மன்றமாக இந்த ஆய்வரங்கு திகழ்ந்தது. இங்கு ஆராயப்பட்ட பரந்த கருப்பொருள்கள் மொழி திட்டமிடல், கொள்கை மற்றும் இலங்கை ஆங்கிலம், இலங்கையில் பன்மொழி நடைமுறை மற்றும் முறைமைகள், இருமொழிக் கற்பித்தலின் கொள்கைகளும் நடைமுறையும் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. ஆங்கில இலக்கணத்துறைத் தலைவரும் ஜேர்மனி ஜஸ்டுஸ் லீபிக் பல்கலைக் கழகத் தலைவருமான பேராசிரியர் ஜோய்ப்ராட்டோ முகர்ஜி பேருரையை நிகழ்த்தினார்.

7ஆவது வருடாந்த தெற்காசிய பொருளியல் மாணவர்களின் சந்திப்பு உச்சி மகாநாடு – வருடாந்த சிறு உச்சிமகாநாடு – பொருளியல் துறையினால் நடத்தப்பட்டது. இந்த உச்சிமகாநாட்டில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்கள் இந்த பங்குபற்றினர்.

மருத்துவ பீடம் பொது சுகாதார ஆசிய பசுபிக் கல்விசார் அமைப்புடன் இணைந்து உலகளாவிய சுகாதாரம் பற்றிய சர்வதேச மகாநாட்டை நடத்தியது.

## 3.6 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்பு

**கலைப் பீடம்**

பேரா. டபிள்யூ.ஐ. த சில்வா
பேரா. கே.ஏ.பி. சித்திசேன
பேரா. டபிள்யூ.பி. அமரபந்து
கலா. எஸ். உக்வத்த
கலா.ஆர்.டபிள்யூ.ரி.பி.ரஞ்சித் பண்டார
கலா. ரி.எல். குணருவன்
கலா. டி.ஏ.சி. சில்வா
பேரா. நெலூபர் த மெல்
பேரா. நெலுகா சில்வா
திரு. டபிள்யூ.என். வில்சன்
பேரா. எஸ்.ஏ. நோபர்ட்
திரு. ஆர். சிறிகாந்தன்
கலா. ஆர்.யு.கே. பியதாச
கலா. டி.என்.என்.ஆர். தேவசிறி
பேரா. அமல் ஜயவர்தன
பேரா. நயனி மெலேகொட
பேரா. லக்சிறி பர்னாந்து
பேரா. ஜயதேவ உயன்கொட
திரு. தம்ம திஸாநாயக்க
பேரா. எஸ்.டி. ஹெட்டிகே
பேரா. சசங்க பெரேரா
திரு. ஜகத் வெல்லவத்த
பேரா. ரமணி ஜயதிலக
கலா. தயான் ஜயதிலக
கலா. சுபாங்கி ஹேரத்
கலா. சாந்தனி லியனகே
பேரா. அசங்க திலகரத்ன
திருமதி குமுது கருணாரத்ன
திருமதி ஆர். குலசிங்கம்

**கல்விப் பீடம்**

பேராசிரியர் மாறி ஈ.எஸ். பெரேரா
பேரா. எஸ். சந்திரசேகரம்
பேரா. எம். கருணாநிதி
கலா. டபிள்யூ. சந்திரதாச
திரு. பி.கே.ஜே.ஈ. நோனிஸ்
திருமதி பி. ஜாசிங்க
ஆர்.டி.சி. நிரோஷினி
பேரா. ரோலன்ட் அபேபால
பேரா. மஞ்சுல விதானபதிரண
கலா. ஏ.ஏ. ஜயவர்தன
திரு. என்.வி. கருணாசேன
திரு. டபிள்யூ.எம். பிரக்னதர்ஷன
எஸ்.என். ராஜேந்திரம்
கலா. எல்.கே.பி. வெடிக்காரகே
திரு. எல்.எம்.கே. பண்டார

**சட்ட பீடம்**

திரு. என். செல்வக்குமரன்
பேரா. ஷர்யா ஸ்கார்னிவள்
திரு. ஏ. சர்வேஸ்வரன்
ஜீவ நிரிஎல்ல

**பட்டக் கற்கைகள் பீடம்**

பேரா. கே.எஸ். சந்திரசிறி

**மருத்துவ பீடம்**

| | | |
|---|---|---|
| பேரா. ஜயசேகர எம் எம் ஆர் | பேரா. சுனேத்ரா அத்துகோரல | பேரா. மத்தியூ சி பி டி |
| கலா. விஜேசுந்தர டபிள்யு எஸ் | பேரா. பர்னாந்து டி என் | கலா. அரம்பேபால என் எம் |
| பேரா. செனவிரத்ன ஆர் த ஏ | திருமதி. லங்காதிலக கே | கலா. குணவர்தன என் எஸ் |
| கலா. செனரத் எல் டி ஜே யூ | கலா. வீரசிங்க எம் சி | கலா. சமரநாயக்க.டி.பி.டி.எல் |
| கலா. வெலியங்கே ஏ ஏ எஸ் | பேரா. ரிஸ்வி ஷெரி∴ப் | திரு. பதிரண டபிள்யூ |
| கலா. லெனரோல ஆர் டி | கலா. கட்டுலந்த பி | கலா. குணதுங்க.எம்.டபிள்யூ |
| பேரா. பர்னாந்து எஸ் எஸ் டி | கலா. கருணாநாயக்க பி | பேரா. பெரேரா ஏ ஜே |
| பேரா. சேனாநாயக்க எம் பி | கலா. த சில்வா ஷம்யா | கலா. சேனநாயக்க சி பி |
| கலா. அஜந்தன் ஆர் | பேரா. செனவிரத்ன எச் ஆர் | பேரா. ரந்தெனிய சி |
| கலா. ரொட்ரிகோ இஷானி | திருமதி. விஜேரத்ன எஸ் | கலா. பர்னாந்து டி |
| கலா. விக்ரமசிங்க வி பி | பேரா. கருணவீர என் டி | கலா. ஸ்ரீ ரங்கநாதன் எஸ் |
| கலா. செனரத் எல் டி ஜே யு | கலா. பதிரண எஸ் | கலா. அபயதீர ஏ யு |
| கலா. கொரியா ஈ | பேரா. பர்னாந்துபுள்ளே பி எம் | கலா. வீரசிங்க எம் சி |
| கலா. சமரசேகர டி டி | கலா. கலப்பத்தி பி | திருமதி. த சொய்சா பி |
| கலா. களுஆரச்சி ஏ | பேரா. மெண்டிஸ் என் | பேரா. சமரசேகர டி என் |
| பேரா. விஜேரத்ன சி என் | பேரா. சமரசிங்க டி | பேரா. ஜயகொடி ஆர் எல் |
| கலா. தொடம்பஹல எஸ் எச் | கலா. த சில்வா வருணி | பேரா. விஜேவர்தன எஸ் எம் |
| கலா. டயஸ் எம் என் ஜே | பேரா. த ஏப்று கே | கலா. காரியவசம் எச் |
| கலா. த சொய்சா எம் ஐ எம் | பேரா. அங்குனவெல பி | கலா. விஜயபண்டார எம் டி |
| கலா. அந்தோனி டி ஜே | கலா. கருணாதிலக ஐ எம் | கலா. காரியவசம் எச் |
| கலா.விஜயபண்டார எம் டி ஜே | கலா. கருணாதிலக ஐ எம் | |
| திரு. பதிரண டபிள்யு | கலா. டி ஜே அந்தோனி | |

## ஸ்ரீ பாளி வளாகம்

கலா. ரியூடர் வீரசிங்க
கலா. ரஞ்சன் ஹெட்டிஆராச்சி
கலா. பிரதீப் வீரசிங்க
திரு. ஜே.எம்.ஆர்.சி. பண்டார
திரு. எஸ்.எல்.பி. பொன்சேகா

## 3.7 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

ஏழு பீடங்களில் ஆறும் ஸ்ரீ பாளி வளாகமும் இளமாணிப் பட்டங்களுக்கு வழிகோலும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

**கலைப்பீடம்**

கலை இளமாணி (பொதுப்பட்டம் (3 வருடங்கள்)
பின்வரும் விடயங்களில் கலை இளமாணி (விசேட பட்டங்கள்) (4 வருடங்கள்):

- குடிமதிப்பியல்
- பொருளியல்
- ஆங்கிலம்
- புவியியல்
- வரலாறு
- சர்வதேச உறவுகள்
- பாளி மற்றும் பௌத்த கற்கைகள்
- அரசியல் விஞ்ஞானம்
- சிங்களம் மற்றும்
- சமூகவியல்

**கல்விப்பீடம்**

கல்வி இளமாணி (விசேட பட்டம்) (4வருடங்கள்)

**சட்ட பீடம்**

சட்ட இளமாணி (விசேட பட்டம்) (4 வருடங்கள்)

**முகாமைத்துவ பீடம்**
பின்வரும் விடயங்களில் வியாபார நிர்வாகத்தில் இளமாணி (விசேட பட்டம்) (4 வருடங்கள்):

- பொது முகாமைத்துவம்
- நிதி
- கணக்கீடு
- வியாபார பொருளியல்
- சந்தைப்படுத்தல்

**மருத்துவப் பீடம்**

மருத்துவ இளமாணி மற்றும் அறுவை மருத்துவ இளமாணி
விஞ்ஞான இளமாணி - இயன்மருத்துவம் (விசேடம்) (4 வருடங்கள்)

**விஞ்ஞான பீடம்**

விஞ்ஞான இளமாணி (பொதுப்பட்டம்) (3 வருடங்கள்)

- உயிரியல் விஞ்ஞானம்
- பௌதீக விஞ்ஞானம்
- மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனம்
- கைத்தொழில் புள்ளிவிபரவியல் மற்றும் கணிதவியல் நிதி

விஞ்ஞான இளமாணி (பொதுப்பட்டம்) (4 வருடங்கள்)

- உயிரியல் விஞ்ஞானம்
- மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனம்
- கைத்தொழில் புள்ளிவிபரவியல் மற்றும் கணித நிதி
- பௌதீக விஞ்ஞானங்கள்

விஞ்ஞான இளமாணி (விசேட பட்டம்) (4 வருடங்கள்)

- தாவர விஞ்ஞானங்கள்
- தாவர உயிர்த்தொழில்நுட்பம்
- உயிர்த்தகவல்நுட்பம்
- இரசாயனவியல்
- கணிப்பு இரசாயனவியல்
- இரசாயன உயிரியல்
- மருந்தகவியல் (மருத்துவ பீடத்துடன் இணைந்து)
- மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனம்
- பௌதீகவியல்
- கணிப்புப் பௌதீகவியல்
- பொறியியல் பௌதீகவியல்
- கணிதவியல்
- கணிதவியல் நிதி
- பாரம்பரிய கணிதவியல்
- நிதி, வணிகவியல் மற்றும் கணிப்புக் கணிதவியல்
- கணிதவியல், கணனியுடன் புள்ளிவிபரவியல்
- புள்ளிவிபரவியல்
- கணனி விஞ்ஞானத்துடன் புள்ளிவிபரவியல்
- கைத்தொழில் புள்ளிவிபரவியல்
- விலங்கியல்

**ஸ்ரீ பாளி வளாகம்**

கலை இளமாணி (விசேட பட்டம்) (4 வருடங்கள்)

- வெகுசன தொடர்புசாதனக் கற்கைகள்
- அரங்காட்டற் கலைகள்

## 3.8 பட்டப் பின் நிகழ்ச்சித்திட்டங்கள்

பட்டப்பின் டிப்புளோமா, கற்கைநெறி மூலம் முதுமாணி, கற்கை நெறி வேலை மற்றும் ஆராய்ச்சி மூலம் முதுமாணி பட்டங்கள் மற்றும் தத்துவ முதுமாணி, மருத்துவக் கலாநிதி (DM) மற்றும் தத்துவக் கலாநிதி ஆகிய பட்டங்களுக்கு வழிகோலும் பட்டப்பின் கற்கைநெறிகள் எல்லாப் பீடங்களினாலும் நடத்தப்பட்டன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

**கலைப்பீடம்**

- தத்துவ முதுமாணி / தத்துவக் கலாநிதி (எல்லாத் துறைகளிலும்)
- கலை முதுமாணி (ஆராய்ச்சி மூலம்) (எல்லாத் துறைகளிலும்)
- பொருளியல் முதுமாணி
- நிதிப்பொருளியலில் முதுமாணி
- சர்வதேச உறவுகளில் கலை முதுமாணி
- அரசியல் விஞ்ஞானத்தில் கலை முதுமாணி
- சமூகவியலில் கலை முதுமாணி
- பிரயோக சமூகவியலில் பட்டப்பின் டிப்புளோமா
- பொருளியல் அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்புளோமா
- சனத்தொகைக் கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா

**கல்விப் பீடம்**

தத்துவ முதுமாணி / தத்துவ கலாநிதி
கல்வி முதுமாணி

- பொது
- முகாமைத்துவம்
- உளவியல்
- விஞ்ஞானம்

கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா
கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா – ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்
நாடகம் மற்றும் அரங்கத்தில் பட்டப்பின் டிப்புளோமா
உளவளச் சேவையில் பட்டப்பின் டிப்புளோமா
சமூக அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்புளோமா

**பட்டக் கற்கைகள் பீடம்**

- தத்துவ முதுமாணி / தத்துவ கலாநிதி (பல்துறைக் கற்கைகள்)
- பிணிஆய்வு உளவியலில் தத்துவ முதுமாணி
- நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி
- வணிகக் கற்கைகளில் முதுமாணி
- பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் முதுமாணி
- மகளிர் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி / மகளிர் கற்கைகளில் முதுமாணி
- மனித உரிமைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி / மனித உரிமைகளில் முதுமாணி
- முரண்பாட்டுத் தீர்வில் பட்டப்பின் டிப்புளோமா/ முதுமாணி / முரண்பாட்டுத் தீர்வில் முதுமாணி
- தொழில் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா/ முதுமாணி / தொழில் கற்கைகளில் முதுமாணி
- ஜப்பானியக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி / ஜப்பானியக் கற்கைகளில் முதுமாணி
- தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- அபிவிருத்திக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- அமெரிக்கக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முதுமாணி
- உளவளச் சேவை மற்றும் உளவியல் பணியில் பட்டப்பின் டிப்புளோமா
- வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா
- உற்பத்தி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா / உற்பத்தி முகாமைத்துவத்தில் முதுமாணி
- முரண்பாடு மற்றும் சமாதானக் கற்கைகளில் பட்டப்பின் டிப்புளோமா / முரண்பாடு மற்றும் சமாதானக் கற்கைகளில் முதுமாணி

**சட்ட பீடம்**

தத்துவ முதுமாணி / தத்துவக் கலாநிதி
சட்ட முதுமாணி

**முகாமைத்துவ நிதிப்பீடம்**

தத்துவ முதுமாணி / தத்துவக் கலாநிதி
வியாபார நிர்வாக முதுமாணி (பொது)
நிதியில் வியாபார நிர்வாக முதுமாணி
சந்தைப்படுத்தலில் வியாபார நிர்வாக முதுமாணி
மனித வள முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக முதுமாணி

**மருத்துவ பீடம்**

உயிர்இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் மரபணுத் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி
பிணி ஆய்வு பிறப்புரிமையியலில் விஞ்ஞான முதுமாணி
பிறப்புரிமை நிதானிப்பில் விஞ்ஞான முதுமாணி
நஞ்சியலில் பட்டப்பின் டிப்புளோமா
சுகாதார அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்புளோமா

**விஞ்ஞான பீடம்**

தத்துவ முதுமாணி / தத்துவக் கலாநிதி
விஞ்ஞான முதுமாணி

- பிரயோக சேதன இரசாயனவியல்
- பகுப்பாய்வு இரசாயனவியல்
- பிரயோக இலத்திரனியல்

- கமத்தொழில் நுண்ணுயிரியல்
- பிரயோகப் புள்ளிவிபரவியல்
- வளிமண்டலப் பௌதீகவியல், இயக்க வளிமண்டலவியல் மற்றும் இயற்கை அனர்த்த தயார்நிலை
- இரசாயனவியல் கல்வி
- சுற்றாடல் விஞ்ஞானம்
- பௌதீகவியல் கல்வி
- தாவரக் கலம் மற்றும் இழைய வளர்ப்பு
- கணிதவியல் கல்வி
- நிதியியல் கணிதம்

## 3.9 நீடிப்புக் கற்கைநெறிகள்

**கலைப்பீடம்**

சுற்றுலாத்துறை, பொருளியல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்புளோமா
நுண்நிதியியலில் டிப்புளோமா
நிர்வாக மற்றும் உயர்தொழில் நோக்கங்களுக்காக உயர் ஆங்கிலத்தில் டிப்புளோமா
ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்புளோமா
ஆங்கில மொழிமூல போதனை ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்புளோமா
e-வணிக ஆங்கிலத்தில் டிப்புளோமா
பத்திரிகை எழுத்தாண்மையில் டிப்புளோமா
தொழில்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ்
சட்டத்துக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ்
இடர் (அனர்த்த) முகாமைத்துவத்தில் சான்றிதழ்
வணிக ஆங்கிலத்தில் சான்றிதழ்
சர்வதேச உறவுகளில் சான்றிதழ் கற்கைநெறி

**பட்டக்கற்கைகள் பீடம்**

சந்தைப்படுத்தலில் நிறைவேற்று டிப்புளோமா
சந்தைப்படுத்தல் m கற்றலில் நிறைவேற்று டிப்புளோமா

**முகாமைத்துவ, நிதிப்பீடம்**

வியாபார நிர்வாகத்தில் நிறைவேற்று டிப்புளோமா

**மருத்துவ பீடம்**

சட்ட மருத்துவம் மற்றும் விஞ்ஞானத்தில் டிப்புளோமா
தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் டிப்புளோமா
இடர் முகாமைத்துவத்தில் டிப்புளோமா (கணனி வழி)
தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் சான்றிதழ் கற்கை நெறி
மனித போசணை மற்றும் உணவுவிதிமுறையில் சான்றிதழ் கற்கை நெறி
உயிர்ப்புள்ளிவிபரவியல் மற்றும் தொற்றுநோயியலில் சான்றிதழ் கற்கைநெறி

## 4. பயிற்சியும் அபிவிருத்தியும்

**கலைப்பீடம்**

ஆசிரியர்கள் மற்றும் கல்விசாராப் பணியாளர் குழு உறுப்பினர்களின் பயிற்சி தொடர்பாக கலைப்பீடம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பல செயலமர்வுகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி அமர்வுகள் போன்றவை நடத்தப்பட்டன.

ஆங்கில மொழிமூல போதனைக்கு மாற்றுவதைக் கருத்தில் கொண்டு கற்கை வழிகாட்டிகளைத் தயாரித்தல், ஆங்கில மொழி கற்பித்தல் சாதனங்களைத் தயார் செய்தல், கல்விசார் எழுத்துத் திறன்களில் ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல், இலக்கிய நயத்தின் ஊடாக மொழி, கல்விசாராப் பணியாளர் குழு உறுப்பினர்களுக்கான வாடிக்கையாளர் கவனிப்பு செயலமர்வுகள், "இலங்கையில் மொழி நடைமுறை: வகைகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கை" பற்றிய ஆய்வரங்கு, பீட ஆராய்ச்சிச் சேவைகள் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில் கலைப்பீடத்தைச் சேர்ந்த முப்பத்திரண்டு (32) ஆசிரியர்கள் பட்டப்பின் கற்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

**கல்விப் பீடம்**

இவ்வாண்டில், ஐந்து (05) தகுதிகாண் நிலை ஆசிரியர்கள் தமது பட்டப்பின் தகைமைகளைப் பெற்றனர். பணியாளர் குழுவைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் தமது பட்டப்பின் கற்கைளில் ஈடுபட்டிருந்தனர். தகுதிகாண் நிலை ஆசிரியர்களில் இருவர் உயர் கல்வி கற்பித்தலில் சான்றிதழ் கற்கைநெறியை மேற்கொண்டிருந்தனர். மீளாய்வாண்டில், ஆங்கில ஆசிரியர்கள் கருத்தரங்குகள் / செயலமர்வுகள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

பீடத்தின் ஆறு (06) கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்கள் தாய்லாந்து Assumption பல்கலைக்கழகத்தில் ஒரு மாத பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர். மற்றுமொரு பணியாளர் குழு உறுப்பினர் உளவியல் மற்றும் உளவளச் சேவையில் புத்துணர்வுக் கற்கைநெறி ஒன்றில் பங்குபற்றினர். தகுதிகாண் நிலை விரிவுரையாளர்களில் ஒருவர் "மொழி கற்பித்தலில் ICTஐ ஒருங்கிணைத்தல்" பற்றிய கற்கை நெறி ஒன்றை மலேசியாவில் மேற்கொண்டார்.

கல்விப்பீடம் கல்வித் தேசிய நிறுவனம் வள ஆளணியினரின் உதவியுடன் பாடவிதான அபிவிருத்தி பற்றிய செயலமர்வொன்றை நடத்தியது. இதில் எல்லா கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

**பட்டப்பின் கற்கைகள் பீடம் (FGS)**

ஆதரவுப் பணியாளர்கள் தமது கடமைகளையும் பணிகளையும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் மேற்கொள்வதற்காக அவர்களுக்கு சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இது ஆங்கிலத் தேர்ச்சி மற்றும் கணனித் திறன்களை மேம்படுத்துவதை உள்ளடக்கியது.

பணியாளர் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் வெளி வள ஆட்களின் உதவியுடன் பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வுகளை FGS ஒழுங்குசெய்தது. பீடத்தின் பணியாளர்கள் எல்லோரும் இந்த மூளைக்கிளறல் அமர்வில் பங்குபற்றினர்.

**சட்ட பீடம்**

தகுதிகாண் நிலை விரிவுரையாளர்களில் மூவர் தமது பட்டப்பின் பட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தனர். பணியாளர் குழு உறுப்பினர்களில் பலர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கருத்தரங்குகள் / செயலமர்வுகள் / மகாநாடுகள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

**முகாமைத்துவ நிதிப்பீடம்**

இவ்வாண்டில் கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்களில் சிலர் தமது பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்தனர். பல உறுப்பினர்கள் கருத்தரங்குகள் / செயலமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றினர். இவ்வாண்டில் கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்களில் பதினொரு (11) பேர் தமது பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்வதற்காக கற்கை விடுமுறையில் இருந்தனர்.

கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளர் குழு உறுப்பினர்கள் ஆகிய இரு சாராரும் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குச் சமுகமளித்தனர்.

**மருத்துவ பீடம்**

சில தகுதிகாண் நிலை ஆசிரியர்கள் தமது பட்டப்பின் பயிற்சியைப் பூர்த்தி செய்தனர். பெரும்பாலும் எல்லா கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெற்ற கருத்தரங்குகள் / மகாநாடுகள் / செயலமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றினர்.

**விஞ்ஞான பீடம்**

பல கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்கள் பல்கலைக் கழகத்தினாலும் விஞ்ஞான மேம்பாட்டுக்கான இலங்கைச் சங்கம், HETC கருத்திட்டம், தேசிய தாவரவியல் தோட்டங்கள், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம், இரசாயனவியல் நிறுவகம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கையில் இரசாயன ஆயுத சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை, FCCIL, இலங்கை ஒலிம்பியாட் போட்டி போன்ற ஏனைய பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களினாலும் நடத்தப்பட்ட தேசிய செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றினர்.

சில தகுதிகாண் நிலை விரிவுரையாளர்கள் தமது பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்கின்ற அதேவேளை, ஒரு விரிவுரையாளர் தனது பட்டப்பின் பட்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டு தனது கடமையை மீண்டும் ஆரம்பித்தார்.

பேராசிரியர் மஹவத்த மற்றும் கலாநிதி கே.டி. பெரேரா ஆகியோர் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட மைக்றோசொப்ற் எக்ஸல் மற்றும் எம்எஸ் எக்சஸ் ஆகிய தீவிர கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தனர்.

**பணியாளர் அபிவிருத்தி நிலையம் (SDC)**

வருடம் முழுவதும் SDC நடத்திய பயிற்சிச் செயற்பாடுகளுக்கு இலங்கையில் உள்ள பெரும்பாலும் எல்லா பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த 581 ஊழியர்கள் சமுகமளித்தனர்.

மாணவர் மைய கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகள், தொழில்வாண்மை அபிவிருத்தி, பல்கலைக் கழக விதிகள், ஒழுங்குவிதிகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக கல்விசார், நிர்வாக, நிதியியல் மற்றும் கல்விசாராப் பணியாளர்களின் தயார்நிலையை மேம்படுத்துதல் ஆகியவை பற்றி SDC கவனம் செலுத்தியது.

தகுதிகாண் நிலை கல்விசார் பணியாளர் குழு உறுப்பினர்கள் பதவியை உறுதிப்படுத்துவதற்கான கட்டாயத் தேவைப்பாடாகிய உயர் கல்வி கற்பித்தலில் சான்றிதழ் கற்கைநெறி மீது SDC கவனம் செலுத்தியது.

பல்வேறு மட்டங்களில் தேர்ச்சியை குறிக்கோளாகக் கொண்ட ஆங்கில தேர்ச்சி கற்கைநெறிகள் மற்றும் அடிப்படைக் கணனி அறிவு முதல் உயர் தரம் வரையிலான கற்கை ஆகியவற்றை SDC நடத்தியது. பணியாளர்களின் மனப்பாங்குத் தோற்றப்பாட்டை விருத்தி செய்வதை நோக்கிய நிகழ்ச்சித்திட்டத்தையும் SDC நடத்தியது. பல்கலைக் கழக சாரதிகளுக்கான திசைமுகப்படுத்தல் மற்றும் வாகனம் செலுத்தும் போது கடைப்பிடிக்கும் நன்னடத்தை பற்றிய விசேட அமர்வொன்று நடத்தப்பட்டது.

## 5. கிடைத்த விருதுகள் பற்றிய விபரங்கள்

### ஜனாதிபதி ஆராய்ச்சி விருதுகள்

2010ஆம் ஆண்டில் நூற்று முப்பத்தாறு (136) கல்விசார், கல்விசார் ஆதரவு மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஜனாதிபதி ஆராய்ச்சி விருதுகளைப் பெற்றனர். சில பெயர்கள் பீட வாரியாக கீழே தரப்படுகின்றன.

### கலைப்பீடம்

பேரா. நிமல் அத்தநாயக்க
பேரா. ரமணி ஜயதிலக
கலா. ரஞ்ஜித் பண்டார

### மருத்துவப் பீடம்

பேரா. ஹர்ஷலால் ஆர். செனவிரத்ன
பேரா. ரிஸ்வி ஷெரி..ப்
பேரா. லலித்தா மெண்டிஸ்
பேரா. எம்.எம். இஸ்மாயில்
பேரா. எரிக் எச். கருணாநாயக்க
பேரா. சுனேத்ரா அத்துகோரள
பேரா. துலித பெர்னாந்து
பேரா. ரொஹான் ஜயசேகர
பேரா. சந்து த சில்வா
பேரா. தீபிகா பர்னாந்து
பேரா. ரோஹினி பர்னாந்துபுள்ளே
பேரா. நதீரா கருணவீர
பேரா. பிரியந்தி குமாரசிங்க
பேரா. லலினி ராஜபக்ஷ
பேரா. கமனி எச். தென்னகோன்
பேரா. சந்திரிகா விஜேரத்ன
பேரா. மனோரி சேனநாயக்க
பேரா. ஜெனிபர் பெரேரா
பேரா. ஹேமமாலி பெரேரா
கலா. ஆரியராணி ஞானதாசன்
கலா. சேனக ராஜபக்ஷ
கலா. இனோகா எம். கொரியா
கலா. ரணில் எஸ். தசநாயக்க
கலா. தமனி த சில்வா
கலா. மஞ்சுளா திசநாயக்கா
கலா. வஜிர திசநாயக்கா
கலா. எஸ்.எச். தொடம்பகல
கலா. எஸ். ஜீவதயாபரன்
கலா. எ சிவசூரியம்
திருமதி. சுமேதா விஜேரத்ன
கலா. சந்தியா விஜேசுந்தர
கலா. சருக்ஷி அரம்பேபொல
கலா. உபுல் செனரத்
கலா. உஷானி ராஜபக்ஷ
கலா. சிசிர பதிரண
கலா. ஷாமினி குணவர்தன
கலா. யமுனா சிரிவர்தன
கலா. சுதர்ஷனி வாசலதந்திரி
கலா. அஞ்சலா த சில்வா

### விஞ்ஞான பீடம்

பேரா. ஷானிக்கா ஹிரிம்புறேகம
பேரா. டபிள்யு.டி. ரத்தினசூரிய
பேரா. எம்.டி.பி. த கொஸ்தா
பேரா. எஸ்.ஏ. தெரணியகல
பேரா. எச்.டி. குணவர்தன
பேரா. திலிப் த சில்வா
பேரா. நலின் த சில்வா
பேரா. தம்மிக திசாநாயக்க
பேரா. ரோஹினி ஹேவமான்ன
பேரா. வை.என்.ஏ. ஜயதுங்க
பேரா. எஸ்.டபிள்யு. கொடகம
பேரா. ரஞ்ஜித் மஹானாம
பேரா. ரவி விஜேசுந்தர

பேரா. ரமணி விஜேசேகர
பேரா. பிரீதி ரந்தெனிய
பேரா. ரோஷினி சூரியாரச்சி
பேரா. உபுல் சொன்னாதர
பேரா. பாளி மஹவத்த
கலா. என்.வி. சந்திரசேகர
திருமதி. தில்ருக்ஷி என் த சில்வா
கலா. ரோஹினி த சில்வா
கலா. மஹேந்திர பெர்னாந்து
கலா. சந்திம கோமஸ்
கலா. நளின் குணசேகர
கலா. ரோமெய்ன் ஜயவர்தன
கலா. இந்திராணி செனவிரத்ன
கலா. தேவக வீரகோன்
கலா. தீப்தி விக்கிரமசிங்க
கலா. எச்.எல். பிரேமரத்ன (UCSC)

## 5.1 பல்கலைக்கழக ஆராய்ச்சி விருதுகள்

**மருத்துவப் பீடம்**

பேரா. நந்ததேவா சமரசேகர (அறுவை சிகிச்சை பேராசிரியர்)

**விஞ்ஞானப் பீடம்**

பேரா. டபிள்யு.டி. ரத்தினசூரிய (சிரேஷ்ட விலங்கியல் பேராசிரியர்)

**NSF ஆராய்ச்சி விருது 2009 (பாராட்டு விருதுகள்)**

பேரா. உபுல் சொன்னாதார (பௌதீகவியல்)

## ஏனைய விருதுகள்

**மருத்துவ பீடம்**

1. பேரா. ஜெனிபர் பெரேரா மற்றும் கலா. பி. கலப்பத்தி ஆகியோர் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மருத்துவக் கல்வி மகாநாட்டில் அதிசிறந்த சுவரொட்டிக்கான முதலாவது பரிசைப் பெற்றனர்.
2. கலா. ஷாலினி சிறிரங்கநாதன், கலா. ஆர். பாலசுப்பிரமணிம் மற்றும் கலா. பீ.வி.எஸ்.எச். பெனரகம ஆகியோர் தாய்வான் தாய்பேயில் நடைபெற்ற சிறுவர் ஆராய்ச்சிக்கான ஆசிய சங்கத்தின் 6ஆவது காங்கிரசில் அதிசிறந்த சுவரொட்டிக்கான பரிசை வென்றனர்.
3. திரு. டபிள்யூ பத்திரண அவர்களாலும் இணை எழுத்தாளர்களான திரு. பி. அபயவர்தன, திரு. எச். காரியவசம், மற்றும் திரு. எப்.டீ. ரத்னசூரிய ஆகியோர்களுக்கு அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட "Transcranial Route of Brain targeted Delivery of Methadone Oil" என்னும் தலைப்பிலான ஆராய்ச்சிப் பத்திரத்துக்காக 2008ஆம் ஆண்டுக்கான பேராசிரியர் எம்.எல். கோரண நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.
4. சந்தமாலி சேனநாயக்க (மருந்தியல்) மாணவிக்கு "இயற்கை ஆக்கக்கூறு பற்பசை" உற்பத்திக்கான ஆக்கவுரிமை அளிக்கப்பட்டது.
5. பல்கலைக் கழக மனநோய் அலகுக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை சுகாதார உன்னத விருது (தங்கம்) வழங்கப்பட்டது.
6. சர்வதேச மகப்பேற்றுப் பெண்நோயியல் குறிப்பேட்டினால் வழங்கப்பட்ட ஜோன் ஜே. சியாறா பரிசுப் பத்திரம் கலாநிதி சி. அரம்பேபொல மற்றும் கலாநிதி டெவிலிகர் ஆகியோரால் வெல்லப்பட்டது.

**பணியாளர் அபிவிருத்தி நிலையம்**

"கல்வி அபிவிருத்திக்கான சர்வதேச ஆய்வரங்கு ஆத்மா" விருது (ICED) பேராசிரியர் எஸ்.யூ.கே. ஏக்கரத்ன அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

**ஸ்ரீ பாளி வளாகம்**

1. கலாநிதி ரியூடர் வீரசிங்க அவர்களுக்கு "Sadesa" பாராட்டு விருது வழங்கப்பட்டது.
2. திரு. ரீ.கே. தொடந்தென்ன சிறந்த முன்னேறிவரும் நடிகருக்கான "சரசவிய" 2010 சினிமா விருதைப் பெற்றார்.
3. இளைஞர் நாடக விழாவில் சிறந்த நாடகப் பிரதிக்கான மூன்றாவது பரிசை திரு. ரி.கே. தொடந்தென்ன வென்றார்.

## 6. சர்வதேச தொடர்புகள்

பல்கலைக் கழகம் சர்வதேச பல்கலைக் கழகங்களுடனும் முகவராண்மைகளுடனும் கூட்டு ஆராய்ச்சி மேம்பாடு, பாடவிதான அபிவிருத்தி, கற்கைச் சுற்றுலாக்கள் மற்றும் பீட உறுப்பினர்களின் பரிமாற்றம், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளின் பரிமாற்றம், ஆராய்ச்சிப் பெறுபேறுகள், வெளியீடுகள் மற்றும் ஏனைய கல்விசார் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றை நோக்கிய பதினான்கு (14) புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டது. பின்வருவோருடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன:

1. ஹிரோஷிமா பல்கலைக் கழகம், ஜப்பான்
2. வக்கோ பல்கலைக் கழகம், ஜப்பான்
3. சர்வதேச பல்கலைக் கழகம், ஜப்பான்
4. ஹெபே பல்கலைக் கழகம், சீனா
5. நியூகாசல் பல்கலைக் கழகம், அவுஸ்திரேலியா
6. கலாசாரத் தொடர்புகளுக்கான இந்தியப் பேரவை
7. கத்மண்டு பல்கலைக் கழகம், நேபாளம்
8. போதோ பல்கலைக் கழகம், நோர்வே
9. லாகூர் பொருளியல் கல்லூரி, பாகிஸ்தான்
10. யஷ்வந்ரவோ சவன் மஹாராஷ்திரா திறந்த பல்கலைக் கழகம், இந்தியா
11. கனக்ரிகட் பல்கலைக் கழகம், ஐ.அ.
12. பிளைமௌத் பல்கலைக் கழகம், ஐ.இ.
13. நன்யங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்
14. எரமஸ் முண்டுஸ் லொட் 2 ஆசியப் பிராந்திய நிகழ்ச்சித்திட்டம், ஐரோப்பிய யூனியன்

கொழும்புப் பல்கலைக் கழகத்துடனான எதிர்கால கூட்டுழைப்பு விடயப்பரப்புகளை ஆராய்வதற்காக சர்வதேச பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பல தூதுக்குழுக்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தன. அந்தத் தூதுக்குழுக்களில் லா றோப் பல்கலைக் கழகம், அவுஸ்திரேலியா, மிசிகான் மாநில பல்கலைக் கழகம், ஐ.அ., பிளைமௌத் பல்கலைக் கழகம், யூ.கே., துர்ஹாம் பல்கலைக் கழகம், யூ.கே., ஜுஸ்டுஸ் லீபிக் பல்கலைக் கழகம், ஜேர்மனி ஆகியவை அடங்கும். கொழும்புப் பல்கலைக் கழகம் சர்வதேச பங்காளர்களுடனும் சந்திப்புகளை மேற்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டது.

### எரமஸ் முன்டுஸ் லொட் 2 ஆசிய பிராந்திய நிகழ்ச்சித்திட்டம்

எரமஸ் முன்டுஸ் 2 ஆசிய பிராந்தியக் கருத்திட்டத்தில் கொழும்புப் பல்கலைக் கழகம் ஒரு பங்காளராகத் தெரிவுசெய்யப்பட்டது. இதற்காக IUUC ஆவணப்படுத்தல்களை வகுத்து அங்குரார்ப்பண மற்றும் தெரிவுக் கூட்டங்களில் பங்குபற்றியது. இந்த முன்னெடுப்பின் விளைவாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு 5 மானியங்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் இரண்டு (2) கொழும்புப் பல்கலைக் கழகப் பணியாளர் அசைவியக்கத்துக்காக; இரண்டு (2) கொழும்புப் பல்கலைக் கழகத்தில் MScஇற்காகப் பதிவு செய்த மாணவர்களுக்காக; மற்றும் ஒன்று (1) PhDஇற்காக ஆகும்.

### அவுஸ்திரேலிய லா றோப் பல்கலைக் கழகத்துடன் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம்

2010ஆம் ஆண்டில், 2011ஆம் ஆண்டுக்காக அவுஸ்திரேலிய லா றோப் பல்கலைக் கழகத்தில் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பத்து மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக IUUC வசதி செய்ததுடன், மாணவர் தெரிவும் மேற்கொள்ளப்பட்டது. பதிலாக, கொழும்புப் பல்கலைக் கழக சட்ட பீடத்தின் கூட்டுழைப்புடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் விரிவுரைகளையும் உள்ளுறைப் பயிற்சியையும் மேற்கொள்வதற்காக LTU மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று IUUCயினால் வகுக்கப்பட்டது.

### ஜுஸ்டுஸ் லீபெக் பல்கலைக் கழகம், ஜீசன்

ஜேர்மனி, ஜீசன் JLUவிலிருந்து மூன்று பட்டதாரி மாணவர்கள் வந்து கொழும்பு பல்கலைக் கழக ஆங்கிலத் துறையில் இணைந்து கற்கைநெறிகளைப் பயில்வதற்கு IUUC வசதியளித்தது. 2010ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் இரண்டு மாணவர்கள் JLUவிலிருந்து திரும்பியதுடன் 2011ஆம் ஆண்டில் JLUவில் கற்கை நெறிகளை மேற்கொள்வதற்காக கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மூன்று (03) மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

### சமகால இந்தியக் கற்கைகளுக்கான நிலையத்தைத் தாபித்தல் (CCIS)

ஆவணப்படுத்தலுக்கு IUUC உதவியதுடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சமகால இந்தியக் கற்கைகளுக்கான நிலையத்தைத் தாபித்தல் தொடர்பான கூட்டங்களிலும் பங்குபற்றியது.

### ICCR வருகைதரும் பேராசிரியர்

ICCRயினதும் கொழும்புப் பல்கலைக் கழகத்தினதும் அனுசரணையில் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தரும் பேராசிரியர்க்காக சமகால இந்தியக் கற்கைகளுக்கான நிலையத்துடன் (ICCR) கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது வருகைதரும் தலைவராக பேராசிரியர் எம்.கே. அகர்வால், 4½ மாதங்களுக்கு பொருளியல் துறையில் இணைந்துகொண்டார்.

**துர்ஹாம் பல்கலைக் கழகக் கருத்திட்டம்**

ஐக்கிய இராச்சிய துர்ஹாம் பல்கலைக் கழக பட்டதாரி மாணவர் குழுக்கள் ஒரு (1) மாதத்துக்கு கொழும்புப் பல்கைலக் கழக விடுதிகளில் தங்கி கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்களுடன் ஆங்கிலத்தில் பங்காளி கலந்துரையாடல்களில் பயிற்சி பெறுவதற்கு கொழும்புப் பல்கலைக் கழகத்தின் நலன்புரிக் கிளையின் கூட்டுழைப்புடன் IUUC வசதியளித்தது.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் ''கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு ஆக்கபூர்வமான முகாமைத்துவத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்'' பற்றிய செயலமர்வும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

**IT மற்றும் ஆங்கில மொழித் திறன்கள்**

உருவாக்கப்பட்ட நிதிகள், IRQUE மற்றும் HEMIS கருத்திட்டங்களிலிருந்து கிடைத்த நிதிகளைப் பயன்படுத்தி மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில் IT வசதிகள் அதிகரிக்கப்பட்டன. எல்லா பீடங்களிலும் கல்விசார் மற்றும் நிர்வாகத் துறைகளிலும் வலையமைப்பு வசதிகள் விரிவாக்கப்பட்டன. மாணவர்களின் மென்திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன், ITயிலும் ஆங்கிலத்திலும் தீவிரக் கற்கை நெறிகள் நடத்தப்பட்டன.

ஆங்கில மொழி மூல போதனைக்கு மாற்றுவதைக் கருத்தில் கொண்டு பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு, குறிப்பாக கலைப்பீடத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேர்ச்சியின் பல்வேறு மட்டங்களில் ஆங்கிலக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு கல்விசார் எழுத்துத் திறன்களில் பயிற்சியளிக்கப்பட்டது.

பட்டதாரி மாணவர்களின் தொழில் மேம்பாட்டுக்காக பேச்சுத் திறன் நிகழ்ச்சித்திட்டங்களும் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட மென்திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன.

கலை, கல்வி மற்றும் முகாமைத்துவமும் நிதியும் பீடங்களையும் ஸ்ரீ பாளி வளாகத்தையும் சேர்ந்த பட்டதாரி மாணவர்கள் தமது பட்டத்தைப் பெறுவதற்காக ஆங்கில மொழித் தேர்ச்சியில் சித்தியடைதல் வேண்டும்.

## 7. மாணவர் நலன்புரி

நிதி உதவிகள்

மாணவர்களுக்கு உதவு தொகைகளாகவும் மஹாபொல புலமைப்பரிசில்களாகவும் நிதி உதவிகள் அளிக்கப்பட்டன. இந்தக் கொடுப்பனவுகள் எல்லா பீடங்களுக்கும் ATM ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

மஹாபொல புலமைப்பரிசில்கள்

**2010ஆம் ஆண்டில் புதிய அனுமதி மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் வழங்கப்பட்ட மாதாந்த மஹாபொல புலமைப்பரிசில்களின் விபரம் (மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு பல்கலைக் கழகப் பங்களிப்பு ரூபா 350/-) பின்வருமாறு:**

**அட்டவணை III-01 : மஹாபொல பெறுநர்கள்**
(மாதம் மற்றும் பீடவாரியாக வகைப்படுத்தப்பட்டது)

| மஹாபொல பெறுநர்களுக்கு பல்கலைக்கழக உதவு தொகையாக (350/-) செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2010 | மாணவர் எண்ணிக்கை | கலை | சட்டம் | முகாமை, நிதி | விஞ்ஞானம் | மருத்துவம் | இயன்மருத்துவம் | மொத்தம் |
| ஜனவரி<br>பெப்ரவரி | 3,742 | 1,010,100.00 | 375,900.00 | 488,600.00 | 336,700.00 | 377,300.00 | 30,800.00 | 2,619,400.00 |
| மார்ச் | 3,446 | 666,050.00 | 189,700.00 | 235,900.00 | 168,000.00 | 187,600.00 | 15,400.00 | 1,462,650.00 |
| ஏப்ரல் | விடுமுறை | | | | | | | |
| மே | 2,686 | 148,050.00 | 308,350.00 | 234,150.00 | 172,550.00 | 191,100.00 | 15,400.00 | 1,062,600.00 |
| ஜுன் | 2,502 | 151,200.00 | 123,200.00 | 237,300.00 | 158,200.00 | 190,400.00 | 15,400.00 | 875,700.00 |
| ஜுலை | 2,318 | 152,250.00 | 124,950.00 | 236,600.00 | 92,050.00 | 190,050.00 | 15,400.00 | 811,300.00 |
| ஆகஸ்ட் | 2,568 | 546,350.00 | 122,850.00 | 232,400.00 | 75,600.00 | 182,350.00 | 9,100.00 | 1,168,650.00 |
| செப்டெம்பர் | 3,925 | 1,437,100.00 | 721,350.00 | 873,950.00 | 782,600.00 | 819,000.00 | 65,800.00 | 4,699,800.00 |
| ஒக்டோபர்<br>நவம்பர் | 3,755 | 884,100.00 | 405,300.00 | 499,800.00 | 390,950.00 | 507,500.00 | 37,100.00 | 2,724,750.00 |
| டிசம்பர் | 3,766 | 430,850.00 | 197,750.00 | 246,050.00 | 172,550.00 | 252,700.00 | 22,750.00 | 1,322,650.00 |
| **முழு மொத்தம்** | **28,708** | 5,426,050.00 | 2,569,350.00 | 3,284,750.00 | 2,349,200.0 | 2,898,000.0 | 227,150.00 | **16,754,500.00** |

ஒரு மாணவர் மாதமொன்றுக்கு சிறப்பு அல்லது சாதாரண நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாக முறையே ரூபா 2,200/- அல்லது ரூபா 2,150/- பெறுகின்றார். இதற்கு மேலதிகமாக, மாணவர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு பல்கலைக் கழகத்தினால் ரூபா 350/- செலுத்தப்படுகின்றது. எனவே ஒரு மாணவர் மாமொன்றுக்கு சிறப்பு அல்லது சாதாரண புலமைப்பரிசிலாக ரூபா 2,550/- அல்லது 2,500/- பெறுகின்றார்.

### கல்வி உதவிக் கொடுப்பனவுகள்

ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு முழு உதவுதொகையாக அல்லது அரை உதவுதொகையாக முறையே ரூபா 2,000/- அல்லது ரூபா 1,900/- செலுத்தப்படுகின்றது. 2010ஆம் ஆண்டில் பின்வரும் பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி உதவிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை III-02: கல்வி உதவிக் கொடுப்பனவுகள்**
(மாதம் மற்றும் பீடவாரியாக வகைப்படுத்தப்பட்டது)

| கல்வி உதவிக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2010 | மாணவர் எண்ணிக்கை | கலை மற்றும் கல்வி | சட்டம் | முகாமை, நிதி | விஞ்ஞானம் | மருத்துவம் மற்றும் இயன்மருத்துவம் | மொத்தம் |
| ஜனவரி | 960 | 640,000.00 | 279,300.00 | 1,570,900.00 | 274,300.00 | 76,300.00 | **2,840,800.00** |
| பெப்ரவரி | 1052 | 640,000.00 | 457,400.00 | 687,100.00 | 785,800.00 | 368,500.00 | **2,938,800.00** |
| மார்ச் | 1488 | 4,852,800.00 | 315,400.00 | 704,800.00 | 382,400.00 | 119,700.00 | **6,375,100.00** |
| ஏப்ரல் | விடுமுறை | | | | | | |
| மே | 1544 | 1,746,900.00 | 638,800.00 | 747,100.00 | 721,100.00 | 217,600.00 | **4,071,500.00** |
| ஜுன் | 1326 | 1,484,000.00 | 602,800.00 | 737,700.00 | 1,135,400.00 | 146,800.00 | **4,106,700.00** |
| ஜுலை | இல்லை | | | | | | |
| ஆகஸ்ட் | 317 | 726,300.00 | - | 758,300.00 | 59,000.00 | 77,800.00 | **1,621,400.00** |
| செப்டம்பர் | 236 | 486,100.00 | - | - | 99,700.00 | 43,000.00 | **628,800.00** |
| ஒக்டோபர் | 87 | 57,500.00 | 9,900.00 | - | 79,700.00 | 23,500.00 | **170,600.00** |
| நவம்பர் | 167 | 57,500.00 | 9,900.00 | 155,800.00 | 79,700.00 | 23,500.00 | **326,400.00** |
| டிசம்பர் | 325 | 391,200.00 | 13,900.00 | 159,600.00 | 85,600.00 | 23,500.00 | **673,800.00** |
| **மொத்தம்** | **7502** | **11,082,300.00** | **2,327,400.00** | **5,521,300.00** | **3,702,700.00** | **1,120,200.00** | **23,753,900.00** |

## பல்கலைக் கழக மாணவர் சங்கம்

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு 2009 ஆகஸ்ட் 6ஆம் திகதி நடைபெற்ற அதன் 785ஆவது கூட்டத்தில் உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களின் (CVCD) வேண்டுகோளைப் பரிசீலித்து கல்வியாண்டின் இறுதியில் மாணவர் பேரவைத் தேர்தல்களை நடத்துவதற்கான CVCDயின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டது. மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில், மருத்துவ, விஞ்ஞான, முகாமைத்துவ, நிதி மற்றும் சட்ட பீடங்கள் 2008/2009ஆம் ஆண்டுக்கான தமது பீட மாணவர் கழக தேர்தல்ளைப் பூர்த்தி செய்தன. கலைப்பீடத்தில் 2008/2009ஆம் கல்வியாண்டுக்காக இடைக்கால மாணவர் குழுவொன்று 2011.01.12ஆம் திகதி தாபிக்கப்பட்டது. *கல்விப் பீடத்தின் பீட மாணவர் கழகத் தேர்தல்கள் இன்னும் நடைபெறவில்லை.*

## மாணவர் கழகங்கள்

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவுகள் 115 மற்றும் 116இன் பிரகாரம், பல்கலைக் கழகத்தில் உள்ள மாணவர் கழகங்களையும் ஏனைய மாணவர் சங்கங்களையும் அங்கீகரித்தல் பேரவையின் ஒருப்பாட்டுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில், அத்தகைய நாற்பத்தைந்து (45) மாணவர் கழகங்களும் சங்கங்களும் பல்கலைக்கழகத்தில் இயங்கின.

## பட்டதாரி மாணவர்களுக்கான விடுதி தங்குமிட வசதிகள்

தற்போது, கொழும்பு பல்கலைக் கழகம் எட்டு (08) நிரந்தர விடுதிகள், இரண்டு (02) தற்காலிக தனியார் வீடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவ்வாண்டில் தங்குமிட வசதிகள் அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணை III-03 மற்றும் III-04இல் தரப்பட்டுள்ளன.

இல. 47, மஹிந்த பிளேஸ், ஹை லெவல் வீதி, கிருளப்பனை; இல.290/2, மஹரகம வீதி, பொரலஸ்கமுவ; ராஜகிரிய வீதி, ராஜகிரிய ஆகிய இடங்களில் உள்ள விடுதிகளாகப் பயன்படும் தனியார் வீடுகள் 2010.08.01ஆம் திகதி வாடகைக்குப் பெறப்பட்டன. தெலவல ஆண்களுக்கான விடுதி புதுப்பிக்கப்படுவதுடன் அந்த விடுதியில் வசித்த மாணவர்கள் இல.47, மஹிந்த பிளேஸ், ஹைலெவல் வீதி, கிருளப்பனையில் 2010.08.01ஆம் திகதி வாடகைக்குப் பெறப்பட்ட விடுதிக்கு மாற்றப்பட்டனர்.

**அட்டவணை III-03: பல்கலைக்கழக விடுதிகளில் மாணவர்களுக்கான வதிவிட வசதிகள்**
(பீடவாரியாகவும் விடுதிவாரியாகவும் வகைப்படுத்தப்பட்டது)

| பீடம் / விடுதி | கலை | சட்டம் | முகாமைத் துவமும் நிதியும் | மருத்துவம் | விஞ்ஞானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| புளொம்பொன்ரீன் ஆண்கள் | 0 | 0 | 0 | 388 | 0 | **388** |
| புல்லர்ஸ் பெண்கள் | 265 | 134 | 44 | 0 | 1 | **444** |
| டி சேரம் பெண்கள் | 0 | 0 | 0 | 249 | 0 | **249** |
| டி சேரம் பெண்கள் (புதிய) | 172 | 50 | 48 | 0 | 46 | **316** |
| ஹவலொக் பெண்கள் | 260 | 64 | 63 | 0 | 91 | **478** |
| கித்தியாகார ஆண்கள் | 172 | 38 | 129 | 0 | 45 | **384** |
| முத்தையா பெண்கள் | 434 | 68 | 52 | 0 | 0 | **554** |
| தெலவல ஆண்கள் | புதுப்பிக்கப்படுகின்றது | | | | | |
| **மொத்தம்** | **1303** | **354** | **336** | **637** | **183** | **2813** |

**அட்டவணை III-04 : குத்தகைக் கட்டடங்களில் மாணவர்களுக்கான வதிவிட வசதிகள்**
(பீடவாரியாகவும் விடுதிவாரியாகவும் வகைப்படுத்தப்பட்டது)

| பீடம் / விடுதி | கலை | சட்டம் | முகாமைத்துவமும் நிதியும் | இயன் மருத்துவம் | விஞ்ஞானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கிறீன் பாத், கொழும்பு 07 (பிக்கு) | 29 | 1 | - | - | - | **30** |
| மகரகம, நாவின்ன (பெண்கள்) | 36 | 54 | - | - | - | **90** |
| கிருளப்பனை விடுதி (ஆண்கள்) | 27 | 1 | 1 | - | - | **29** |
| ராஜகிரிய விடுதி (ஆண்கள்) | - | - | - | 40 | - | **40** |
| பொரலஸ்கமுவ விடுதி (பெண்கள்) | 57 | 2 | 5 | 16 | - | **80** |
| **மொத்தம்** | **149** | **58** | **6** | **56** | **0** | **269** |

பல்கலைக்கழக விடுதிகளில் 2813 பட்ட மாணவர்களுக்கும் வாடகைக்குப் பெறப்பட்ட வீடுகளில் 269 மாணவர்களுக்கும் இடவசதி வழங்கப்பட்டது. அதற்கிணங்க பல்கலைக்கழகம் 3082 மாணவர்களுக்கு இடவசதி வழங்கியுள்ளது.

**அட்டவணை III-05: மாணவர் விடுதிகளில் / வீடுகளில் பயன்பாடுகளின் பாவனை - 2010**

(வதிவிலுள்ள மாணவர் மற்றும் பயன்பாடுகளின் மீதான செலவின்படி வகைப்படுத்தப்பட்டது)

| விடுதி | வதிவிலுள்ள மாணவர்கள் | மின்சாரம் (ரூபா) | நீர் (ரூபா) | தொலைபேசி (ரூபா) |
|---|---|---|---|---|
| புல்லர்ஸ் பெண்கள் | 444 | 1,667,331.00 | 1,420,989.00 | 23,009.44 |
| முத்தையா பெண்கள் | 554 | 1,283,470.20 | 1,328,286.40 | 33,991.79 |
| ஹவலொக் பெண்கள் | 478 | 1,451,668.20 | 1,515,240.60 | 26,983.52 |
| டி சேரம் பெண்கள் | 316 | 1,257,692.73 | 1,017,010.10 | 36,833.27 |
| டி சேரம் பெண்கள் (புதிய) | 249 | 679,462.59 | 798,599.84 | 16,772.77 |
| தெலவல ஆண்கள்[1] | | | | |
| கித்தியாகார ஆண்கள் | - | 714,225.29 | 577,226.20 | 14,323.29 |
| புளொம்பொன்ரீன் ஆண்கள் | 384 | 1,259,109.00 | 1,854,693.92 | 25,782.60 |
| 71/3, கிறீன் பாத் | 388 | 2,154,654.31 | 1,801,901.44 | 22,530.84 |
| 71/4, கிறீன் பாத்[2] | 30 | 178,516.90 | 138,279.93 | 6,151.81 |
| நாவின்ன | 90 | 70,894.52 | 171,760.47 | 24,548.34 |
| கிருளாபண [2] | 29 | 68,865.00 | 104,679.68 | - |
| ராஜகிரிய [3] | 40 | 39,481.26 | 79,775.87 | 1,631.34 |
| பொரலஸ்கமுவ [4] | 80 | 36,953.01 | 50,225.34 | 2,067.35 |

*[1] புதுப்பிக்கப்படுகின்றது*

*[2,3 &4] வீடுகள் 2010.08.01ஆம் திகதி வாடகைக்குப் பெறப்பட்டன.*

**அட்டவணை III-06: மாணவர் மனைகளின் வருடாந்த வாடகை - 2010**

| விடுதி | வருடாந்த வாடகை (ரூபா) |
|---|---|
| 71/3, கிறீன் பாத்<br>71/4, கிறீன் பாத்[4] | 2,130,000.00 |
| நாவின்ன | 1,200,000.00 |
| கிருளப்பனை[2] | 612,450.00 |
| ராஜகிரிய[3] | 350,000.00 |
| பொரலஸ்கமுவ[4] | 725,000.00 |

**மாணவர் நலன்புரி**

மாணவர்களுக்கு கல்வி உதவு தொகைகளாகவும் மஹாபொல புலமைப்பரிசில்களாகவும் நிதி உதவிகள் அளிக்கப்பட்டன. இந்தக் கொடுப்பனவுகள் வலையமைப்பின் ATM ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. 2010/2011ஆம் கல்வியாண்டில் 3002 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்பாடுசெய்யப்பட்டன.

**பணியாளர் நலன்புரி**

**சுகாதாரக் காப்புறுதித் திட்டம்**

2008 மார்ச் 1ஆம் திகதி பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதாரக் காப்புறுதித் திட்டம் 2010 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் OPD சிகிச்சை மற்றும் மூக்குக்கண்ணாடி ஆகியவை ஒவ்வொன்றுக்காகவும் ரூபா. 3,000/- கோர முடியும். எனினும், அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ மனை அனுமதிக்காக அதிகூடியது ரூபா 60,000/= வரையில் கோர முடியும்.

**பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையம்**

பல்கலைக் கழக ஊழியர்களின் 2 ½ - 12 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்காக கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் 2006.05.18ஆம் திகதி ஒரு பகல்நேரப் சிறுவர் பராமரிப்பு நிலையம் தாபிக்கப்பட்டது. இந்த வசதி பொதுமக்களின் பிள்ளைகளுக்காகவும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**உடற்பயிற்சிக் கூடம்**

உடற்பயிற்சிக் கூடத்தில் கரம், சதுரங்கம், பூப்பந்தாட்டம், கராத்தே, மேசைப்பந்து, டென்னிஸ், மல்யுத்தம், பாரம் தூக்குதல் மற்றும் ரீக்வொண்டோ போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன.

**விளையாட்டு மைதானம்**

விளையாட்டு மைதானத்தில் மெய்வல்லுனர் விளையாட்டுகள், கூடைப்பந்து, கிறிக்கெற், எல்லே, உதைப்பந்தாட்டம், ஹொக்கி, வலைப்பந்தாட்டம், றகர், வீதியோட்டம், கரப்பந்து மற்றும் தளக்கட்டுப் பந்தாட்டம் (baseball) ஆகிய விளையாட்டுகளுக்கான வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன.

நீச்சல் விளையாட்டுக்குத் தேவையான வசதிகள் கொழும்பு றோயல் கல்லூரி நீச்சல் தடாகத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டது.

படகு வலித்தலுக்குத் தேவையான வசதிகள் கொழும்பு படகு வலித்தல் கழகத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டது.

## 8. பராமரிப்பு

2010ஆம் ஆண்டில் பராமரிப்புத் திணைக்களம் 45 நிரந்தர பணியாளர்களையும் 06 பயிலுனர்களையும் கொண்டிருந்தது. நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த மின்சார அத்தியட்சகர் பதவிக்கு நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வெற்றிடமாகவுள்ள 2 தச்சர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருத்துவப் பீடத்தில் மீண்டும் தாபிக்கப்பட்ட பராமரிப்பு அலகு அதிகுறைந்த அடிப்படை வசதிகளுடன் பராமரிப்புப் பணியின் கணிசமான பகுதியை மேற்கொண்டது. இந்த அலகு மருத்துவ பீடம், பல்வேறு துறைகள், ‘‘டீ சேரம்’’ மற்றும் ‘‘புளொம்பொன்ரீன்’’ விடுதிகள் மற்றும் பொரளையில் உள்ள இணைந்த சுகாதார விஞ்ஞான - இயன்மருத்துவ அலகு ஆகியவற்றில் நியாயமான அளவு பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளை மேற்கொண்டதுடன் பீடமும் துறைகளும் எவ்வித பிரச்சினைகளும் இன்றி தொழிற்படு மட்டத்தில் செயற்படுவதற்கு பராமரிப்புப் பணியை மேற்கொண்டது. இந்த உப அலகு முழு நேர மேற்பார்வையாளர் ஒருவரின் கீழ் ஒரு மின்னியலாளர் மற்றும் இரண்டு பயிலுனர்கள், குழாய்பொருத்துனர், தச்சர், மேசன் மற்றும் இரண்டு தொழிலாளர்களுடன் தொழிற்படுகின்றது.

இந்தத் துறையின் மனித வள அளவு (மருத்துவ பீடத்தில் உள்ள உப அலகு அடங்கலாக) கீழே தரப்படுகின்றது:

| புதவி | நிரந்தரம் | பயிலுனர் | மொத்தம் |
|---|---|---|---|
| வேலைப் பொறியியலாளர் | 02 | | 02 |
| வேலை அத்தியட்சகர் | 03 | | 03 |
| மின்சார அத்தியட்சகர் | 01 | | 01 |
| சிவில் மேற்பார்வையாளர் | 04 | | 04 |
| சிரேஷ்ட பணியாளர் உதவியாளர் | 01 | | 01 |
| எழுதுநர் | 01 | | 01 |
| படவரைஞர் | 01 | | 01 |
| கணனிப் பிரயோக உதவியாளர் | 01 | 01 | 02 |
| களஞ்சியக் காப்பாளர் | 01 | | 01 |
| திருத்துனர் | 01 | | 01 |
| இருசில்லு உழவு இயந்திர இயக்குனர் | 01 | | 01 |
| மேசன் | 02 | | 02 |
| தச்சர் | 04 | | 04 |
| மின்னியலாளர் | 06 | 03 | 09 |
| குழாய் பொருத்துனர் | 03 | 02 | 05 |
| வர்ணம் பூசுவோர் | 02 | | 02 |
| தொழிலாளர்கள் | 11 | | 11 |
| ***மொத்தம்*** | **45** | **06** | **51** |

இவ்வாண்டில், பராமரிப்புத் திணைக்களம் போதியளவு பராமரிப்பு, திருத்தம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டதுடன், திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள நேரடி ஊழியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கணிசமான அளவு நிதியை சேமிப்பதில் திணைக்களம் வெற்றியீட்டியது. இரண்டு வர்ணம் பூசுவோர் தமக்கு அளிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் பணியை முடிப்பதற்காக கிரமமாக நீண்ட நேரம் பணியில் ஈடுபடவேண்டியிருந்தது.

“கொழும்புப் பல்கலைக் கழக வெசாக் வலயம் 2010’’ வெளிச்ச அலங்காரமும் ஏனைய அலங்கார வேலைகளும் பராமரிப்புத் துறை மேற்கொண்ட மிகவும் வெற்றிகரமாக நிகழ்வாகும். இது குழு வேலைக்கு மிகச்சிறந்த பாரம்பரிய உதாரணமாகும். திட்டத்தின் பிரகாரம் பணிகளை முடிப்பதற்காக அலுவலர்களை உள்ளிட்ட எல்லா ஊழியர்களும் நம்பமுடியாதவாறு தன்னார்வத்துடன் தொடர்ச்சியாக வேலை செய்தனர். பல்கலைக் கழகத்தின் வரலாற்றில் முதன் முறையாக ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, றீட் எவனியூ மற்றும் குமாரதுங்க முனிதாச மாவத்தை அடங்கலாக பல்கலைக் கழக எல்லை வரை மிகக்குறுகிய காலப்பகுதியினுள் வீதியின் இரு மருங்குகளிலும் 2.3 கி.மீ. தூரத்துக்கு அலங்கரித்து ஒளியேற்ற முடியுமாயிற்று.

### பயிற்சியும் அபிவிருத்தியும்

2010ஆம் ஆண்டில் பராமரிப்புத் திணைக்களத்தில் இணைந்துள்ள ஊழியர்களின் திறன்களையும் அறிவையும் மேம்படுத்துவதற்காக முடியுமான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஒரு வேலை அத்தியட்சகரும் ஒரு குழாய் பொருத்துனரும் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தினால் நடத்தப்பட்ட ‘‘பொருத்துதல் மற்றும் நீர் வழங்கல்’’ செயலமர்வில் பங்குபற்றினர். கணனி மற்றும் கணனிப் பிரயோக அறிவை மேம்படுத்துவதற்காக எல்லா சிவில் மேற்பார்வையாளர்களுக்கும் கொழும்புப் பல்கலைக் கழக பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் வழங்கப்பட்டு UCSCயின் கணனி சேவைகள் நிலையத்தினால் நடத்தப்பட்ட ‘‘எம்எஸ் எக்ஸல் மற்றும் எம்எஸ் எக்சஸ்’’ பயிற்சி அளிக்கப்பட்ட அதேவேளை, கொழும்புப் பல்கலைக் கழக பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட ஆங்கிலத் தேர்ச்சிக் கற்கைநெறியை (இடைநிலை)

எழுதுவினைஞர் மேற்கொண்டார். இந்தப் பயிற்சிகளில் இவர்கள் பெற்ற அறிவு அவர்களின் வினைத்திறன் மட்டத்தை மேம்படுத்துவதுடன் அது திணைக்களத்துக்கும் பயன்மிக்கதாக இருக்கும்.

**ஓய்வு பெறல் மற்றும் இடமாற்றங்கள்**

2010ஆம் ஆண்டில் மூன்று ஊழியர்கள் பராமரிப்புத் திணைக்களத்தை விட்டுச் சென்றனர். தச்சராக சேவையாற்றிய **திரு. எம்.டி. ஜயரத்ன** 24 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெற்றார். அவரின் அழகியற் கலை வேலைப்பாடுகளும் ஆக்கபூர்வமான அலங்காரத் திறன்களும் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பல்வேறு வைபவங்களுக்கு அழகு சேர்த்தன என்பது இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டிய ஒரு விடயமாகும். **திரு. பீ.பி.ஜயரத்ன** என்பவரும் திணைக்களத்தில் 27 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றார். மின்னியலாளராகப் பணிபுரிந்த **திரு. பீ.டி.எல். மஹிலால்** எழுதுவினைஞராகப் பதவி உயர்வு பெற்று கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து இலங்கை திறந்த பல்கலைக் கழகத்துக்கு விடுவிக்கப்பட்டார்.

**பயிலுனர்களின் சேவைகள்**

நிரந்தர ஊழியர்கள் தமது சேவைகளை மிகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியாகவும் மேற்கொள்வதற்கு எமது பயிலுனர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர். இது பல்கலைக் கழகத்தினதும் ஏனைய எல்லா துறைகளினதும் சுமுகமாக தொழிற்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தது.

அதேவேளை. 2010ஆம் ஆண்டில், சில திருத்த வேலைகள், மேம்பாடுகள், புனரமைப்புகள், நிர்மாணப்பணிகள் ஆகியவை திணைக்களத்தின் மேற்பார்வை மற்றும் பணிப்பின் கீழ் வெளிவளமிடப்பட்டன. அவை பற்றிய விபரங்கள் (2010 நவம்பர் வரை) கீழே தரப்படுகின்றன:

| கேள்விப்பத்திர இல. | கேள்விப்பத்திரத்தின் பெயர் | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தத்தொகை (வாற் நீங்கலாக) | நிலை |
|---|---|---|---|---|
| MD/DF/B/01/2010 | புளொம்பொன்ரீன் ஆண்கள் விடுதி மேம்பாடு (கட்டம் II) | உதார லங்கா கன்ஸ்ட்றக்ஷன் | 700,482.75 | |
| MD/MR/C/04/2010 | கலைப்பீட சமூகவியல் துறையில் மரத்தினாலான உட்கூரை திருத்தம் மற்றும் சிறிய திருத்தம். | உதார லங்கா கன்ஸ்ட்றக்ஷன் | 639,457.00 | |
| MD/MR/C/05/2010 | வின்சன்ற் சுபசிங்க ஞாபகார்த்த விடுதியில் கூரைக்கு GI தகடு பொருத்துதல். | சியசர கன்ஸ்ட்றக்ஷன் | 7,500.00 | |
| MD/MR/C/07/2010 | வரலாறு மற்றும் சர்வதேச உறவுகள் துறையின் அறை இல.227இன் புதுப்பித்தல். | லீனஸ் எலெக்றிகல்ஸ் | 235,625.00 | |
| MD/MR/B/08/2010 | சமூகவியல் துறையில் புதிய வாயில். | லீனஸ் எலெக்றிகல்ஸ் | 57,850.00 | |
| MD/MR/C/09/2010 | பார்த்திருக்கும் மண்டப புதுப்பித்தல் | | | Not Done |
| MD/MR/B/10/2010 | மருத்துவ பீட உடலமைப்பியல் கட்டிடத்தின் அலுமீனிய பிரிசுவர். | உதயகாந்த அலுமினியம் பெப்ரிகேட்டர்ஸ் | 94,920.00 | |
| MD/MR/C/11/2010 | றீட் எவனியூ மற்றும் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தையில் வீதி நெடுகிலும் வேலி திருத்தம். | சியசர கன்ஸ்ட்றக்ஷன் | 157,250.00 | |
| MD/MR/C/12/2010 | மருத்துவ பீட நோயியல் கட்டடத்தின் மீள் கூரையிடல். | கல்ஹரா பில்டர்ஸ் | 4,016,737.82 | |
| MD/MR/B/13/2010 | இரசாயனவியல் காட் ஆய்வுகூடத்தின் மேசைத்தட்டு செய்தல். | | | |
| MD/MR/C/14/2010 | இரசாயனவியல் கட்டடத்தின் வெளிப்புற வர்ணம் பூசுதல். | லீனஸ் எலெக்றிகல்ஸ் | 1,260,279.50 | |
| MD/MR/B/15/2010 | பீடங்களுக்கு 10 அறிவித்தல் பலகைகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல். | நெவில்லர்ஸ் | 165,200.00 | |
கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) (4), (7) ஆம் உபபிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்பத் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள

கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குப் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமையினால் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது. எனவும் நான் நம்புகிறேன். கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்துணிவு அதிகாரத்தினை வழங்கின்றன.

## 2. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

----------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் கொழும்பு பல்கலைக்கழகம் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் வரைவு நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது புலனாகிய ரூபா 35,865,369 க்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அக் கணக்கீட்டுக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு திருத்தஞ் செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 12 ஆந் திகதியன்று மீண்டும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் 61 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2011 மே 2 ஆந் திகதியன்றே வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் வெளிவாரிக் கற்கை நெறியினது ஒட்டுமொத்த மிகையாகிய ரூபா 366,023,680 ஒதுக்கத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் 19 ஆம் பிரிவுக்கு ஏற்ப அந்த ஒட்டு மொத்த மிகையில் முடிவுற்ற கற்கை நெறிகளுக்குரிய மிகையை வருமான, செலவின கணக்கிற்கு மாற்றஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் 33 ஆம் பிரிவுக்கு ஏற்ப வெளிவாரிக் கற்கை நெறிகளுக்குரிய மொத்த வருமானம் வருமான செலவினக் கணக்கில் காட்டப்படாது வெளிவாரிக் கற்கை நெறியின் வருவாய்ச் செலவினத்திற்குச் சமமான ரூபா 255,065,984 வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 க்கு ஏற்ப 2009 ஜுலை 22 ஆந் திகதியன்று நிர்மாண வேலை முடிவடைந்து ஒப்படைக்கப்பட்ட சேரம் மகளிர் விடுதியினது நிர்மாண வேலைக்கு ஏற்பட்ட ரூபா 133,418,588 ஆன கிரயம் மூலதனமாக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின்போது மேற்படி கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும் தேய்மானத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

## 2.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### (அ) உடன்படிக்கை மீறலுக்காகப் பெற வேண்டிய தொகை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தினது 33 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கைகளை மீறிய 43 பேராசிரியர்களிடமிருந்து ரூபா 46,242,958 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 அன்றும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,382,276 அறவிடப்படுவதற்காக அவர்களுக்கு எதிரான வழக்குத் தொடர்வதற்குரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. 7 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,892,023 தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டிருந்தன.

(iii) இருபத்து நான்கு பேராசிரியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,817,611 அவர்களது சேமலாப மற்றும் பணிக்கொடை நிதியங்களிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம் மீதியில் 15 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,567,605 மீதியை அறவிடுவதற்கு முடிவு செய்து 8 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் போதியளவு தொகை இதுவரை அறவிடப்படாதிருந்தது.

(iv) உடன்படிக்கை மீறலுக்காக ஒரு விரிவுரையாளரிடமிருந்து ரூபா 1,218,641 அறவிடப்படவேண்டியிருந்தது. அதில் ரூபா 1,101,730 மீளாய்வாண்டிற்கு முன்னர் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது எதுவுமே அறவிடப்படவில்லை.

(ஆ) ஆண்டு முடிவில் உள்ள ரூபா 937,347 பெறுமதியான காலங் கடந்த கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான சுழற்சி நடைமுறை எதுவும் இருக்கவில்லை.

2.2.4 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 2003 ஜுலை 18 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தால் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் | கல்விசார் பதவியணியினரது பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடைக் கொடுப்பனவு ஆகியவற்றைக் கணிப்பிடுகையில் கல்விசார் படி கருத்திற்கொள்ளப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் 2005 ஜுலை 1 க்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட கல்விசார் பதவியணியினருக்கு அந்தப் படியும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99(1) ஆம் பிரிவு | உருவாகும் சகல வருமானம், நன்கொடை உள்ளிட்ட சகல நிதியமும் பல்கலைக்கழகங்கள் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், பல்கழைக்கழகமானது 156 பல்வேறு நிதியங்களைப் பேணிவந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்நிதியத்தில் ரூபா 458,065,642 மீதியுமிருந்தது. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/ 2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனிகளது துணைப்பாகங்கள் மென்அணி என்பவற்றிக்கென விசேட நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (ஈ) பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தினது 5.2 ஆம் பந்தி -- - 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய | பேராசிரியர் பதவி அல்லாத பதவிகள் வகிப்போர் 60 வயதின் பின்னர் சேவையில் அமர்த்தப்படலாகாது. எனினும், அவ்வாறான 3 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டு அவ்வுத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டு முடிவுவரை ரூபா 2,848,224 ஊதியமாக |

| | |
|---|---|
| 9/2007 (i) ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கை | வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் இலக்கம் 29/98, 29/98 (i), 07/2007, 07/2007 (i), 02/2009 என்பனவும் 1994 ஜூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அப்பால் 2003 ஜனவரி 1 க்கு முன்னர் பல்கலைக்கழகம் ஆட்சேர்த்த ஊழியர்களுக்கு மொழித் தேர்ச்சிக்கான படி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) நி.பி 371 மற்றும் உப வேந்தரின் பீ/ஏசீ/பீகே/ஏ இலக்கமுடைய 2010 நவம்பர் 12 ஆந் திகதிய கடிதம் என்பன | பல்கலைக்கழகத்தின் சகல சில்லறைக்காசு முற்பணமும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின்போது ரூபா 46,952 மீதி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. |
| (எ) நி.பி 371(2) | பல்கலைக்கழக கட்டிடம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் கூறு, ஸ்ரீபாலி மண்டபம் என்பவற்றிக்கு வழங்கப்பட்ட ரூபா 939,626 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதில் 1 முதல் 20 ஆண்டு காலம் வரையிலான தாமதம் நிலவியது. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மிளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளால் அரசாங்க உதவு தொகையைக் கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ஏற்பட்ட பெறுபேறுகள் ரூபா 1,021,132,199 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 920,323,868 ஆகும். இதற்கமைய மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 100,808,331 அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்கான அரசாங்க மானிய பங்களிப்பு ரூபா 1,078,295,988 காரணமாக ஆண்டின் மிகை ரூபா 57,163,789 ஆகியது. முன்னைய ஆண்டின் அரசாங்க மானிய பங்களிப்பு ரூபா 1,044,350,808 காரணமாக அவ்வாண்டின் மிகை ரூபா 124,026,940 ஆகியது.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 3.2.1 செயற்திறன்

-------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரி விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 2,289 ஆகும். 2009 ஆம் ஆண்டில் இது 2,433 ஆகும். ஒவ்வொரு பீடமும் ஆட்சேர்த்த பட்டப்படிப்பு பாடநெறிக்கான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை கீழே காணப்படுகின்றது.

| பீடம் | ஆண்டு 2010 | ஆண்டு 2009 |
|---|---|---|
| கலை | 665 | 661 |
| சட்டம் | 251 | 250 |
| கல்வி | 104 | 244 |
| முகாமைத்துவமும் நிதியும் | 434 | 416 |
| விஞ்ஞானம் | 455 | 534 |
| மருத்துவம் | 230 | 233 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 150 | 95 |
| | 2,289 | 2,433 |

மேற்படி தகவல்களைப் பகுப்பாய்வு செய்கையில் "கல்விப் பீடத்தின்" ஆட்சேர்ப்பு ஏறக்குறைய 57% பின்னடைவுக்குள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது 2,153 பேர் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றுச் சென்றிருந்தனர். 2009 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 1,838 ஆகும். ஒவ்வொரு பீடத்திலும் பட்டம் பெற்றோரது எண்ணிக்கை கீழே காணப்படுகின்றது.

| பீடம் | ஆண்டு 2010 | ஆண்டு 2009 |
|---|---|---|
| கலை | 795 | 577 |
| சட்டம் | 212 | 196 |
| கல்வி | 112 | 143 |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவமும் நிதியும் | 348 | 348 |
| விஞ்ஞானம் | 394 | 332 |
| மருத்துவம் | 179 | 193 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 113 | 49 |
| மொத்தம் | 2,153 | 1,838 |

(ஆ) 2010 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,359 ஆகும். முன்னைய ஆண்டில் அவ்வெண்ணிக்கை 8,800 ஆகும். இதனுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த எண்ணிக்கை 441 ஆகும். இம்மாணாக்கரது எண்ணிக்கை பீடங்களுக்கிடையே பகிர்வுக்குள்ளான விதம் கீழே காணப்படுகின்றது.

| **பீடம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| கலை | 2,249 | 2,785 |
| சட்டம் | 897 | 872 |
| கல்வி | 283 | 296 |
| முகாமைத்துவமும் நிதியும் | 1,650 | 1,621 |
| விஞ்ஞானம் | 1,721 | 1,674 |
| மருத்துவம் | 1,151 | 1,234 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 408 | 318 |
| மொத்தம் | 8,359 | 8,800 |

**(ஈ) விரிவுரை மணித்தியாலயம்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆரம்ப பட்டதாரிகளுக்கு 2009/2010 ஆம் ஆண்டில் 43,327 மணித்தியாலங்களுக்கு உள்ளக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் விரிவுரை மணித்தியாலங்ள் 35,880 ஆகும். ஆரம்ப பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின்படிப்பு என்பவற்றிற்கான வெளிவாரி விரிவுரை மணித்தியாலயங்கள் 11,418 ஆகும். முன்னைய ஆண்டில் இவ்விரிவுரை மணித்தியால எண்ணிக்கை 15,888 ஆகும்.

### (உ) பரீட்சைகளை நடாத்துதல்

மீளாய்வாண்டின்போது ஆரம்ப பட்டதாரிப் பரீட்சைகள் 159, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பரீட்சைகள் 25 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் 38 பிற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகள் 10 என நடாத்தப்பட்டிருந்தன. இதற்கொப்பாக முன்னைய ஆண்டில் 143 ஆரம்ப பட்டதாரிப் பரீட்சைகளும் 11 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களும், 19 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகளும் 6 பிற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கமைய, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் பட்டப்பின் படிப்பு என்பன முறையே 127%, 100% என அதிகரித்திருந்தன. இவற்றைவிட, பட்டக்கல்விப் பீடத்தில் மீளாய்வாண்டில் 2 நிறைவேற்றுதர டிப்ளோமாக்களும் 11 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களும் 12 பட்டப்பின்படிப்பு பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் அப்பீடம் 16 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள், 7 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் என்பவற்றை நடாத்தியிருந்தன. இதற்கமைய, பட்டப்பின்படிப்பு டிப்ளோமாப் பரீட்சைகள் 31% குறைந்தும் பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் 71% அதிகரித்தும் இருந்தன.

### 3.2.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகளைச் சக்திமிக்கதாக்க மீளாய்வாண்டில் பல்கைலக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் கூறு பெற்ற தொகை ரூபா 361,454,159 ஆகும். ஆண்டின் செலவினம் ரூபா 327,858,544 ஆகும். இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் பல்கலைக்கழக செயல்திட்டத்தின் 2.6.4 ஆம் பந்தியின் பிரகாரம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ கூறில் முன்னுரிமை ஆராய்ச்சித் துறைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அம் முன்னுரிமைத் துறைகளுக்கு நிதியைப் பெறுவதற்குமான திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ii) செயல் திட்டத்தின் 2.6.4 க்கமைய 2009-2013 க்கென ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தைப் பல்கலைக்கழகம் தயாரிக்கவில்லை.

(iii) செயல் திட்டத்தின் 2.6.3.1 க்கமைய ஆராய்ச்சிப் பணிகளைச் சக்திமிக்கதாக்க நிர்வாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கு பதவியணி அபிவிருத்திக் கூறினால் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) தனியார் நிறுவனத்திடமிருந்து பாதுகாப்புச் சேவைகளைப் பெறுதல்**

---

பல்கலைக்கழக பாதுகாப்பு நடவடிக்கைகள் 3 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களால் குறித்த சேவைகள் பெறப்படுவதுடன் அச்சேவைகளது பெறுமதி ரூபா 18,421,185 ஆகவும் இருந்தது. 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய சேவை ஒப்படைப்புக் கடிதம் மற்றும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஒக்டோபர் 01 ஆந் திகதி குறித்த பாதுகாப்புச் சேவை ஒப்பந்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருசார்பினரும் முறையான சேவை உடன்படிக்கையில் ஈடுபடவில்லை.

(இ) இரசாயன உயிர்வாயு மற்றும் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனம் இயங்கியவாறிருக்கும் பல்கலைக்கழகத்திற்குரிய காணி மற்றும் ரூபா 116,864,648 க்கான கட்டிடம் என்பவற்றை அந் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2.3 நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்துதல்

---

பல்கலைக்கழகத்தில் உள்ள 47 நிதியங்களும் மீளாய்வாண்டில் செயற்படாதிருந்தன. அந்நிதியங்களின் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 61,367,495 ஆகும். இந்நிதியங்கள் 1 முதல் 5 ஆண்டுகளாகச் செயற்படாதிருந்தன. மீதிகளிலும் கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டதால் ஒரு நிதியத்தில் ரூபா 48,146 வரவு மீதியும் இருந்தது.

### 3.2.4 நோக்கங்களுக்கு எதிரான கொடுப்பனவுகள்

---

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99(1) பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்குப் புறம்பாகத் தாபிக்கப்பட்ட உபவேந்தர் நிதியம் - 1 க்கு ரூபா 700,000 மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றினது குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) முற்பணத்தைத் தீர்த்துவைத்தல்



ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*A/Y*

09.12.2011

எனது இல. - **UoC/IA/ARNo/**10/2011

தங்கள் இல. - **CE/C/U(C)/10/F/A**

**திரு. எச்.ஏ.எஸ். சமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**
**சுதந்திர சதுக்கம்**
**கொழும்பு 07.**

**1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 108(2) மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 13(7)(அ) ஆகியவற்றின் பிரகாரம் 2010 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக் கழகத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்**

**2:.2 நிதிக்கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்**

| **2:2:1 நிதிக்கூற்றுகளின் சமர்ப்பிப்பு** | |
|---|---|
| மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வரைவு நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனைச் சரிபார்த்தல்களின்போது கூறப்பட்டுள்ள ரூபா. 35,865,369 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக் கழக உபவேந்தரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அந்தக் கணக்கீட்டுக் | ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் தாமதத்துக்கான பிரதான காரணம் ஆண்டறிக்கையின் அமைப்பை மாற்றுமாறு உயர் கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலாகும். ஆதலால், கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள காலம் புதிய அமைப்பின் பிரகாரம் ஆண்டறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதில் செலவிடப்பட்டது. 2011ஆம் ஆண்டுக்கான நகல் |

| | |
|---|---|
| குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுகள் 2011 ஜுலை 12ஆம் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நகல் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் சமர்ப்பிக்கப்படவேண்டுமாயினும், நகல் ஆண்டறிக்கை 61 நாட்கள் தாமதித்து 2011 மே 02ஆம் திகதி கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டறிக்கையை ஆண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **2:2:2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்** | |
| (அ) மீளாய்வாண்டின் நீடிப்புக் கற்கை நெறிகளின் ஒட்டுமொத்த மிகை ரூபா 366,023,680 ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. இலங்கைக் கணக்கீட்டு நியம இல.29இன் பிரிவு 19இன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட கற்கைநெறிகளின் மிகையை ஒட்டுமொத்த மிகையிலிருந்து வருமானச் செலவுக் கணக்குக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடற்ற கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் வருமானம் மற்றும் செலவினத்தை அம்மதிப்பீடுகளை 2011ஆம் ஆண்டில் ஒப்பிட்டதன் பின்னர் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 29இன் பிரிவு 33இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு வெளிவாரிக் கற்கை நெறிகள் தொடர்பான மொத்த வருமானம் வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. பதிலாக, வெளிவாரி கற்கை நெறிக்கான வருமானச் செலவினத்துக்குச் சமனான தொகையாகிய ரூபா 255,065,984 வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. | மேலே பந்தி (அ)வில் கூறப்பட்டவாறு இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 29இன் பிரிவு 19இற்கு இணங்கி ஒழுகியுள்ளதால், கணக்கீட்டு நியமங்களின் பந்தி 33இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். |
| (இ) டி சாரம் பெண்கள் விடுதியின் நிர்மாணத்துக்காக ஏற்பட்ட செலவு ரூபா 133,418,588 நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் 2009 ஜுலை 22ஆம் திகதி கையளிக்கப்பட்டது. அது இலங்கைக் கணக்கீட்டு நியம இல.18இனால் தேவைப்படுத்தப்படுகின்றவாறு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்பட்ட இந்தக் கட்டிடத்துக்கு தேய்வுப் பெறுமானம் எதுவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கவில்லை. | டி சாரம் விடுதியின் நிர்மாணத்துக்கான கடைசித் தவணைக் கொடுப்பனவு 2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதால், அது சொத்து மூலதனமாக்கப்படவில்லை. அத்துடன் அதனை மூலதனமாக்கி தேய்வுக்கான அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், தேய்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை அவ்வாண்டில் செலவினத்தை விட மிகையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த விடுதி 215 மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டபோதிலும், தற்போது அதனை 320 மாணவிகள் பயன்படுத்துகின்றார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து இந்தப் பல்கலைக் கழகத்துக்குத் |

| | |
|---|---|
| | தெரிவுசெய்யப்பட்ட முதலாம் வருட மாணவர்கள் இந்த விடுதியைப் பயன்படுத்துவதுடன் தமது கற்கைகளை சிறப்பாக மேற்கொள்கின்றார்கள் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். |
| **2:2:3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்** | |
| (அ) ஒப்பந்தங்களை மீறியதனால் பெறவேண்டிய தொகை: | |
| பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன: | |
| (i) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் அத்தியாயம் 10இன் பிரிவு 33இன் பிரகாரம், ஒப்பந்தங்களை மீறியமைக்காக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறாக 43 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 46,242,958 அறவிடவேண்டி இருந்தது. | 2010.12.31இல் உள்ளவாறாக ஒப்பந்தங்களை மீறியமைக்காக 43 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 46,242,958.00 ஆகும். அவர்களில் 6 விரிவுரையாளர்கள் 2011.11.30ஆம் திகதியளவில் தமது முறி உடன்படிக்கைத் தொகையாகிய ரூபா 5,361,905.00ஐ முழுமையாகச் செலுத்தியுள்ளனர். அவ்வாறே ஏனைய விரிவுரையாளர்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ii) நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 9,382,276ஐ சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் அறவிடுதல் தொடர்பான ஆவணங்கள் சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஏழு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,892,023 தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. | நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 9,382,276ஐ சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் அறவிடுதல் தொடர்பான ஆவணங்கள் சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஏழு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,892,023 தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்களுள் ஒருவரான திரு. ஏ.வி. குரே ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 3,297,353.00இல் ரூபா 1,500,000.00ஐ 24 தவணைகளில் செலுத்துவதற்கு ஏற்றுக்கொண்டுள்ளார். |
| (iii) இருபத்து நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 7,817,611ஐ அவர்களின் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைகளில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில், 15 விரிவுரையாளர்களிடம் நிலுவையாக உள்ள உத்தேச அறவீட்டு மீதிகள் மொத்தம் ரூபா 1,567,605 எட்டு வருடங்களைக் கடந்துவிட்டது. ஆனால், போதிய தொகை இற்றைவரையில் | 2010.12.31இல் உள்ளவாறாக 24 விரிவுரையாளர்களின் முறிக் கடப்பாட்டின் ஒரு பகுதியாக அவர்களின் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைகளிலிருந்து அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொகை ரூபா 7,817,611.00 ஆகும். 2011.12.31இற்குப் பின்னர் 10 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகை ரூபா 4,130,069.79 ஆகும். ஆதலால், 14 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 3,687,542.15 அறவிடவேண்டியுள்ளது. அதன் பிரகாரம், அந்த முறி ஒப்பந்த மீறல்கள் எல்லாவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

<table>
<tr><td colspan="2">அறவிடப்படவில்லை.</td><td></td></tr>
<tr><td colspan="2">(iv) ஒப்பந்தத்தை மீறியமைக்காக ஒரு விரிவுரையாளரிடமிருந்து அறவிடவேண்டிய முழுத்தொகை ரூபா 1,218,641 ஆகும். இதில், ரூபா 1,101,730 மீளாய்வாண்டிற்கு முன்னரே அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.</td><td>விரிவுரையாளர்களிடமிருந்து பின்வரும் விதத்தில் தொகைகள்<table>
<tr><td>2010.12.31 வரை அறவிட்ட தொகை</td><td>1,101,730.00</td></tr>
<tr><td>2011.08.18ஆம் திகதி கிடைத்தது</td><td>50,000.00</td></tr>
<tr><td>2011.09.07ஆம் திகதி கிடைத்தது</td><td>50,000.00</td></tr>
<tr><td>அறவிடப்பட்ட மொத்தத் தொகை</td><td>1,218,641.00</td></tr>
<tr><td>அறவிட வேண்டிய மொத்தத் தொகை</td><td>16,911.00</td></tr>
</table>அறவிடப்பட்டன:</td></tr>
<tr><td colspan="2">(ஆ) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் அறவிடப்படாதுள்ள கடன் மீதி மொத்தம் ரூபா 937,347ஐ அறவிடுவதற்கு அவசியமான சுழற்சி நடவடிக்கை முறை ஒன்று இருக்கவில்லை.</td><td>ரூபா 957,347.00இல் விடுபட்ட கடன் மீதி ரூபா 64,129.00, 2011ஆம் ஆண்டிலிருந்து சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றது. மேலும், 2011ஆம் ஆண்டில் ரூபா 298,475.00 செலுத்தப்பட்டது. பாராளுமன்ற உபகுழு இல.13இன் விதப்புரையின் பிரகாரம், 2011ஆம் ஆண்டில் ரூபா 49,246.00 பதிவழிக்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">2:2:4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை</td><td></td></tr>
<tr><td colspan="2">சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை பின்வருமாறு:</td><td></td></tr>
<tr><td>சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் போன்றவை.</td><td>இணங்கி ஒழுகாமை</td><td></td></tr>
<tr><td>(அ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) மற்றும் 2003 ஜுலை 18ஆம் திகதிய பல்கலைக் கழக</td><td>கல்விசார் பணியாளர்களின் பல்கலைக் கழக சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும்</td><td>இந்தக் கொடுப்பனவுகள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிட்டு தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரினால் அனுப்பப்பட்ட கடிதம். | பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கணிக்கும்போது கல்விசார் படிகள் கவனத்தில் கொள்ளப்படக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அந்தப் படிகள் 2005 ஜுலை 1ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தன. | |
| (ஆ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99 (1). | ஈட்டிய எல்லா வருமானங்களும் நன்கொடைகளை உள்ளிட்ட எல்லா நிதிகளும் பல்கலைக் கழக நிதியத்தில் வரவில் இடப்படுதல் வேண்டும். எனினும், பல்கலைக் கழகம் 156 நிதியங்களைப் பேணியது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் உள்ளவாறாக அந்நிதியங்களின் மீதி ரூபா 458,065,642 ஆகும். | பல்கலைக் கழகத்தினால் பெறப்பட்ட பணம் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99 (1)இன் பிரகாரம் பல்கலைக் கழக நிதியத்தில் வரவில் இடப்பட்டுள்ளன. இந்த நிதியங்கள் பேரேட்டுக் கணக்குகளாகக் கருதப்படுவதால், பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு (99) (1) மீறப்படவில்லை என நான் தெரிவிக்க விரும்புகின்றேன். |
| (இ) 2002 நவம்பர் 28ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இல. IAI/2002/2 | கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான விசேட சொத்துகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், குறிப்பாக கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள்களுக்காக நிலையான சொத்துகள் பதிவேடு ஒன்றைப் பேணுதல் பல்வேறு காரணங்களால் சாத்தியமாகவில்லை. மூலதனச் சொத்துகளுக்கான நிலையான சொத்துகள் பதிவேடு ஒன்று முடியுமானவரை சுற்றறிக்கையின் பிரகாரம் தாயரிக்கப்படுகின்றது. |
| (ஈ) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் அத்தியாயம் V இன் பிரிவு 5:2 மற்றும் 2007 ஆகஸ்ட் 24ஆம் திகதிய பொது | பேராசிரியர் பதவியை வகிக்கின்ற ஆள் தவிர்ந்த ஓர் ஆள், 60 வருடங்களைப் பூர்த்தி செய்த பின்னர் சேவையில் அமர்த்தப்படலாகாது. ஆயினும், 3 அலுவலர்கள் ஒப்பந்த | பல்கலைக் கழக தேவைப்பாடுகளின் பிரகாரம் தொழில் வழங்கப்பட்ட இரண்டு அலுவலர்கள் உள்ளனர். |

| | | |
|---|---|---|
| நிர்வாகச் சுற்றறிக்கை இல. 09/2007 (i) | அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதி வரை அந்த அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த ஊதியம் ரூபா 2,848,224 ஆகும். | |
| (உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் இல. 29/98, 29/98(i), 07/2007, 7/2007(i), 02/2009 மற்றும் 1994 ஜூன் 14ஆம் திகதிய அரசாங்கத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 95. | 2003 ஜனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக பல்கலைக் கழகத்தினால் மொழித் தேர்ச்சிப் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஊ) நிதியியல் ஒழுங்குவிதி (F.R.) 371 மற்றும் 2010 நவம்பர் 12ஆம் திகதிய, B/AC/BK/Aஆம் இலக்க உப வேந்தரின் சுற்றறிக்கை. | பல்கலைக் கழகத்தின் எல்லா சில்லறைச் செலவு முற்பணங்களும் 2010 டிசம்பர் 31இல் உள்ளவாறாகத் தீர்க்கப்படுதல் வேண்டும். எனினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மீதி ரூபா 46,952 தீர்க்கப்படாதிருந்தது. | இந்தக் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (எ) F.R. 371 (2) | பல்கலைக் கழகக் கட்டடம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ அலகுகள் மற்றும் ஸ்ரீ பாளி வளாகம் ஆகியவை பல்வேறு நோக்கங்களுக்காக மொத்தமாக ரூபா 939,626 முற்பணங்களைப் பெற்றிருந்தன. இந்த | இந்தத் தொகையில் ரூபா 685,489 முற்பணங்கள் 2011.11.30ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்தன. மீதியாக உள்ள முற்பணங்களின் மீதியையும் 2011.12.31ஆம் திகதிக்கு முன் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | முற்பணங்களைச் மீளச் செலுத்துதல் 1 தொடக்கம் 20 வருடங்கள் வரையில் தாமதப்படுத்தப்பட்டிருந்தன. | |

## 3. நிதியியல் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3:1 நிதியியல் மீளாய்வு

| | |
|---|---|
| **3:1:1 நிதியியல் பெறுபேறுகள்** | |
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீண்டுவரும் செலவினத்துக்கான அரசாங்கப் பங்களிப்புகளைக் கவனத்தில்கொள்வதற்கு முன்னர் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 920,323,868 உடன் ஒப்பிடும் போது, 2010 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட பற்றாக்குறை ரூபா 1,021,132,199 ஆகும். அதன் பிரகாரம், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் பற்றாக்குறை ரூபா 100,898,331இனால் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டுக்கான அரசாங்கப் பங்களிப்பு ரூபா 1,078,295,988இன் விளைவாக அவ்வாண்டின் மிகை ரூபா 57,163,789 ஆகியிருந்தது. முன்னைய ஆண்டுக்கான அரசாங்கப் பங்களிப்பு ரூபா 1,044,350,808இன் விளைவாக, அவ்வாண்டுக்கான மிகை ரூபா 124,026,940 ஆகியிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். |
| **3:2 செயற்பாட்டு மீளாய்வு** | |
| **3:2:1 செயலாற்றம்** | |
| பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (அ) பட்டக் கற்கைநெறிகளுக்காக 2010ஆம் ஆண்டில் 2,289 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2009ஆம் ஆண்டில் இந்தத் தொகை 2,433ஆகக் காணப்பட்டது. ஒவ்வொரு பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கும் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது: | கல்விப்பீடத்தில் மாணவர் அனுமதி நேரடியாக மேற்கொள்ளப்படுவதில்லை. கலைப்பீடத்தில் இரண்டாம் வருடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் மட்டுமே கல்விப்பீடத்தில் பதிவுசெய்யப்படுகின்றனர். அவ்வாறாக, 2009ஆம் ஆண்டில் 100 மாணவர்களும் 2010ஆம் ஆண்டில் 108 மாணவர்களும் கல்வி இளமாணிப்பட்டக் கற்கைநெறிக்கு ஆட்சேர்க்கப்பட்டனர். |

<table>
<tr>
<td>
<table>
<tr><th>பீடம்</th><th colspan="2">ஆண்டு</th></tr>
<tr><th></th><th>2010</th><th>2009</th></tr>
<tr><td>கலை</td><td>665</td><td>661</td></tr>
<tr><td>சட்டம்</td><td>251</td><td>250</td></tr>
<tr><td>கல்வி</td><td>104</td><td>244</td></tr>
<tr><td>முகாமைத்துவமும் நிதியும்</td><td>434</td><td>416</td></tr>
<tr><td>விஞ்ஞானம்</td><td>455</td><td>534</td></tr>
<tr><td>மருத்துவம்</td><td>230</td><td>233</td></tr>
<tr><td>ஸ்ரீ பாளி மண்டபம்</td><td>150</td><td>95</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>2,289</td><td>2,433</td></tr>
</table>
மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும் போது “கல்விப் பீடத்தில்” 57% பின்னடைவு அவதானிக்கப்பட்டது.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>
(ஆ) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், 2,153 பேர் தமது பட்டங்களைப் பெற்று பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறியிருந்தனர். இந்த எண்ணிக்கை 2009ஆம் ஆண்டு 1,839 ஆகக் காணப்பட்டது. ஒவ்வொரு பீடத்திலும் வழங்கப்பட்ட பட்டங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது:
<table>
<tr><th>பீடம்</th><th colspan="2">ஆண்டு</th></tr>
<tr><th></th><th>2010</th><th>2009</th></tr>
<tr><td>கலை</td><td>795</td><td>577</td></tr>
<tr><td>சட்டம்</td><td>212</td><td>196</td></tr>
<tr><td>கல்வி</td><td>112</td><td>143</td></tr>
<tr><td>முகாமைத்துவமும் நிதியும்</td><td>348</td><td>348</td></tr>
</table>
</td>
<td>ஏற்றுக்கொள்கின்றோம்</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>
<table>
<tr><td>விஞ்ஞானம்</td><td>394</td><td>332</td></tr>
<tr><td>மருத்துவம்</td><td>179</td><td>193</td></tr>
<tr><td>ஸ்ரீ பாளி மண்டபம்</td><td>113</td><td>49</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>2,153</td><td>1,838</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>
(இ) 2010ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 8,359 ஆகும். இது முன்னைய ஆண்டின் 8,800ஐ விட 441 குறைவானதாகும். பீடங்களிடையை மாணவர் எண்ணிக்கையின் பகிர்வு பின்வருமாறு:
<table>
<tr><th>பீடம்</th><th colspan="2">ஆண்டு</th></tr>
<tr><th></th><th>2010</th><th>2009</th></tr>
<tr><td>கலை</td><td>2,249</td><td>2,785</td></tr>
<tr><td>சட்டம்</td><td>897</td><td>872</td></tr>
<tr><td>கல்வி</td><td>283</td><td>296</td></tr>
<tr><td>முகாமைத்துவமும் நிதியும்</td><td>1,650</td><td>1,621</td></tr>
<tr><td>விஞ்ஞானம்</td><td>1,721</td><td>1,674</td></tr>
<tr><td>மருத்துவம்</td><td>1,151</td><td>1,234</td></tr>
<tr><td>ஸ்ரீ பாளி மண்டபம்</td><td>408</td><td>318</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>8,359</td><td>8,800</td></tr>
</table>
</td>
<td>ஏற்றுக்கொள்கின்றோம்</td>
</tr>
<tr>
<td>
(ஈ) விரிவுரை நேரம்<br>
கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2009 / 2010 கல்வியாண்டுக்கான பட்டதாரி மாணவர்களுக்கு 43,327 மணித்தியாலங்கள் உள்வாரி விரிவுரைகள் நடத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 35,880 ஆகும். பட்டதாரி மற்றும் பட்டப்பின் கற்கை நெறிகளைச் சேர்ந்தவர்களுக்கு வெளிவாரி விரிவுகைள் 11,418 மணித்தியாலங்கள்
</td>
<td>ஏற்றுக்கொள்கின்றோம்</td>
</tr>
</table>

| | |
|---|---|
| நடத்தப்பட்டிருந்தன. அது முன்னைய ஆண்டில் 15,888 மணித்தியாலங்களாகும். | |
| (உ)நடத்தப்பட்ட பரீட்சைகள்<br>மீளாய்வுக்குட்பட்ட இவ்வாண்டில் பட்டக் கற்கைநெறிகள், பட்டப்பின் டிப்புளோமாக்கள், பட்டப்பின் பட்டங்கள், ஏனைய டிப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளுக்கு நடத்தப்பட்ட பரீட்சைகள் முறையே 159, 25, 38 மற்றும் 10 ஆகும். ஆனால் முன்னைய ஆண்டில் பட்டக் கற்கைநெறிகள், பட்டப்பின் டிப்புளோமாக்கள், பட்டப்பின் பட்டங்கள், ஏனைய டிப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளுக்கு அவை முறையே 143, 11, 19, மற்றும் 6 ஆகும். அதன் பிரகாரம், நடத்தப்பட்ட பட்டப்பின் டிப்புளோமாக்கள் மற்றும் பட்டப்பின் கற்கைநெறிகள் 127% மற்றும் 100% மேம்பாட்டைக் காட்டின. இவற்றுக்குப் புறம்பாக, மீளாய்வு ஆண்டில் பட்டக் கற்கைப் பீடத்தில் நிறைவேற்று டிப்புளோமா கற்கைநெறிகளுக்காக 02 பரீட்சைகள் நடத்தப்பட்ட அதேவேளை, பட்டப்பின் கற்கைநெறிகளுக்காக முறையே 11 பரீட்சைகளும் 12 பரீட்சைகளும் நடத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில், இந்தப் பீடம் 16 பட்டப்பின் டிப்புளோமா பரீட்சைகளையும் 7 பட்டப்பின் பரீட்சைகளையும் நடத்தியிருந்தது. அதன் பிரகாரம், பட்டப்பின் டிப்புளோமாக்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சைகள் 31% வீழ்ச்சியடைந்ததுடன் பட்டப்பின் பட்டங்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சைகள் 71%இனால் மேம்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றோம் |
| **3:2:2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்** | |
| பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (அ) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு முழுவதிலும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டுவதற்காக பெறப்பட்ட தொகை ரூபா 361,454,159ஆகக் காணப்பட்டதுடன் அவ்வாண்டின் செலவினம் ரூபா 327,858,544 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன: | |

| | |
|---|---|
| (i) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான செயற்திட்டத்தின் பந்தி 2:6:4இன் பிரகாரம், முன்னுரிமை ஆராய்ச்சி விடயப்பரப்புகளை இனம்காணுதல் மற்றும் அத்தகைய முன்னுரிமை விடயப்பரப்புகளுக்கான நிதிகளைப் பெறுதல் தொடர்பாக ஆராய்ச்சி, முகாமைத்துவ அலகு ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. | குறித்த ஆராய்ச்சி விடயப்பரப்புகளுடன் தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சி மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக்காக அங்கீகாரத்தைப் பெறுதல் பற்றி நன்கொடை முகவர்களுக்கு எழுதுவதன் மூலம் சம்பந்தப்பட்ட தமது ஆராய்ச்சி விடயப்பரப்புகளுக்கு ஏற்புடைய ஆராய்ச்சி நிதிகளைப் பெற்றுள்ளனர். அத்துடன், கற்கையின் ஒவ்வொரு துறை தொடர்பான ஆராய்ச்சியும் ஏற்புடைய பீடத்தினால் சம்பந்தப்பட்ட விரிவுரையாளரின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. மானியங்களை விடுவித்தல் பல்வேறு கட்டங்களில் அதன் முன்னேற்றத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, இவற்றின் கணக்கீட்டு அம்சங்களைப் பார்த்துக்கொள்ளுதல் ஆராய்ச்சி முகாமைத்துவ அலகின் பிரதான செயற்பாடாகின்றது. |
| (ii) செயற்திட்டத்தின் பந்தி 2:6:4இன் பிரகாரம், பல்கலைக் கழகம் 2009 – 2013 வரையான ஆண்டுகளுக்காக திரட்டு ஆராய்ச்சித் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. | ஆராய்ச்சி மானியங்களுக்கான செயற்திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. செயற்திட்டத்தில் ஆராய்ச்சி விபரமாகப் பகுப்பாய்வு செய்யப்படும். பல்கலைக் கழகங்களின் திரட்டிய ஆராய்ச்சித் திட்டங்கள் கல்விசார் பணியாளர்களின் குறித்த ஆராய்ச்சித் தலைப்புகளைப் பொறுத்துள்ளது. எனவே, குறித்த ஆண்டுக்காலத்தில் திரட்டிய ஆராயச்சித் திட்டம் வேறுபடலாம். |
| (iii) பணியாளர் அபிவிருத்தி நிலையம் செயற்திட்டம் 2:6:3:1இன் பிரகாரம் ஆராய்ச்சித் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக நிர்வாக அலுவலர்களைக்குப் பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | காட்டப்பட்டுள்ளவாறு 2011ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட பயிற்சிச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், ஆராய்ச்சி விடயப்பரப்புகளை இனம்காண்பதற்கும் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும் தகுந்த உபாயத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பாதுகாப்புச் சேவைகள்:<br>பல்கலைக் கழகம் மூன்று பாதுகாப்பு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து பாதுகாப்புச் சேவைகள் பெறப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் சேவைகளின் பெறுமதி ரூபா 18,421,185 ஆகும். 2010 செப்டம்பர் 20ஆம் திகதிய கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் சேவை ஒப்படைப்புக் கடிதத்தின் பிரகாரம், சம்பந்தப்பட்ட பாதுகாப்பு சேவைகள் 2010 ஒக்டோபர் 1ஆம் | தற்போது, ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் கைச்சாத்திடப்படும் சம்பந்தப்பட்ட சேவை உடன்படிக்கைகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட வழிகாட்டல்கள் விடுவிக்கப்பட்ட நேரத்தில் பாதுகாப்புச் சேவைகளைப் பெறுதல் தொடர்பான செயற்பாடுகள் முடிவடைந்திருந்த காரணத்தினால் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளதை தயவு செய்து கவனிக்கவும். |

| | |
|---|---|
| திகதி ஆரம்பிப்பதற்கு முன்னர் இரண்டு தரப்புகளும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | |
| (இ) ரூபா 116,864,648 பெறுமதியான கட்டடத்தை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த்தொழில்நுட்ப நிறுவகம் அமைந்துள்ள வளவு பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமானதாகும். | கொழும்புப் பல்கலைக் கழகத்தில் ரூபா 116,864,648 பெறுமதியான உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த்தொழில்நுட்ப நிறுவகம் அமைந்துள்ள வளவு கொழும்புப் பல்கலைக் கழகத்துக்குச் சொந்தமானதாக உள்ளதால், சொல்லப்பட்ட நிறுவகத்துக்கு அந்தக் கட்டிடத்தை மட்டும் உரித்தாக்குதல் சாத்தியமற்ற ஒன்றாகும். அதற்குப் புறம்பாக, பல்கலைக் கழகத்துக்குச் சொந்தமான மற்றுமொரு கட்டடம் அதே வளவில் அமைந்துள்ளது. |
| **3:2:3 நிதிகளின் குறைவான பயன்பாடு** | |
| பல்கலைக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட நாற்பத்தேழு நிதியங்கள் மீளாய்வாண்டில் செயற்பாட்டில் இருக்கவில்லை. அந்த நிதியங்களில் உள்ள மீதிகள் ரூபா 61,367,495 ஆகும். இந்த நிதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரை செயலற்றிருந்தன. கிடைக்கக்கூடியதாக இருந்த மீதிக்கு மிகையாக செலவழித்த காரணத்தினால் ஒரு நிதியத்தில் பற்று மீதி ரூபா 48,146 காணப்பட்டது. | இந்த 47 நிதியங்களும் குறித்த சில குறிக்கோள்களுக்காக உருவாக்கப்பட்டன. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிதியங்களை உச்சப் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **3:2:4 குறிக்கோள்களுக்கு முரணான கொடுப்பனவுகள்** | |
| 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99(1)இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக அபிவிருத்திய நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டிராத உபவேந்தரின் நிதியம் - 1இற்கு ரூபா 700,000 மீளாய்வாண்டில் மாற்றப்பட்டிருந்தது. | உபவேந்தரின் நிதியம் ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்புரி நோக்கத்துக்காக தாபிக்கப்பட்ட ஒரு நிதியமாகும். பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் இடைநேர்விளைவான நலன்புரித் தேவைகளுக்கு பங்களிப்புச் செய்வதற்காக இந்த வகையான நிதியம் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் செயற்பாட்டில் உள்ளது. பல்கலைக் கழக அபிவிருத்தி நிதியத்திலிருந்து ஈட்டிய வட்டி ரூபா 700,000.00 இந்த நிதியத்துக்கு மாற்றப்பட்டது. எனினும், தற்கால தேவைகளின் பிரகாரம் கொழும்புப் பல்கலைக் கழக அபிவிருத்தி நிதியத்தின் குறிக்கோள்களையும் செயற்பாடுகளையும் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | |
|---|---|
| கணக்காய்வின் பேது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் காலத்துக்குக் காலம் பல்கலைக் கழக உபவேந்தரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயப்பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் தேவை:<br><br>(அ) ஒப்பந்த நிர்வாகம்<br>(ஆ) கணக்கீடு<br>(இ) முற்பணங்களைத் தீர்த்தல் | எதிர்காலத்தில் இவ்விடயத்தில் மேலும் கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. |

**பேராசிரியர் கிஷாணிக்கா ஹிரிம்புரேகம**
**உபவேந்தர்**

பிரதிகள் : செயலாளர் / உயர் கல்வி அமைச்சு
தலைவர் / பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு